பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

மார்ச் 2026

நோன்புப்
பெருநாள்
சிறப்பிதழ்



## மின்மினிப் பூச்சிகள் மின்னலடிக்க
## பொன்னொளி பூத்தது மனவானில்

**நேர்காணல்**

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – மார்ச் 2026

651

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறுாக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சொடு நெஞ்சம்

அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்கு அன்பான வணக்கம்!

அன்பான வாசகர்களுக்கு தமிழ்நெஞ்சத்தின் வணக்கம்! எல்லோரும் நலந்தானே? கடந்த அக்டோபர் மாதம் ஆரம்பித்த கடுங்குளிரின் போர்வைக்குள் தான் இன்னும் பிரான்சு மக்களாகிய நாம் வளைய வருகிறோம். புனித ரமழான் நோன்பும் ஆரம்பித்து நடுப் பத்தை அண்மித்திருக்கும் இவ்வேளையில், கடமையே கண்ணாக, இம்மாத இதழுடன் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி!

நாம் இருப்பது எவ்விடமாக இருப்பினும், பெரியோர் முதல் சிறியோர் வரை மார்க்கக் கடமைகளை கடைப்பிடிப்பதிலும், நன்மைகளைக் கைக்கொள்வதிலும் நாம் பின்னிற்பதில்லை.எந்த சீதோஷ்ண நிலையிலும் , ஐவேளைத் தொழுகை, நோன்பைப் போலவே ஏனைய கடமைகளையும் திருப்திகரமாகவே பூர்த்தி செய்கிறோம். அதைவிட மிக முக்கியமாக மனிதநேயத்துடன் ஆற்றவேண்டிய பணிகளையும் முன்னெடுக்க நான் தவறுவதில்லை. இஸ்லாமிய நெறிகளையும், கடமைகளையும் , நோன்பின் மாண்பையும் அறிந்தவனாக இருந்தாலும், தொலைவில் இருந்து பார்க்கும் ஒருசிலர் அழுக்காறு மிகுந்த பார்வையை வீசிப் பேசும் இழிசொற்களைப் புறந்தள்ளி, என் ஓடுபாதையில் தீவிரமாக ஓடிக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றுக்கும் இறைவன் போதுமானவன்.

எம்மதமும் சம்மதமாய், ஐக்கியமாய் ஆக்கங்கள் தேர்ந்து இதழை உருவாக்கினாலும் அதிலும் குறை சொல்லும் ஒருசிலரின் மனக்குறை போக்க, இவ்விதழை, நோன்புப் பெருநாள் சிறப்பிதழாகத் தருவதில் பெருமகிழ்ச்சி! ஒரு திங்கள் நோன்பிருந்து, கண்ணியம் காத்துக் கொண்டாடப் போகும் ஈதுல்பித்ர் பெருநாளானது அனைவரின் மன இருளைப் போக்கி மகிழ்ச்சி தர வேண்டியவனாக, இதழ் கொண்டு வந்த அத்தனை அம்சங்களையும் சுவைத்து, உங்கள் கருத்துக்களால் அலங்கரிக்க வேண்டுகிறேன்.

இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களுடன்

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# வெண்பா உரைவீச்சு

அமின் : -

.

என்னசெய் கின்றாய்

எனதுநண்பா; ஆயிற்றே

உன்னுடன் பேசி

ஒருமாதம் - உன்னுடைய

அம்மா நலந்தானா

அப்பா நலந்தானா

சும்மாதான் நான்கேட்டேன்

சொல்

.

ஏடி : -

.

எல்லாரும் நன்றாய்

இருக்கின்றோம் நீண்டநாளாய்

இல்லாமல் போனீர்கள்

எங்குசென்றீர் - சொல்லாமல்

நாடுவிட்டு நாடேனுஞ்

சென்றீரா உங்களைநான்

தேடுவேன் அன்றோ

தினம்.

.

அமின் : -

.

நாடுவிட்டு நாடெல்லாம்

நான்செல்ல வில்லையய்யா

வீடுதான் என்றும்

விரும்புவேன் - தேடுகிற

உங்கள்போல் நண்பர்கள்

ஊரில் இருக்கிறார்கள்

அங்குதான் என்நட்பே

ஆம்.

.

ஏடி : -

.

தேர்தல் வருதாமே

தேறி முதல்நிலையில்

யார்வருவார் மீண்டும்

இனியாள - ஊர்முழுக்க

வண்ணப் பதாகையும்

வாழ்கயெனுங் கோஷமிட்டும்

என்ன முடிவுவரும்

இங்கு?

.

அமின் : -

.

ஆற்றியதே னீர்மேலும்

ஆறும் முனதாக

ஊற்றிக் குடியுங்கள்

ஓர்கோப்பை - நேற்றுவரை

ஆட்சி புரிந்தவரால்

ஆன பயனோகை

யூட்டுதான் எங்கும்

உணர்.

.

ஏடி : -

.

நேற்றுவரை உள்ளதை

நித்தம் நினைக்காமல்

வேற்றாளைக் கொண்டுவர

வேண்டுமன்றோ - ஈற்றுவரை

ஆட்சி புரிபவரை

அப்படியே வைத்திருந்தால்

நாட்டுநிலை நாசம்தான்

நம்பு.

.

# டீக்கடை பெஞ்ச்

அமின் : -

.

யார்யார்க்கோ காசுதந்து
எப்படியோ ஆட்சிக்குத்
தேர்தல் சமயத்தில்
தேறிவந்து - ஊர்முழுக்க
மக்கள் மனதை
மயக்கி இடம்பிடித்து
உக்காரு கின்றார்
உணர்.

.

ஏடி : -

.

எல்லாம் படித்தவர்கள்
எல்லாந் தெரிந்தவர்கள்
சில்லறைக் காகபோய்ச்
சிக்கலாமா - நல்லவர்கள்
யாரென்று அறியாமல்
இங்கெல்லாம் வாழும்உன்
ஊரென்ன ஊராம்
உரை.

.

அமின் : -

.

ஐந்தாண்டு காலத்தின்
ஆட்சியில் மக்களுக்குச்
செய்ததொன்றும் இல்லை
சிறப்பாக - பொய்யறிந்த
எல்லார்க்கும் இங்கே
இதுதான் இலாபமென்று
சில்லறையை வாங்குகிறார்
சேர்த்து.

.

ஏடி : -

.

அப்படியே வாங்கி
அடிமையென ஆகிவிட்டால்
எப்படிமுன் னேறும்
இனமெல்லாம் - தப்பென்றால்
தப்பென் றுரைத்துத்
தகுந்த நிலையேற்றம்
எப்போதும் வாராதா
இங்கு?

.

அமின் : -

.

தேர்தல் நெருங்கிவிட்டால்
திட்டம் பலப்பலவாய்
ஊர்முழுக்கப் பேசி
உளம்மயக்கி - யார்யாரோ
வந்தமர்ந்துக் கையூட்டை
வாங்கிப் பிழைக்கின்றார்
இந்தநிலை இன்றுவரை
இங்கு.

.

ஏடி : -

.

இந்தநிலை மாற்ற
எவரும்முன் வாராமல்
மந்தமாக வேயிருந்தால்
மாற்றங்கள் - வந்திடுமா
நம்மில்யா ரேனும்
நமக்காக நிற்கவைத்தால்
செம்மையாகும் நாடே
செழித்து.

.

# வெண்பா உரைவீச்சு

அமின் : -

.

அப்படியே நின்றால்
அவரென்ன சாதியென்று
தப்பாகப் பார்க்கும்
தமிழகம் - எப்போதும்
வாக்களிக்க சாதி
வகையினைப் பார்ப்பதிங்கே
போக்காய்ப் பழகியது
போ.

.

ஏடி : -

.

இப்போக்கை நம்மால்
இனிவிலக்க ஏலாதா
இப்போக்கில் தான்நாம்
இருப்போமா - எப்போதும்
கள்வரின் ஆட்சிதான்
காலம் முழுக்கவென
உள்ளம் வருந்துமா
ஓது?

.

அமின் : -

.

மாற்றலாம் ஐயாநாம்
மாற்றலாம் மாற்றினால்அம்
மாற்றத்திற் கேற்ற
மகிழ்வில்லை - ஏற்றங்கள்
வேண்டுமென எல்லாரும்
வேண்டினால் மட்டுமே
யாண்டும் மகிழ்வாகும்
இங்கு.

.

ஏடி : -

.

சொல்வதெல்லாம் பார்த்தால்
சுமையைக் குறைப்பதற்கு
இல்லை வழியெனநான்
எண்ணுகிறேன் - தொல்லுலகில்
வெவ்வேறு நாடுகளின்
வெற்றியைக் காணுங்கால்
இவ்வாறு இலையே
என.

.

அமின் : -

.

உண்மைதான் ஐயா
உலகைநாம் கண்டுநம்
மண்ணைக்கண் டாலே
மயக்கம்தான் - என்றென்றும்
இந்நிலையை மாற்றுதற்கு
இந்தத் தலைமுறைக்கு
எந்த வழியும்
இலை.

.

ஏடி : -

.

இல்லையென நாமுமிங்கே
இப்படியே விட்டுவிட்டால்
தொல்லைதான் நாளும்
தொடர்ந்துவரும் - எல்லாருக்கும்
நல்ல விழிப்புணர்வை
நாம்புகட்ட ஓர்வழியைச்
சொல்லுங்கள் நீங்கள்
சுரந்து.

.

# டீக்கடை பெஞ்ச்

அமின் : -

.

எண்ணத்தில் வந்துவிட்டால்
  யோசனை; உங்களிடம்
அன்றைக்கே சொல்கிறேன்
  ஐயாநான் - இன்றையநாள்
உங்களுடன் தேனீர்
  உடனருந்தி நான்மகிழ்ந்தேன்
சந்தித்துப் பேசுவோம்
  சார்ந்து.

.

ஏடி : -

.

நண்பா வருகிறேன்
  நாளைநாம் சந்திப்போம்
இன்று விடைபெற்(று)
  எழுகின்றேன் - உன்னுடைய
செல்பேசி எண்ணைத்தா
  சேர்ந்துரை யாடுதற்குச்
செல்லலாம் எங்கேனும்
  சேர்ந்து.

---

## பெண்மையைப் போற்றுவோம்

தாய்மை தருகின்ற தாயவளைப் போற்றியும்
வாய்மை வழிநிற்றல் வாழ்வு .

தாரமாய்த் தங்கையாய்த் தாங்குகின்ற அக்காளாய்ப்
பாரதனில் நிற்பவளைப் பார் .

பாரினிற் பெண்மையின் பாதந் தொழுதலும்
ஊரினில் வேண்டும் உணர் .

பெண்மையைப் போற்றினாற் பேறுகள் கிட்டிடுங்
கண்கூடக் காண்போம் கரு .

கருத்துடன் மாதர் கருவறையைக் காத்திட
உருபெறும் மானுடம் ஊன்று .

சரஸ்வதி பாஸ்கரன்



# வாசல் வரும் வசந்தம்

## வஃபீரா வஃபி

காலையிலிருந்து பசியோடு வயிற்றைப் பிடித்தபடி சுருண்டு படுத்திருந்த மகள் ஸமீனாவையே யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சுலைஹா. அவள் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பவள். கணவரின் மறைவுக்குப் பிறகு சின்ன மகளுடன் தனித்தே வாழ்ந்து வருகிறாள். பாழாய் போன காய்ச்சல் சில நாட்களாக அவளை படுக்கையில் தள்ளிவிட வறுமை அங்கு கோரதாண்டவம் ஆடத் தொடங்கியிருந்தது.

ஸமீனா 'உம்மா பசிக்குதும்மா! காலையிலயும் எதுவுமே சாப்பிடல்லயே உம்மா!'

சுலைஹா 'கொஞ்சம் பொறுங்க மகள்! ஏதாவது செய்து தாறன்' என்று சொல்லிவிட்டு மனதுக்குள் 'யா அல்லாஹ்! வீட்டுல எதுவுமே இல்ல. இந்த நிலைமையில நான் என்னதான் செய்வேன்? யா அல்லாஹ், நீயே போதுமானவன்' என சொல்லிக்கொள்கிறாள்.

அப்போது அங்கே பக்கத்து வீட்டு அம்ரத் உம்மா வந்து சேர்கிறார்.

வரவேற்றாள் சுலைஹா 'அஸ்ஸலாமு அலைக்கும் தாத்தா! வாங்க, வாங்க!'

அம்ரத் உம்மாவும் 'வ அலைக்கு முஸ்ஸலாம்! இந்த சாப்பாட்டை குடுத்துட்டு போக தான் வந்தேன். கொஞ்ச நாளாவே உங்களுக்கும் சுகமில்ல. நாள் கூலிக்கு வேலை செய்ற நீங்களும் மகளும் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீங்க என்ட யோசனையில இத எடுத்துட்டு வந்தன். ஸமீனாட வாப்பா ஹயாத்தோட இருக்குற காலத்துல எவ்வளவு உதவி செய்து இருக்குறீங்க. பக்கத்து வீட்டுல இருந்து கொண்டு கவனிக்காம இருந்தா எப்பிடி?'

இறைவனின் கருணையை நினைத்து மனதுக்குள் 'அல்ஹம்துலில்லாஹ்!' என்றவாறு சுலைஹா 'ஜஸாக்கல்லாஹு ஹைர் தாத்தா! அல்லாஹ் கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிப்பதாக கேள்விப்பட்டிருக்கன். அது உண்மை என்டு இன்டைக்கு விளங்கிட்டு. உங்களுக்காக நானும் மகளும் ஐவேளைத் தொழுகையிலும் துஆ செய்வோம்' என்று நா தழுதழுக்க சொன்னாள்.

அம்ரத் உம்மா சாப்பாட்டை கொடுத்துவிட்டு திரும்பிப் போனதும் மகள் ஸமீனா 'வாப்பா மௌத்தானதுல இருந்து எங்களுக்கு ஏன்மா இவ்வளவு கஷ்டம்? வாப்பாட தங்கச்சி கிட்ட ஏதும் ஒதவி கேட்கலாம் தானே உம்மா! நா வேணும் என்டா சஹா கிட்ட சொல்லவா?' என்று தாயிடம் வினவுகிறாள். சஹா ஸமீனாவின் வாப்பாவின் தங்கை பேகத்துடைய மகள்.

சுலைஹாவோ சட்டென மறுத்து 'வேணாம்மா! நம் கஷ்டம் நம்மோட போகட்டும். அவங்களப் போல சில பணக்காரங்க மனசு இரும்புக் கோட்டை மாதிரி. அந்த கதவுகள் வருஷத்துக்கு ஒருக்கா ரமழான்ல மட்டும் தான் திறக்கும்

ஸதகா, ஸக்காத் குடுக்க. நம் கைதான் நமக்கு உதவி. அல்லாஹ் கிட்டயே உதவி கேட்டு பிரார்த்தனை செய்வோம்‘ என மகளை சமாதானப் படுத்துகிறாள்.

பேகத்தின் வீட்டிலும் தாய் மகளுக் கிடையில் ஒரு சம்பாஷணை நடக்கிறது.

சஹா தன் தாயிடம் ‘உம்மா, நாங்க ஸமீனா வீட்டுக்கு போய் எவ்வளவு காலம்! மாமா மையத்துக்கு போனதுக்கு பொறவு எப்பவுமே தலைநோன்புக்கும் நோன்பு 27 லயும் தான் கூட்டிப் போறீங்க. ஏன் உம்மா, எங்க கிட்டதான் நெறைய சல்லி இருக்கே.கொஞ்சம் அவங்களுக்கு ஹெல்ப் பண்ணினா என்ன‘ தலையை சரித்து கண்களில் கருணை பொங்க கேட்டாள்.

அதற்கு பேகமோ ‘இங்க பாருங்க சஹா! இதெல்லாம் நீங்க பேசவே கூடாது. எனக்கு நீங்க க்ளாஸ் எடுக்க வேணாம். எல்லாம் எனக்கு தெரியும். இதோட இந்த பேச்சை விடுங்க‘ என பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறாள்.

சின்ன மகள் ஸமீனாவுக்கு வயது ஏழான போதிலும், உம்மாவின் கஷ்டங்கள் புரியாமலில்லை. அவள் ‘உம்மா, நானும் ஒங்களுக்கு ஒதவியா வேலைக்கு வரவா உம்மா?‘ என்று வாஞ்சையுடன் கேட்க,



பதறிப்போனாள் சுலைஹா.

'என்ன மகள் பேசுறீங்க நீங்க? கஷ்டம் எல்லாருக்கும் வாறதுதான். அதுக்காக படிப்பை விட்டுடுறதா? நீங்க படிச்சா தானே உங்கட எதிர்காலமே நல்லா இருக்கும். அல்லாஹ் எங்களுக்கொரு நல்ல வழிய காட்டுவான்' என்று சின்ன மகளின் தலையை வருடி விடுகிறாள்.

மீண்டும் வாசலில் நிழலாட நிமிர்ந்து பார்க்கும் சுலைஹா 'அட! அம்ரத் தாத்தாவா? அஸ்ஸலாமு அலைக்கும்! வாங்க வாங்க உட்காருங்க'என வரவேற்ற படி ஒரு நாற்காலியை கொடுக்க, சுலைஹாவும் பதிலுக்கு 'வ அலைக்கு முஸ்ஸலாம்' என்றபடி அமர்ந்து கொண்டு..

'இந்த பேக்குல கொஞ்சம் சில்லறை சாமான்கள் இருக்கு. புள்ளைக்கு ஆக்கி குடுங்க' எடுத்து நீட்ட, தயக்கத்துடன் வாங்கிக் கொண்ட சுலைஹா 'நீங்களும் கஷ்டத்துல தான் இருக்குறீங்க. அப்பவும் உங்கட இந்த உதவி செய்ற பண்புக்காக அல்லாஹ் உங்களுக்கு மேலும் பரக்கத் செய்யட்டும்' என கைகளை ஏந்தி துஆ செய்து கொண்டாள்.

அம்ரத் உம்மா 'தேவைக்கு இல்லாத உதவி தேவையில்லாத நேரம் கிடைச்சா அது செல்லாக்காசுக்கு சமம். நாம இருக்கு றதை வச்சி முடிஞ்சளவு உதவுவமே' எனச் சொல்ல, சுலைஹா 'நீங்க சொல்றது நூத்துக்கு நூறு உண்மைதான்' என ஆமோதித்தாள்.

'ரமழான் மாசம் மட்டுமே ஈகையின் கதவுகளைத் திறந்து வைத்திருப்பதில் என்ன புண்ணியம்?

பக்கத்து வீட்டில் ஒருவன் பசித்திருக்க தான் மட்டும் புசித்திருப்பவன் நம்மைச் சேர்ந்தவனல்ல என்டு நம் பெருமானார் (ஸல்) அவங்க சொல்லியிருக்கிறாங்க. அக்கம் பக்கம் உள்ளவங்க பசியோட இருக்க தான் மட்டும் வயிறார உண்ணுற வங்களை அல்லாஹ்வும் வெறுக்கிறான். அதனால எம்மால என்ன முடியுமோ அதை (அது ஒரு ஈச்சம் பழமாகவே இருந்தாலும்) மனமுவந்து பசித்தவனுக்கு கொடுக்கிறதில் தான் உண்மையான ஈகையின் பலனே இருக்குது' என அம்ரத் உம்மா சொன்ன தும் சுலைஹா 'அதுவும் சரிதான். இதைத்தான் ஸமீனாட வாப்பாவும் அடிக்கடி சொல்லிட்டிருப்பார்' எனக் கண்கலங்குகிறாள்.

அம்ரத் உம்மா கையிலிருந்த ஒரு கவரை சுலைஹாவிடம் கொடுத்து 'இந்தாங்க சுலைஹா, இதுல கொஞ்சம் சல்லி இருக்கு. நீங்க ஆசைப்பட்டது போல ஊட்டோட சின்னதா ஒரு சில்லறைக் கடைய போடுங்க! கொஞ்சம் கொஞ்சமா முன்னேறிடலாம்' என் நம்பிக்கையூட்டுகிறாள்.

சுலைஹா மனதில் எழுந்த சந்தோஷ வெள்ளம் கண்களிலும் எட்டிப் பார்க்க 'ஜஸாக்கல்லாஹு ஹைர் தாத்தா! எப்படியும் கஷ்டப்பட்டு உழைச்சா, நீங்க சொல்ற மாதிரி முன்னேறிட அல்லாஹ் வழி செய்வான். இன்ஷா அல்லாஹ்! எங்களுக்கு கிடைக்கிற சின்ன லாபத்துலயும் யாராவது கஷ்டப்படுறவங்க வீட்டுல அடுப்பெரிய நம்மாலான உதவிய செய்வேன். உங்களுக்கு அல்லாஹ் றஹ்மத் செய்வானாக! ஆமீன்' எனச் சொன்னவள் மனதுக்குள் அல்ஹம்துலில்லாஹ், உன்னை நம்பினவங்களை நீ எப்பவுமே கை விட்டதேயில்லை யா அல்லாஹ்' என இறைவனைப் புகழ்ந்து கொண்டே சமையலறையில் நுழைகிறாள். இனி அவர்கள் வாசலுக்கும் வசந்தம் வரும்.



# நோன்புப் பெருநாள்

பசித்திருந்து பலன்பெற்றோம் பெருநாளென்று.
பாக்கியமே பாக்கியமே பாக்கியந்தான்.
புசிக்காத தொன்றுமட்டும் இல்லை இன்னும்
பாவமொன்றுஞ் செய்யாதே மனத்தைக் காத்தோம்
நிசியுறக்கந் தவிர்த்தெழுந்து நிலையில் நின்று
நித்தியனைத் தொழுதிறைஞ்சி பாவந் தீர்க்கக்
கசிந்துருகிப் பிரார்த்தித்தோம் தலைவா எம்மைக்
கொடுநரகந் தவிர்த்துச்சுவன் தருவா யென்றே!

இரப்பவர்க்கு இல்லையென்னா(து) அருளும் வல்லோன்
ஏந்துகரம் விடுவதில்லை வெறுமை யாக
சுரந்துகொண்டே இருக்குமவன் அருட்சு னையின்
செல்வத்தை அள்ளியள்ளிக் கொட்டிச் சேர்ப்பான்
பரிந்துரைகள் வேண்டாங்காண் பண்ண வன்பால்
பரிசுபெறப் படைத்தெம்மைக் காக்கும் வல்லோன்
சிரம்பணியும் அனைவருக்கும் ஒன்றே போல
தனதருளைப் பொழிவானோர் ஐயம் இல்லை!

தக்பீரின் முழக்கமெல்லாப் பள்ளி தோறும்
செவியினிக்கப் பேரொலிக்கும் பெருநாட் காலம்
திக்கெல்லாம் காற்றள்ளிச் செல்லும் மக்கள்
செய்தபாவம் அழிந்தமனத் திருப்தி கொள்வார்
சொர்க்கத்தின் வாடைநெஞ்சுள் மணக்கும் வல்லோன்
தருவனெனச் செப்பியதால் தீனோர் தீனின்
பக்கலினி நாமென்னும் ஓர்மைகொள்வார்
பற்றியநற் கருமங்கள் தொடரு வாரே!



காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
(ஸ்ரீலங்கா)



# ஐந்து தூண் மாளிகை அற்புத ஒளி வெள்ளம்



கடல் ஓரம் நின்று விளையாடும் சிறுவனிடம்
கடல் ஆழம் என்ன என்பதா? - ஆம்
அவனிடம் இருப்பதோ சிறுகுடுவை அதனுள்ளே
அந்நீரெல்லாம் நிரப்பு என்பதா?
மடல் எழுதத் தெரியாத மாணவன் ஒருவனிடம்
மா காவியம் தீட்டு என்பதா? - என்
மதிகுறைப் பேனாவில் ஒருதுளி மட்டுமே
மறுபடியும் எனைக் கேட்பதா?
இருப்பதோ ஆழாக்கு தானியம் அதைக்கொண்டு
எல்லோர்க்கும் விருந்து வைப்பதா? - ஆம்
ஒருதுளி மழை நீரில் உலகத்து நிலமெல்லாம்
உழுதுநான் பயிர் செய்வதா?
கண்ணிலாக் குருடனைக் கண்டுகண்டே ஒளி
கவின் பற்றி எழுது என்பதா?
கடைசி இருக்கையில் உட்கார்ந்த மாணவன்
கல்லூரி முதன்மை ஏற்பதா? - நான்
கையேந்திக் கையேந்திக் கால்வயிறு நிறப்புவோன்
கடைவள்ளல் போலாவதா? - என்
உள்ளத்தில் உள்ளகவி உருவாக்கும் திறனோதான்
ஒருதுளி; புகழ் அடங்குமா?
இருப்பினும் வல்லவன் இருக்கிறான் என்பதே
எனக்குள்ளே நந்நம்பிக்கை - அது
எடுக்கிற காரியம் நடத்திடும் முடித்திடும்
என்பதால் இப்போது பேனா என்கை!
இனிக்கின்ற கற்கண்டு எப்பகுதி யானாலும்
இனிப்பதே கொண்டிருக்கும் - நம்
எழல்மன தீன்வழி  எக்கணம் ஆயினும்
இனியபுகழ் சூடி நிற்கும்!
நற்குணப் புகழ் சிறப்பு
நான்சொல்லத் தொடங்கினால்

நாட்களும் வருடமாகும் - அதில்
வருடமே யானாலும்
முழுவதும் அடங்காது
வருவது தொடர்வ தாகும்!

## ஈமான் - கலிமா

கலிமா என்பது முதல் உருவாக்கம்
கட்டிடும் மாளிகை முதல்தூண் நெருக்கம்
நலியாதிருக்க நல்மனம் நிறைக்கும்
நம்பிக்கை மணம் வந்து வந்து சுரக்கும்
வலிமை இருந்தால் வாழ்வெல்லாம் இனிக்கும்
வாயால் சொன்னதும் வலிமை கொடுக்கும்

## தொழுகை



ஐந்துவேளை தொழுவது கடமை
அதனால் இன்பம் நிரந்தர உடைமை
எந்த வணக்கமும் இதற்கிணை இல்லை
என்பது திருமறை வரைந்திடும் எல்லை
அந்தத் தொழுகையின் சிறப்பைப் பற்றி
அரியகவிதை முழுநிலை இல்லை
எனவே தொழுகை மனத்தால் செய்வது
எல்லோரும் துவாவிற்கு இருகை ஏந்துவோம்
இந்த உலகத்தில் மனத்துள் நிறையும்
இகபர  வாழ்வின் இனிமையே தெரியும்,
தொழுகையினில் அடியவரின் இனிய உள்ளம்
தொல்லையது இல்லாது துலங்கித் தோன்றும்
அழுகைமனம் அவர்வாழ்வில் அறவே நீங்கும்
அற்புதமாம் சுவனபதி நெருங்கி நிற்கும்!
தொழுவோம் வாழ்வில் தூய்மை நிலைபெற
தொடர்வோம் சொர்க்கம் நம்மில் வலம்வர!

## நோன்பு

சொர்க்கத்தின் வாசலை எளிதாய்த் திறக்கும்
சோர்வு பிணிகள் வாராது தடுக்கும்
நற்கருமங்கள் நமக்குள் நிறைக்கும்
நம்பகைக் குணங்களை விரட்டி யடிக்கும்
அற்புத ரமலான் ஆற்றலைக் கொடுக்கும்
அடிமனத் துள்ளும் மாற்றத்தை விளைக்கும்
கற்பது அல்ல கடைபிடித்தொழுகுதல்
காட்டும் நோன்பே கவிதையும் நிறைக்கும்.
நிசம்நான் சொல்வது நிகழ்த்தும் சாதனை

## ஜக்காத்

உயிர்த்துடிப்பு உன்னதமாய் ஆக்கிவைக்கும்
உயர்குணமாம் ஈகைதான் உயர்த்தி வைக்கும்!
கொடுக்கும் ஜக்காத் ஈகையின் வடிவம்
கொள்கை மறுமைக்கு விண்ணப்பப் படிவம்
தடுக்கும் தலைக்குமேல் வருகிற துன்பம்
தனிப்பெருங் கருணை குணத்தின் உருவம்
படுக்கும் காலத்தும் பலத்தைக் கொடுக்கும்
பல்லுயிர் காத்திடும் பண்புஇதில் அடக்கம்



### ஹஜ்

அண்ணலார் பிறந்தமண் அடைவது கடமை
அமல்கள் நிறைத்து வாழ்வது பெருமை
விண்ணவர்கூட வாழ்த்துவர் நம்மை
வேறென்ன வேண்டும் இதைவிட நன்மை
கன்று பசுவை நாடுதல் போலவே
கஃபாவை நாடிக் கடமையை முடிப்போம்
அன்று பிறந்த பாலகர் போலவே
அத்தனை குணத்திலும் உத்தமர் ஆவோம்

வெள்ளை உடைதரும் தத்துவ விளக்கம்
விரும்பி ஏற்று முத்தாய் ஒளிர்வோம்
இன்று வாய்ப்புளோர் இப்போதே செய்வோம்
இல்லை யென்றாலோ நிய்யத்து வைப்போம்

மாளிகை வெளிச்சம்
மனத்தின் இருளை
இல்லாமல் ஆக்கிடும் உண்மை - இதை
ஏற்று உளத்தினில்
இனிய தீன் நெறியை
ஏற்பதே உயிருக்கும் நன்மை.


**கவிப்பேரொளி நீரை அத்திப்பூ**
சே.அப்துல் லத்தீப்
அஞ்சல்பயிற்சி மைய மேனாள் உதவி இயக்குநர்
நீர்முளை அஞ்சல் 614711
திருக்குவளை வட்டம், நாகை மாவட்டம்






# அல்லாஹூ அக்பர்

அல்லாஹு அக்பர் அகத்தே ஒலிக்குமட்டும்
எல்லாமும் இங்கே இனிதாக - நல்லவைகள்
மட்டும் இருக்கின்ற மாமறையாம் குர்ஆனைத்
தொட்டுப் படிப்பீர் தொடர்ந்து.

.

**கலிமா...**

.

தூயவன் அல்லாஹ் துணையாக எங்களுக்கு
நேயமுள்ள தூதர் நபிமுகமத் - போயமர
ஏற்ற மனத்தால் எழிலோடு வாழ்ந்திடுவோம்
ஈற்றுவரை வாழ்வில் இனித்து.

.

பைய எழுந்து பனிவிரட்டி உள்ளொளியை
வெய்யோன் கொடுத்து விளக்குதல்போல் - மெய்முழுக்க
எல்லா நிலைகளிலும் என்னுள் ஒளிகொடுக்க
அல்லாஹ்தான் நாளும் அறி.

.

**தொழுகை...**

.



மெய்யிற் புலனைந்தும் மிக்குடைய பூதங்கள்
வையத்தில் ஐந்தும் வகுத்துவைத்த - பொய்யில்லா
அல்லாவுக் காகதினம் ஐந்து முறைதொழுதால்
எல்லாம் விலகும் இனி.

.

### ஜகாத் (தானம்)

.

எல்லாம் கொடுத்தாலும் ஏழைச் சிரிப்பில்தான்
அல்லாஹ் அருளே அதீதமென்று - செல்வங்கள்
தன்னை அனைவருக்கும் தானங் கொடுத்தால்தான்
உன்னை விரும்பும் உலகு.

### நோன்பு....

.

அல்லிற் பசிபோக்கி ஆதவனைக் கண்டவுடன்
இல்லில் அருள்சேர் இறைவணங்கி - நல்லொழுக்காய்
வான்பிறையோன் ஈன்றளித்த வாழ்வைச் சிறப்பிக்க
நோன்பிருத்தல் நன்றியென நோக்கு.

.

### ஹஜ்... புனிதப் பயணம்...

.

நான்கு கடமைகளை நன்றே முடித்தபின்னே
வேண்டும் இறைபள்ளி வாகுடனே - தோன்றியே
எல்லா நலத்தோ(டு) இனிதாய் வரம்வாங்கச்
செல்வோம்நாம் ஹஜ்ஜுக்குச் சேர்ந்து.

.

உள்ளவரை தாயை உடன்வாழும் தந்தையை
வள்ளலாய் எண்ணி வரித்தலுடன் - உள்ளத்தில்
எள்ளளவுங் மாசற்றே ஏகனையும் நெஞ்சிருத்தி
துள்ளி மகிழ்வோம் துணிந்து.



தமிழ்நெஞ்சம் அமின்

# திருநாளே!



வருக பெரு நாளே!
வாழ்வின் நந்நாளே!

ஏகனருள் சூழ்ந்த
அருள் பொங்கும் திருநாளே!

சொந்த பந்தமெல்லாம்
இணைந்து வாழவைக்கும்
இன்பம் தரும் நாளே!

வல்லோன் கிருபைகளை
அள்ளிக் கொட்டிடும்
ஆண்டின்
பொன் நாளே!

ஏழை பசி உணர்த்தி
அண்டை அயலாரென
ஒன்றறக் கலந்து வாழ
உளத்தூய்மை பெருகிட
ஊக்கமளித்த நாளே!

மூபத்து பசித்திருந்து
நடுநிசியில் விழித்திருந்து
நல்லமல்கள் பல செய்திட
வரமாக வந்த நாளே!

அண்ணல் நபியெங்கள்
காட்டிச் சென்ற பல
நல்லமல்கள் எல்லாம்
தவறாது செய்து முடிக்க
தார்ப்பரியமாய் உதித்த நாளே!

நற்குணங்கள் ஓங்கி
துர்க்குணங்கள் ஒழிந்து
மறையின் வசனங்களை
மனதில் பதியவைத்து
பக்குவம் நிலை கொள்ள
நற்பாக்கியமாய்
வந்த நாளே!

பல கடைகளேறி
புத்தாடை உடுத்தி
புதுக்கோலம் கண்டு
புது வாழ்வு வாழ்ந்திட
வந்திட்ட திருநாளே!

பலகாரம் விதவிதமாய்
கண்பாயும் திசையெங்கும்
பலவாறு காட்சியளிக்க
மலர்ந்திட்ட பெருநாளே!

வருக பெருநாளே!
வாழ்வின் நந்நாளே!

ஸஞ்ஸீதா
முஜீப் ரஹ்மான்
புல்மோட்டை





# புனித நோன்பு இறைவனையும் மனிதநேயத்தையும் இணைக்கும் பாலம்.

அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் ரப்புல் ஆலமீன் அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உரித்தாகுக! அவன் நமக்கு ஈமான் எனும் பேரொளியையும், ரமலான் எனும் அருட்கொடையையும் வழங்கியதற்காக நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

அகிலத்தின் அருட்கொடை, நம் உயிரினும் மேலான நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார்கள் மற்றும் தோழர்கள் (ஸஹாபாக்கள்) அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் நிலவட்டுமாக!



**கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட்**
மருதமுனை

இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமான ரமலான் மாதத்தில், உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் நோன்பு நோற்பதைக் கடமையாகக் கொண்டுள்ளனர்.

இது வெறும் பசியோடும் தாகத்தோடும் இருப்பதல்ல மாறாக, உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் ஒரு ஆன்மீகப் பயணமாகும்.

**நோன்பின் நோக்கம்:**

திருக்குர்ஆனில் நோன்பு குறித்துக் கூறும்போது, ‘உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது; அதன் மூலம் நீங்கள்

இறையச்சம் உடையவர்களாக ஆகலாம்' என்று இறைவசனம் கூறுகிறது.

**நோன்பின் முக்கிய நோக்கங்கள்:**

- **இறையச்சம் (தக்வா):** இறைவனுக்காகத் தனது அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் நீரைத் துறப்பதன் மூலம் மனக்கட்டுப்பாட்டை வளர்த்தல்.
- **பரிவுணர்வு:** பசியின் கொடுமையை அனுபவித்து உணர்வதன் மூலம், ஏழைகள் மற்றும் வறியவர்களின் கஷ்டங்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உதவும் மனப்பக்குவத்தைப் பெறுதல்.
- **ஒழுக்கம்:** தீய சொற்கள், கோபம் மற்றும் தவறான செயல்களில் இருந்து விலகி நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- **நோன்பின் நடைமுறைகள்:** நோன்பு என்பது அதிகாலை (ஸஹர்) முதல் சூரியன் மறையும் (இப்தார்) வரை கடைப்பிடிக்கப்படுகிறது.
- **ஸஹர்:** சூரிய உதயத்திற்கு முன் உண்ணப்படும் உணவு. இது நோன்பு நோற்பதற்கான ஆற்றலை வழங்குகிறது.
- **தர்மம் (ஜகாத்/சதகா):** ரமலான் மாதத்தில் அதிக அளவில் தான தர்மங்கள் செய்வது சிறந்தது. குறிப்பாக ஏழைகளுக்கு 'பித்ரா' வழங்குவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- **வணக்கம்:** ஐவேளை தொழுகையுடன், இரவு நேரங்களில் 'தராவீஹ்' என்ற சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டு குர்ஆன் ஓதுவது வழக்கம்.
- **அறிவியல் மற்றும் உடல்நல நன்மைகள்:** ஆன்மீக ரீதியாக மட்டுமின்றி, உடல் ரீதியாகவும் நோன்பு பல நன்மைகளைத் தருகிறது.
- **உடல் சுத்திகரிப்பு:** செரிமான மண்டலத்திற்கு ஓய்வு கிடைப்பதால் உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேறுகின்றன.
- **மன உறுதி:** ஆசைகளைக் கட்டுப் படுத்துவதன் மூலம் மன வலிமை மற்றும் தன்னம்பிக்கை அதிகரிக்கிறது.
- **சர்க்கரை அளவு:** ரத்தத்தில் உள்ள சர்க்கரை மற்றும் கொழுப்பின் அளவைக் கட்டுக்குள் வைக்க உதவுகிறது.
- **நோன்பு என்பது** ஒரு மனிதனைப் புனிதப்படுத்துகின்ற பயிற்சிப் பட்டறையாகும். பசியையும் தாகத்தையும் பொறுத்துக் கொள்வது போலவே, சினம், பொறாமை மற்றும் பொய்களைத் தவிர்ப்பதே உண்மையான நோன்பாகும்.
- இந்த ஒரு மாதப் பயிற்சி ஒரு மனிதனை ஆண்டு முழுவதும் நல்வழியில் நடக்கத் தூண்டுகிறது.
- நோன்பு என்பது தனிமனித ஒழுக்கம் சார்ந்தது மட்டுமல்ல, அது ஒரு வலுவான சமூகப் பிணைப்பையும் உருவாக்குகிறது.
- கூட்டு இப்தார் நிகழ்வுகள்: ஜாதி, மத பேதமின்றி நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து இப்தார் (நோன்பு திறக்கும் நிகழ்வு) விருந்து அளிப்பது, மக்களிடையே நல்லிணக்கத்தையும் அன்பையும் வளர்க்கிறது.
- **சமத்துவ உணர்வு:** ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவரும் ஒரே நேரத்தில் பசியை அனுபவிப்பதும், ஒரே நேரத்தில் உண்பதும் மனிதர்களிடையே சமத்துவத்தை நிலை நாட்டுகிறது.
- **பகிர்ந்துண்ணும் பண்பு:** தன்னிடம்

உள்ள உணவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் 'தான் மட்டும் வாழ வேண்டும்' என்ற சுயநலம் மறைந்து, 'பிறரும் வாழ வேண்டும்' என்ற பொதுநலம் பிறக்கிறது.

- **உளவியல் ரீதியான மாற்றங்கள்:** நோன்பு ஒரு மனிதனின் மனதை அமைதிப்படுத்தும் ஒரு கருவியாகச் செயல்படுகிறது.
- **பொறுமை (ஸப்ர்):** பசியையும் தாகத்தையும் நீண்ட நேரம் பொறுத்துக்கொள்வது, வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளும் மன வலிமையைத் தருகிறது.
- **தீய பழக்கங்களிலிருந்து விடுதலை:** புகைபிடித்தல், தேவையற்ற வீண் பேச்சுக்கள் போன்ற தீய பழக்கங்களைக் கைவிட இந்த ஒரு மாதப் பயிற்சி மிகச்சிறந்த வாய்ப்பாக அமைகிறது.
- **மன அழுத்தம் குறைதல்:** தியானம் போன்ற இறைவணக்கங்களில் ஈடுபடுவதால், மன அழுத்தம் குறைந்து ஆழ்ந்த மன அமைதி கிடைக்கிறது.
- **ரமலான் மாதத்தின் சிறப்பு:** லைலத்துல் கத்ர் ரமலான் மாதத்தின் கடைசி பத்து நாட்களில் 'லைலத்துல் கத்ர்' எனப்படும் கண்ணியமிக்க இரவு வருகிறது இது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது என்று போற்றப்படுகிறது.
- இந்த இரவில் இறைவனிடம் பாவமன்னிப்பு கோருவதும், பிரார்த்தனைகளில் ஈடுபடுவதும் ஒரு முஸ்லிமின் வாழ்நாள் இலக்காகக் கருதப்படுகிறது.
- **ஈகைத் திருநாள் (ஈதுல் ஃபித்ர்):** முப்பது நாட்கள் நோன்பிருந்து, தன்னைக் கட்டுப்படுத்தி, இறை வழியில் நின்றதற்கான வெற்றிக் கொண்டாட்டமே 'ஈதுல் ஃபித்ர்' எனப்படும் பெருநாள் ஆகும்.
- **பெருநாள் அன்று:** புத்தாடை அணிந்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வர்.
- **ஈகை (பித்ரா):** ஏழை எளியவர்கள் அன்று பசியால் வாடக்கூடாது என்பதற்காக, பெருநாள் தொழுகைக்கு முன்பே தானியங்களோ அல்லது அதற்குரிய தொகையையோ வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது இதுவே இஸ்லாம் போதிக்கும் உண்மையான சமூக நீதி.

சுருக்கமாகச் சொன்னால், நோன்பு என்பது வயிற்றுக்குக் கொடுக்கும் ஓய்வு மட்டுமல்ல, அது ஆத்மாவிற்குத் தரும் புத்துணர்ச்சி.

ரமலான் மாதத்தில் விதைக்கப்படும் நற்பண்புகள், அந்த ஒரு மாதத்தோடு முடிந்துவிடாமல் வாழ்நாள் முழுவதும் ஒரு மனிதனை நல்வழிப்படுத்தும் ஒளியாகத் திகழ்கிறது.

இந்த ரமழான் மாதத்தை நாமும் அடைந்து அதில் நல்ல பல நற்கிருபைகள் செய்து அதன் பூரணமான நன்மைகளை அடைந்து நோன்பின் ஊடாக சொர்க்கத்தையும் அடைந்து கொள்ள வல்ல இறைவன் அருள் புரிவானாக.



# ரமழானும் தனிமனித உருவாக்கமும்

ரமழான் பல்வேறு இலக்குகளில் மிக முக்கியமான இலக்கு ஒரு சிறந்த தனிமனித உருவாக்கத்தை மேற்கொள்வதாகும். ரமழான் மாதத்தில் நோன்பு தோற்றவர்கள் நிச்சயம் ஒரு முஸ்லிமாகத்தான் இருக்க முடியும்.இருந்த போதிலும் ஒரு முஸ்லிம் சடவாத சிந்தனையோடு ரமழான் வந்துவிட்டது எனவே,நோன்பு நோற்பது வழமையாகி விட்டது என்பதற்காக வெறுமனே நோன்பு நோற்றால் மட்டும், ரமழான் எதிர்பார்க்கும் மாற்றத்தை அடைய முடியாது என்பதே உண்மையாகும்.



ரமழான் ஒரு தனிமனிதனைச் செவ்வைப் படுத்துவதற்கான அத்தனை படிமுறைகளையும் உள்ளடக்கிய மாத மாகும்.மனித உடல் பலத்தை நோய்நொடி யின்றி சீரமைப்பது முதல் ஆன்மீகப் பலத்தினூடாக இவ்வுலக வாழ்வை நகர்த்திச் செல்வதற்கான அத்தனை சிறப்பம்சங்களை யும் தன்னகத்தே பொதித்து படி முறையாக வழிநடத்திச் செல்கின்றது. உடலும் உள்ளமும் இணைந்தே இறை சட்டங் களுக்குக் கட்டுப்படும் தன்மையை உருவாக்கிறது.நோன்பை அடிப்படையாக் கொண்டு அதற்குத் துணையாக அமையும் நபிலான வணக்கங்கள் இத்தகைய பணியைச் செய்கின்றது. இரவு வணக்கங்களும், குர்ஆனிய வரிகளும் ஒரு முஸ்லிமை பயிற்றுவித்து வெளி உலகிற்கு அனுப்புகிறது.

இதனை இமாம் ஹஸனுல் பன்னா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

தனிமனித உருவாக்கத்தின் முதல் பரப்பு ஒரு சிறந்த முஸ்லிமை உருவாக்குதல் என்பதாகும். இந்த முஸ்லிமை அடையாளப்படுத்தும்போதுதான் இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்கள் பத்துப் பண்புகள் குறித்துப் பேசினார்கள்.

1. பலமான உடலும்
2. உறுதிமிக்க பண்பாடுகளும்
3. ஆழ்ந்தசிந்தனையும்
4. சுயமாய் உழைக்கும் திறனும்

5. மாசற்ற அகீதாவும்
6. குறைபாடுகளற்ற இபாதாவும்
7. உளப்போராட்டமும்
8. ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கையும்
9. நேரத்தை உச்ச பயன் அளிக்கும் வகையில் பயன்படுத்தலும்
10. பிறர்க்குபயனளித்தலும்

இந்தப் பத்துப் பண்புகளையும் கொண்ட ஒரு தனி மனிதனால் தான் சமூகத்தில் மாற்றத்தைஏற்படுத்தமுடியும். ஒரு தனிமனித உருவாக்கத்தில் ரமழானின் அருள் மிகு இரவுகளைப் பயன்படுத்த எமது ஸலபுஸ்ஸாலிஹீன்களின் வழிமுறை எமக்கு முன்னுதாரணமாக அமையலாம். அவர்கள் இரவை மூன்று பகுதிகளாக பிரித்து நேரத்தைத் திட்டமிட்டுச் செயற் படுத்தினார்கள்

- முதல் பகுதி-தூக்கம்
- இரண்டாம் பகுதி - நின்று வணங்குதல்
- மூன்றாம் பகுதி-எழுத்தாக்கங்களை மீள் வாசிப்புகச் செய்தலும், பரிசீலனை செய்தலும்.

ரமழானில் குர்ஆனிய வசனங்களுட னான பரிச்சயமும், பயிற்றுவிப்பும் அவனை வஹியின் நிழலில் வாழ வழி காட்டுகிறது. இதனை ஸஹாபாக்கள் வாழ்விலும் நாம்காணலாம்.'ஸஹாபாக்கள் பகலில் குதிரை வீரர்களாகவும், இரவில் துறவிகளாகவும் திகழ்ந்தார்கள்.' இரவு நேர இறைவணக்கமே தனிமனித உருவாக் கத்தின் அச்சாணி எனலாம். ஸஹாபாக்கள் பலரின் வாழ்வு எமக்கு எடுத்துக்காட்டாக அமைவதனைக் காணலாம். அந்த வகையில், அத்தியாயம் அல்பகறாவை மனனம் செய்ய அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எட்டாண்டுகள் ஆனது. இது பற்றி அவரிடம் வினவப்பட்ட போது, 'நான் ஒரு விசயத்தைப் படிக்கிறேன்.என் வாழ்வில் அதனைச் செயல்படுத்த முயல்கிறேன். அதைச் செயல்படுத்திய பிறகே அடுத்த வசனத்திற்கு நகர்கிறேன்.' என பதிலளித்தார்கள்.

ஒரு இறை விசுவாசி இப்படித்தான் பயிற்றுவிக்கப்பட வேண்டும். மேலோட்ட லௌஹீக வாழ்க்கையைப் பழக்கப்படுத்திய எமக்குள் மாற்றங் கள் வரவில்லை என்றால் ரமழானில் இனிய சிந்தனைகள் எம்மைச் சென்றடைய வில்லை என்பதாகவே அமையும்.

இதனைத்தான், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

'முஃமினின் தீட்சண்யமான பார்வை யைப் பயந்து கொள்ளுங்கள். அவன் அல்லாஹ்வின் நூர் எனும் பிரகாசம் கொண்டு பார்க்கிறான்.' (திர்மிதீ,தபரானி)

ரமழான் ரப்பானியத் தனிமனிர் களை உருவாக்கம் செய்யப் படுகிறது. அம்மனிதர்கள் இவ்வுலகில் ஒளியாகவே திகழ்வார்கள். ஒரு முஃமினின் தீட்சண்ய மான பார்வை வஹியின் வழிகாட்டல் களால் கிடைக்கப் பெற்ற பொக்கிஷமாகும்.

எனவே,நாம் முன்னர் கூறிய இமாம் ஹஸனுல் பன்னா அவர்களால் கூறப்படும் பத்துப் பண்புகளையும் ஒருங்கே பெற்ற தனிமனிதன் அப்பண்புகளால் குர்ஆன் சுன்னா அடிப்படையில் வார்க்கப் படுவதன் மூலம் ரமழான் எதிர்பார்க்கும் சிறந்த தனிமனிதனாக பரிணமிக்க முடியும். அதற்கேற்ற வகையில் ரமழா னைப் பயன்படுத்தி நாளைய சுவனத்தின் அனந்தரக்காரர்களாக மாறுவோமாக. ஆமீன்.....

**சேஹு மொஹும்மது பெனாஸிரா**
**(இஸ்லாஹி)**



## ரமழானே நீ வந்திடு

ரமழானே நீ
வந்திட வேண்டும்..
நல்மாற்றத்தை உள்ளத்தில்
தந்திட வேண்டும்!

தரணியிலே சிறப்பாக
வாழ்ந்திட வேண்டும்..
அல்லாஹ்வின் அருளெம்மை
சூழ்ந்திட வேண்டும்!

சிற்றின்பம் பசி தாகம்
மறைந்திட வேண்டும்..
குற்றங்கள் எமைவிட்டு
கரைந்திட வேண்டும்!

பர்லான தொழுகைகளை
தொழுதிட வேண்டும்..
கப்ருடைய நிலை எண்ணி
அழுதிட வேண்டும்!

இறை ஆணை எப்போதும்
ஏற்றிட வேண்டும்..
பெற்றோரின் சொல் தினமும்
கேட்டிட வேண்டும்!

அடக்கமாக அனைவரிடமும்
பேசிட வேண்டும்..
அன்புதனை இதயத்தில்
பூசிட வேண்டும்!

பொறுமையை வாழ்க்கையில்
காத்திட வேண்டும்..
நன்மைகளை மறுமைக்காய்
சேர்த்திட வேண்டும்!

தீனுக்காய் எதனையும்
நாம் இழக்க வேண்டும்..
அதில் திளைப்பதற்கு
உள்ளத்தைப் பழக்க
வேண்டும்!!!

தியத்தலாவ
எச்.எப். ரிஸ்னா

---

## இதயம் குளிரும் ஈகைத் திருநாள்!

வல்லோனின் ஆணை
வரமாய் நினைத்தே தினமும்
வாழ்ந்திருந்தோம்..
நோன்பின் புனிதம்
மனதினில் ஏற்றே
நன்மையின்பால் விரைந்தோம்!

இம்மை வாழ்க்கையும்
மறுமை வாழ்க்கையும்
சிறந்திட ஆசைகொண்டோம்..
உண்மையின் பாதையில்
நாம் நடப்பதற்கு
நாளும் துணிந்திருந்தோம்!

வறியோர் பலரின்
வயிற்றுப் பசியினை
நாமும் அறிந்துகொண்டோம்..
இறைமறை ஓதி
இறைவழி நடக்க
இனிதே வேண்டி நின்றோம்!

ஈகைத் திருநாள்
நெருங்கிடும் நேரம்
இதயம் குளிர்ந்திருந்தோம்..
மனதில் பெருநாள்
மகிழ்ச்சி பொங்க
மழலையாய் நாம் மகிழ்தோம்!
ஈத் முபாரக்!!!

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# பிறை காணும் ரமலான்

இஸ்லாமிய மார்க்கத்தில் அருள் நிறைந்த ஒன்பதாவது மாதமான ரமலானில், இஸ்லாத்தின் வழியில் இஸ்லாமியர்களால் நோற்கப்படும் நோன்பு ‘ரமலான் நோன்பு‘ என்று வழங்கப்படுகிறது.

ரமலான் என்ற சொல் ரமிடா (ramida) அல்லது அர்-ரமத் (ar-rama) என்ற அரபு மூலச் சொல்லிலிருந்து உருவானது, இதற்கு ‘கடுமையான வெப்பம்‘, ‘சுட்டெரித்தல்‘ அல்லது ‘வறட்சி‘ என்று பொருள். இந்த ரமலான் மாதம் என்பது பாவம் மற்றும் இச்சைகளைச் சுட்டெரித்து (கரித்தல்) உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதைக் குறிக்கிறது. சந்திர நாட்காட்டியின் பிறை கண்டு (நிலவின் பிறையைப் பார்த்தவுடன்) தொடங்கும் ரமலான் என்பது தியாகம், பொறுமை மற்றும் இறை நெருக்கத்தை உணர்த்தும் புனிதமான ஒரு மாதமாக இஸ்லாமியர்களுக்கு உள்ளது. பிறை நிலவின் சுழற்சியைப் பொறுத்து, ரமலான் மாதம் 29 அல்லது 30 நாட்களாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இஸ்லாத்தின் ஐந்து தூண்கள் என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் கடமைகளாகக் கலிமா, தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் என்பவனாகக் கருதப்படுகிறது. இதில், கலிமா என்பது அல்லாவைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதும், முகமது நபி இறைவனின் தூதுவர் என்றும், தொழுகை என்பது வயது வந்த எல்லா முஸ்லிம்களும் தினமும் ஐந்து வேளை தொழ வேண்டும் என்பதும், ஜகாத் எனும் மூன்றாவது கடமையானது வசதி படைத்த இஸ்லாமியர்கள் தங்கள் செல்வத்தில் 2.5% ஏழைகளுக்குத் தானமாக வழங்குதல் எனவும், நான்காவது தூணாக, கடமையாக இஸ்லாமியர்களால் ரமலான் மாதம் முழுவதும் நோற்கப்படும் நோன்பினையும் முக்கியமாகக் குறிப்பிடுகிறது. ஐந்தாவது புனித யாத்திரை பற்றிய கடமையாக உலகெங்கும் வாழும் இஸ்லாமியர்கள் தங்கள் பொருளாதார சக்தி மற்றும் உடல் வலுவைப் பொறுத்து, மக்காவிற்குப் புனித யாத்திரை பயணம் மேற்கொள்வது என்பதும், (இஸ்லாத்தில் அப்பயணம் ஹஜ் என்று அழைக்கப்படுகிறது). இந்த ஐந்து காரியங்கள் மீதும் இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய கடமைகளானது, இம்மையில் மனிதர்கள் அனைவரும் சமம் என்பதனை நிறம், மொழி, இனம் போன்றவற்றால், யாரும் யாரையும் விட உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ இல்லை என்பதை உணர்ந்து இறைவனுக்கு அடி பணிதலை நிரூபணம் செய்வதாக இக்கோட்பாடுகள் இஸ்லாமியர்களால் கடைப் பிடிக்கப்படுகிறது.

ரமலான் மாதம் வந்துவிட்டால், ‘சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப் பட்டு நரகத்தின்வாசல்கள்அடைக்கப்படுகின்றன. சாத்தான்கள் விலங்கிடப் படுகின்றன‘ என்று இஸ்லாத்தின் இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மனிதன்

தான் செய்த பாவங்களை உணரும்போது அதை அனைத்தையும் அல்லாஹ், மன்னித்தும் நரகத்திலிருந்து தப்பித்து இலகுவாகச் சொர்க்கம் செல்வதற்கான வாய்ப்புகளை இறைவன் இந்த ரமலான் மாதத்தில் வைத்துள்ளதாக நம்பப்படுகிறது. ரமலான் மாதத்தில் அடியார்கள் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவதால், சாத்தான்கள் மனிதர்களைப் பாவம் செய்யத் தூண்டும் முயற்சி பலனற்று தோல்வியில் முடிந்து சாத்தான்கள் விலங்கிடப்படுகிறார்கள் என்பதின் விளக்கமாக இதன் கருத்துக்கள் கூறப்படுகிறது.

ரமலான் நோன்பு (Sawm) என்பது அதிகாலை (சுப்ஹ்) முதல் அந்தி மாலை (மஃக்ரிப்) வரை, நீர், உணவு மற்றும் தீய பழக்கங்களைத் தவிர்த்து, ஆன்மீகக் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடிக்கப்படும் இஸ்லாத்தின் முக்கிய கடமையாகும். ரமலான் என்றும் அழைக்கப்படும் ரமலான் மாதத்தில், உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் பிறை நிலவைப் பார்த்த பிறகு 29-30 நாட்கள் நோன்பு நோற்கிறார்கள் சூரிய உதயத்திற்கு (வைகறை) முன் உணவருந்தி நோன்பை ஆரம்பித்து. அவர்கள் எங்கிருந்தாலும் 12-16 மணி நேரம் அல்லது அதற்கு மேல் நோன்பு நோற்று, சூரியன் மறைந்ததும் அந்தி வேளையில் பேரீச்சம்பழம் மற்றும் நீர் அருந்தி தங்கள் நோன்பை முடிக்கிறார்கள்.

அதிகாலைக்கு முன் உணவை உட்கொள்ளுதல் 'ஸஹர்' என்றும், சூரிய அஸ்தமனத்திற்குப் பின் பேரீச்சம்பழம் மற்றும் நீர் அருந்தி நோன்பைத் திறப்பது 'இஃப்தார்' (நோன்பு திறத்தல்) என்றும் அழைக்கப்படுகிறது. பின், மஃக்ரிப் தொழுகையை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

இந்த மாதத்தில், உண்ணாவிரதத்துடன் ஆன்மீகப் பயிற்சியாக, ஒழுக்கத்தை வளர்த்து, அல்லாவை நெருங்குவதே நோன்பின் உண்மையான நோக்கமாகும். இதில் நோயாளிகள், பயணிகள், கர்ப்பிணிகள், கை குழந்தைகளை வைத்திருக்கும் தாய்மார்கள் மற்றும் மாத விலக்கு காலத்தில் இருக்கும் பெண் களுக்கு நோன்பிலிருந்து விலக்கு அளிக்கப் படுகிறது, ஆனால் விடுபட்ட நோன்புகளை பிறகு அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

பொதுவாக, ஒரு இடத்தில்,ஒரு நாள் வேலை செய்தால், ஒரு மாதம் முழுவதும்



வேலை செய்த கூலியை யாரேனும் தருவார்களா? அப்படித் தருகிறார்கள் என்றால் அவரிடம் வேலை செய்பவர்கள் அதாவது, அந்த முதலாளிக்கு உச்ச பட்ச விசுவாசத்தைக் காட்டுவார்கள். அவ்வாறே இவ்வுலகத்தில் சராசரியாக 60 வருடம் ஒரு மனிதன் வாழ்வதாகக் கொண்டால் அதாவது 720 மாதங்கள் அவன் வாழும் நாளில் இறைவனை வணங்கினால் 720 மாதங்கள் மட்டுமே அவனால் வணங்க முடியும். இந்த ரமலான் மாதத்தில் 'லைலத்துல் கத்ர்' என வழங்கப்படும் ஒரு இரவில் இறைவனை வணங்கி விட்டால் ஆயிரம் மாதங்கள் நின்று வணங்கிய நன்மையைப் பெறலாம் என இஸ்லாம் குறிப்பிடுகிறது. 'லைலத்துல் கத்ர்' என்றால் 'கண்ணியமிக்க இரவு' அல்லது 'சக்தியின் இரவு' என்று பொருளாகும். லைலத்துல் க்த்ரை ரமலானின் கடைசி பத்து நாட்களில் ஒற்றைப்படை இரவுகளில் ( 21, 23, 25, 27, 29 ) நீங்கள் தேடுங்கள் என்று நபி அவர்கள் கூறினார்கள். இந்த இரவில் வழிபாடு செய்வது, நன்மைகளை அதிகரிப்பது, மற்றும் பாவமன்னிப்பு தேடுவது மிகச்சிறந்த அமலாகக் கருதப் படுகிறது.

அல்லாஹ் திருகுர்ஆன் மூலமாக நமக்கு நேர்வழி காட்டுகிறான். குர்ஆன் ரமலான் மாதத்தில் தான் அருளப்பட்டதால் அல்லாவிற்கு நன்றி செலுத்தி நேர்வழியில் நடப்பதற்கு இம்மாதத்தில் மற்ற நாட்களை விட அதிகமாகக் குர்ஆன் ஓத வேண்டும், நோன்பு நோற்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

நோன்பு நரகத்திலிருந்து காக்கும் கேடயமாக உள்ளது. இதில் நோன்பாளி களுக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளதாக நோன்பு நோற்பவர்களைப் பற்றி இஸ்லாம் குறிப்பிடுகிறது. ஒன்று நோன்பு திறக்கும் போதும் , மற்றொன்று தனது இறைவனைச் சந்திக்கும் போதும் கிடைக்கும் மகிழ்ச்சி யாக நபிகள் நாயகம் அவர்கள் கூறுகிறார் கள். எனவே, மனிதர்களுக்குக் கணக்கின்றி நன்மையைப் பெற்றுத் தரும் சிறப்பாக நோன்பு நாட்கள் உள்ளன.

நோன்பின் நோக்கமாக எல்லா நேரத்திலும் அல்லாவாகிய இறைவன் நம் மனதில் பதிய வைத்து இறைவன் விரும்பு கின்ற காரியங்களைச் செய்யக் கூடியவர்களாகவும், அவன் வெறுக்கின்ற காரியங்களைஅகற்றக்கூடியவர்களாகவும், நோன்பை நோற்கும் எவரிடமும் நல்ல மாண்புகள் பெற்று அவர்கள் மாற வேண்டும் என்பதற்காக இஸ்லாமிய மார்க்கத்தில் இந்த நோன்பானது ரமலான் மாதத்தில் நான்காவது கடமையாக அனுசரிக்கப்படுகிறது.

இஸ்லாத்தில் சந்திர சுழற்சிகளை அடிப்படையாகக் கொண்டு வரும் அந்த பிறையைப் பொறுத்து, ரமலானின் நிறைவு நாட்களில் ஈகை திருநாள் எனப் போற்றப்பட்டும் ரம்ஜான் எனும் பண்டிகை யானது கொண்டாடப்படுகிறது. **இந்த 2026 ஆம் ஆண்டில் ரமலான் பிப்ரவரி 18 அன்று, மாலையில் தொடங்கி மார்ச் 19 அல்லது 20ல் முடிவடையும்** என்று எதிர்பார்க்கப்படுகிறது. சரியான தேதிகள் பிறைச் சந்திரனைப் பார்த்துக் கணிக்கப் படுகிறது. இத்தகைய சிறப்புகள் பொருந்திய, பாக்கியங்கள் நிறைந்த இந்த ரமலான் மாதத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி, மறுமையில் வெற்றி பெற ரமலான் நோன்பு திருநாளை இந்த மாதத்தில் நாம் அனைவரும் வரவேற்போம்.

**நெல்லை. க. சோமசுந்தரி**
கவிஞர், எழுத்தாளர் &
தொல்லியியல் ஆர்வலர்
சென்னை -122. தமிழ் நாடு, இந்தியா.

# ஒளி நிரம்பிய மாதம்

வாழ்க்கை உங்களுக்கு புதியதோர் வரப்பிரசாதத்தை ரமலான் வழங்கும் போது மறுபடி மறுபடியும் பழைய தவறுகளை தொடராதீர்கள்....

யா அல்லாஹ் உன்னைத் தவிர பிறரின் கருணைக்கு நாங்கள் தேவைப்படாதபடி, உன்னிடமே முழுமையாகத் தஞ்சம் புகும் மனதையும் நிலைத்த நம்பிக்கை யையும் அருள்வாயாக. எங்கள் மீது உன்னுடைய விசாலமான, மகத்தான கருணையைப் பொழிந்து, உன்னுடைய பாதுகாப்பிலும் திருப்தியிலும் எங்களை நிலைநிறுத்துவாயாக.

யா அல்லாஹ்! இந்த ரமலானை எங்கள் வாழ்வில் ஒளி நிரம்பிய மாதமாக ஆக்குவாயாக. அதன் பகல் நேரங்களை இபாதத்தாலும், குர்ஆன் ஓதுவதாலும் அழகுபடுத்துவாயாக;

அதன் இரவுகளை தொழுகை, துஆ, மன்னிப்பு ஆகியவற்றால் இனிமையாக்கு வாயாக. கடந்த கால கசப்புகளுக்கும் இழப்புகளுக்கும் ஈடாக, இந்த ரமலானை எங்களுக்கு நன்மை, நிம்மதி, மன்னிப்பு நிறைந்த மாதமாக மாற்றி அருள்வாயாக.

எங்கள் பாவங்களை மன்னித்து, எங்கள் இதயங்களை தூய்மைப்படுத்தி, இந்த ரமலானை எங்கள் வாழ்க்கையின் சிறந்த ரமலானாக ஆக்குவாயாக.

**ஹிப்ஜுர் ரஹ்மான்**

## இறையின் அருளே!

நோன்பின் பெருமை நொடியும் சொல்லும்
நோன்பின் அருமை நோயைக் கொல்லும்!

இறையின் பொருத்தம் இனிதாய் இனிக்கும்!
மறையின் மொழியோ மாண்பாய் வியக்கும்!

நிறைவாய் மனமும் நிறைந்தே இருக்கும்!
இறையின் பெயரே இயல்பாய் உரைக்கும்!

குறைகள் யாவும் குன்றாய் இருந்தும்
இறையின் அருளே எல்லாம் நீக்கும்!

வயிற்றின் பசியை வையம் ஏற்றும்;
உயிரின் மொழியை உயர்வாய்க் காக்கும்!

திங்கள் ஆயிரம் திண்ணமாய் விஞ்சும்
எங்கும் நெஞ்சம் இறையினை அஞ்சும்!

கடலும் காற்றும் கடமையில் வெல்லும்
கடவுள் ஒருவனே காலமும் சொல்லும்!

பொய்கள் யாவும் புவியினில் நீங்கவே
மெய்கள் நாளும் மேன்மையைச் சொல்லுமே!

இனிய ரமலான் இனிதாய் வந்ததே!
பனியை விஞ்சியே பாங்கினைத் தந்ததே!

இறையின் பொருத்தம் என்றும் அருளிலே!
நிறைவோம் என்றும் நிறைவாய் நெஞ்சிலே!

வாழ்வியல் கவி
**சா.நாகூர் பிச்சை**
துபாய்

## வருவாய் பெருநாளே

இறையருள் ஏந்தி யன்பின்
இனிமையிற் றீனோ ரெல்லாம்
கறையிலா இதயத் தோடு
கவலையை நீக்கி நல்ல
மறையதன் நோன்பி ருந்து
மகிழ்ந்தம லீந்த தற்காய்ப்
பிறையினைக் காட்டி ஈங்கு
பெருநாளாய் வந்தீ ரின்று!

ஒருமாத நோன்பி ருந்து
ஓர்மையா யமல்கள் செய்து
தருமங்க ளீந்து ஏழை
தவித்திடும் பசியு ணர்ந்து
திருமறை யோதித் தொழுகை
தவறிடாத் தொடர்ந்த தற்காய்
அருமைசேர் நாளாய் முகிழ்ந்த
அருளவ னீந்த நாளே

திங்களார் நபியின் வாழ்வைத்
திறமுடன் பேண வுறவிற்
தங்கிடும் கயமை நீக்கித்
தன்னல மற்று நன்மை
மங்காமற் புரிவ தற்கு
மனநிறைக் கொள்கை யோடு
எங்கிலு முறுதி பூண
ஏற்றமாய் வந்த நாளே!

வல்லவ னீந்த ஈதே
வருந்தியாம் வாழு முலகின்
அல்லலைப் போக்கி தீனின்
அருமையை நாமும் பேணி
நல்லோராம் எம்முன் னோரின்
நடைமுறை தக்வா வோடு
நில்லாத வுலகில் வாழ
நித்தமும் உணர்வு ஈவாய்

கலாபூஷணம்
**மருதூர் ஜமால்தீன்**

## மன அமைதி

நெற்றியைத் தரை ஏந்த,
வாய்மொழி, மனமொழியாய்ப் படைத்தோனிடம் பல
உரையாடல்கள் எத்தனை அமைதியளிக்கின்றது...

ஏதுமேயறியாமல் திக்குத் திணறி,
எண்ணற்ற கேள்விகள் ஆழ்மனதைக் குழப்பிக்
கொண்டிருக்கும் போதெல்லாம்
ஒற்றை ஸுஜூதில்தான் ஓராயிரம் பதில்களைக்
காணக் கிடைக்கிறது...

எத்தனை தவிப்புக்கள்?
எத்தனை சகிப்புக்கள்?
எத்தனை ஏமாற்றங்கள்?
எத்தனை பாவங்கள்?
எத்தனை வலிகள்?
அத்தனைக்கும் ஆறுதலாய் அல்லாஹ்வுடனான ஒற்றை
உரையாடலே போதுமாகிறது அனைவருக்கும்...

திக்ருகள் நாவில் தவழ,
அல்குர்ஆன் வசனங்கள் கண்களில் நிறைய,
துஆக்களும், தொழுவிப்புக்களும் காதுகளை நிறைக்க, உள்ளம்
- எல்லாம் வல்ல இறையோனை துதிபாட,
அருள் நிறைந்த ரமழான் மாதமிதில் ஆயிரமாயிரம் சிறப்புக்கள்;
அல்லாஹ்வுடனான அத்தனை அருள்களையும் அனுபவிக்க
இம்முப்பது நாட்கள் மட்டும் போதுமா என்ன...?

**அதீனா அபூ உபைதா,**
ஓட்டமாவடி,
கிழக்கிலங்கை



# பெருநாள் பிறையே

கூனல் பிறையே
பெருநாள் பிறையே - உன்
பிறப்பை காணத்தான்
கோடான கோடி
மனிதக்கண்கள்
தவம் கிடக்கின்றது
நீ …
ஒவ்வொரு ஆண்டும்
ஓடித்தான் ஒளிகின்றாய்
உன்னை தேடித்தான்
விழிக்கின்றோம்
தெரியாமல்
தவிக்கின்றோம் - ஏன் இந்த
கண்ணாமூச்சி விளையாட்டு
எங்களுடன் விளையாட
உனக்கும் ஆசையோ ?

நிலா குழந்தையே
நீ யாரின் மடியில்
தவமிருந்து பிறந்தாய்
என்பது தெரியுமா?

ஆயிரம் மாதங்களின்
ஓர் மாதமான ரமலானின்
தாய் வயிற்றில் நீ பிறந்தாய் !

பெருநாள் பிறையே
உன் தாயின் மகத்துவம்
உனக்கு தெரியாவிட்டாலும்
.இந்த உலகுக்கு தெரியும்
இரவும் பகலும்
இறையை வேண்டியும்
இறைவனுக்காக பசித்திருந்தும்
இச்சைகளை வெறுத்தும்
இந்த வையம் - உன்
தாயின் காலத்தை
கண்ணியப்படுத்தியது

ராஜ பரிவாரங்களுடன்
ஏழைகளுக்கு -ஆமாம்
பக்தியில் ஏழைகளுக்கு
சன்மானம் தர வந்த .
ரமலான் பெருநாளே
இந்த மாதத்தில்
இராகாலங்களும்
ஹீரா குகைகளாகின
தனித்திருந்தும்
பசித்திருந்தும்
படைத்தவன் புகழை
பறைசாற்றிட
ஹராம்களை மட்டுமல்ல
ஹலால்களையும்
விலக்கி வைத்தோம்
இனிய ரமலானே நீ
இவ்வாண்டு
எங்களை விட்டு
பிரிகின்றாய்
இறை கட்டளை படி ,
வரும் ஆண்டு
உன் வரவுக்குகாய்
காத்திருப்போம்
காலத்தின் வழிகளில்
எங்கள் விழிகள்
விழித்திருக்கும் !




ஹாஜி கவிஞர்.

**எம்.ஜலாலுதீன்**

அமைப்பாளர் -
நிலாவட்டம் சென்னை

# சென்று வா...

பசி இல்லா இறை ஒருவன்
பசி அறிந்த மானிடர்க்கு ;

புரிதலை பூமியில் உணர்த்திடவே ...;

விஞ்ஞான பொய் உலகில்
மெய்ஞானம் தனை நிறுத்தி ;

இது ஞானம் என விளக்கி
விடை பகர வந்தாயோ ;

விரட்டி நிற்கும் வன் கொடுமை
வரையற்ற போதை, குடி ;

வேரோடு களைந்து இளைஞர்
மனம் மாறியிங்கே ;

தவப் பயன் இது என
தவாபும் , தருமமும் ;

கல்புக்கு ஈடேற்றம்
கண் குளிர்ச்சி ;

தக்க பலன் பெறவே
புகழ் சேர்க்கும் புண்ணியமே ;

சென்று வா... நீ
சென்று வா...;

ஸலாம் சொன்னேன்
உன்மேல் சாந்தி கொண்டேன்
சென்று வா.....;

விரதம் முடித்தேன்
வெயில் ஒரு பொருட்டல்ல ;

என் பட்டினி பெரிதல்ல
பலஸ்தீனின் பசியைவிட..;

முன் நெற்றி பூமி தொட
தலை தொழுதேன் ..;

வாழ வழி தந்த மகான்கள்
முன் நான் என்ன..?

சென்று வா...;

பிழை பொறுக்க , கவலைகள்
சொல்லியழ ..
பிரார்த்தனைகள் முன் வைத்தேன் ...;

மனிதன் நான் இறைவா...
மன்னித்துவிடு..;

மீண்டும் நீ.... வருவாய் றமழானே..
மீள மனிதன் இருப்பானா..;

மீட்சி பெற வழிகாட்டு
மீதம் இருப்பது ஏதுமில்லை..;

சென்று வா.....
நானும் ஓர் நல்லடியான்
எனக்கும் ஓர் சுவனம் என்றால்..;

என் பாவச்சுமை களைந்து
பூமியிலே பாதுகாத்து..;

சென்று வா...;

ஓடும் உதிரமும் , ஒரு சொட்டுக்
கண்ணீரும் ..;

நாடி, நரம்பும் நமை இழுத்து
போகும் வரை..;

நாலு பேர் பேசும் நல்லவனாக
நலம் அருள் வல்லோனே ...;

சென்று வா.. றமழானே நீ..

கண்கள் பனிக்க.. கலங்கிய
ஹல்புடனே கண்ணியமே நீ...;

சென்று வா......;;

மஸாஹிரா கனி
பாணந்துறை இலங்கை.

# புனித றமழான் மலர்ந்ததே!

அருள் தரும் மாதம்
அமல் நிறை மாதம்
புனித றமழான் பூத்ததே
மறைநம் புர்கான்
இறங்கிய மாதம்
புனித றமழான் மலர்ந்ததே!
கஸ்தூரி வாசம் கமழும் றமழான்
கருணைத் தென்றல் வீசும் றமழான்
அருளைச் சுமந்து வந்ததே
புனித றமழான் பூத்ததே!
கல்புகள் மணக்கக் களிப்பினில் மிதக்க
உள்ளொளி பாய்ச்சும்
உணர்வொளிர் றமழான்
சமத்துவ தீபம் ஏற்றிடும் றமழான்
சங்கைகள் மிகுந்த கண்ணிய றமழான்
அருள் தரும் மாதம்
அமல் நிறை மாதம்
புனித றமழான் பூத்ததே
மறைநம் புர்கான்
இறங்கிய மாதம்
புனித றமழான் மலர்ந்ததே!

நோய்கள் தீர்க்கும் அருமருந்தாக
நாயன் தந்த புண்ணிய றமழான்
வானில் பிறையாய் ஒளியாய்த் தோன்றி
தீனின் ( ம்ஜுளளஜஷ்ஜ ) வாசம் பரப்பும்
றமழான்
அருள் தரும் மாதம்
அமல் நிறை மாதம்
புனித றமழான் பூத்ததே
மறைநம் புர்கான்
இறங்கிய மாதம்
புனித றமழான் மலர்ந்ததே!
பசியை உணர பட்டினி உணர
பகிர்ந்தே உண்ணும் பண்பினை வளர்க்க
இறைவன் அளித்த இனிய றமழான்
இதயம் மகிழும் இன்ப றமழான்
அருள் தரும் மாதம்
அமல் நிறை மாதம்
புனித றமழான் பூத்ததே
மறைநம் புர்கான்
இறங்கிய மாதம்
புனித றமழான் மலர்ந்ததே!


## பாவேந்தல் பாலமுனை பாறூக்



தமிழ்நெஞ்சம் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் தொகுப்பாளர்

# பாதை மாற்றும் போதை

உடம்பை உறிஞ்சும் இருண்ட நிழல்
உன் உணர்வுகளை அழிக்கும்
ஆயுட்கொல்லி
இளைஞனே !!.. விழித்தெழு
போதையின் பயணம்
வாழ்வின் பகை தான்
விலகி வா....!!

விழி மின்னும் மின்மினி போல
பார்வைக்குப் பொற்கிரணமாய்த் தெரியும்
மழலை கொஞ்சும் மொழி போல் வந்து
மறுநாளே மரண அடித்தளம் இடும்.

போதைக்கு இல்லை பூக்கள் வழி
அது நமக்கு பூசலுக்கு வழி
இணைதல் போல எம்மைத் தொட்டு
நிழல் கூட விலகுமே நம்மை விட்டு



போதையின் பாதை.. கொடிதிலும் கொடிது
வாலிபனே !! விழித்துக் கொள்..
உன் விடியலைத் தேடி.

நாவில் அமுதமென உருகும் சுவை
நரக நச்சென நஞ்சைப் போல
மின்னும் கண்ணாடி
போத்தல் ஒலியும்
சிந்தையில் சிதறி பாழாய்ப் போகும்.

இன்பமாய்த் தோன்றும் இளங்காற்று போல
மனதை உருக்கும் மயக்கம் அது
மணி விழிகள் மங்கி மருளாகி ஓங்க.
கண்ணில் தோயும் கண்கட்டி வித்தை.

போதையைத் தாண்டிப் பார்..
போராட்டங்கள் குறைந்திடும் பார்..
விழித்தெழு..
வாழ் !!
கரங்களின் வலிமையில்
தேசத்தைப் பற்றி...
நேசமாய் நில்
தரணியில் போற்ற.

பாவளையூராள்

ஏ பீ எப்.பஸ்லியா
நாபாவள

# காலமாற்றம்

**எம் சி யே பரீத்**

வங்கித் தொழிலில் இருந்து ஓய்வு பெற்று பத்து வருடங்கள் நேற்றுப் போல் கடந்து விட்டன. முன்பெல்லாம் காலையில் அலுவலகம் போனால் மாலை யில் வீடுவரும்வரை வீட்டில் என்ன நடக்கிறது என்றுகூட ஒன்றுமே தெரிவ தில்லை வேளைக்கு சாப்பாடு. வேளைக்கு உறக்கம். அப் பா டா முப்பது வருடங்கள் பறந்தே விட்டன.

ஆனால் இப்போது ..அன்றாடம் மார்க்கட்போவது,கடைகளுக்கு போவது எல்லாமே நமது தலையில்தான் ஓட் டமும் நடையுமாகவே காலம் போய்க்கொண் டிருகிறது.

நண்பர்களையாவது சந்திப்பதென்றா லும் இயலாமலே இருக்கின்றது, 'என்னங்க இன்றைக்கு இரவைக்கு சாப் பாட்டுக்கு பாண்சரிவாங்கினால்தான்....' இதுமனைவியின்வேண்டுகோளாகவும், கடமையாகவும் குறுக்கே வந்து நிற்கும், இல்லாமல் போனால் இன்றைக்கு மருமகன் மருமக்கள் எல்லோரும் வீட்ட வருவதாகவும் பகல் சாப்பாட்டுக்கு தயார் பண்ண வேண்டும் என்ற வாசகம் வாசிக்கப்படலாம்.

என்னடா வாழ்க்கையிது கொஞ்சமும் நிம்மதியே இல்லாமல் இருக்கிறது ஓய்வுகாலம் என்று முன்னோர்கள் இதைத்தான் சொல்லி வைத்தார்களோ என்று மனம் அங்கலாய்த்துக்கொள்ளும் .

சில வேளைகளில் செக்கு மாடுகளின் செயல்களும் நினைவில் வந்துபோகும் ,

அப்பாடா இன்றாவது ஒரு சந்தர்ப் பம் கிடைதிருக்கிறது இதை நழுவவிடக்கூடாது 'இன்றைக்கு பக்கத்து ஊரில் ஒரு நண்பனை சந்திக்கவேண்டியிருக்கிறது போயிட்டு வாறன் 'மனைவியிடம் சொல்லிவிட்டு பஸ் தரிப்பிடத்தை நோக்கி சென்றுவிடுகிறேன் ,பத்து வருடங்களின் பின் பக்கத்து ஊர் நோக்கிய பிரயாணம் .

ஊரே மாறியிருந்தது சும்மா காடாகிக் கிடந்த இடமெல்லாம் அடுக்குமாடிக் கட்டிடங்களும், சாப்பாட்டு கடைகளு மாக காட்சிதந்தன.

இனி நண்பனுக்கு.... 'ஹலோ அஸ்ஸலாமு அலைக்கும். நான் அப்துல்லா பேசுறன் எவடத்தடா ஊடு இங்கு எல்லாம் மாறிக்கிடக்கு '

'வலைக்குமுஸலாம் எவ்விடத்தில நிற்கிறாய் சொல்லு நான் அவ்விடம் வருகிறேன் '

'நீ கஸ்டப்படாத இடத்த சொல்லு த்ரீ வில்ல எடுத்திட்டு நான்வாறன் '

'தேவையில்லாத கதைகளவிட்டிட்டு எங்க நிக்காய் என்று சொல்லு '

வங்கியில் வேலைகிடைத்த புதிதில் அன்றே அறிமுகமான நட்பு இன்றுவரை தொடர்கின்றது ,

வரவேண்டாம் என்று சொன்னாலும் கோபித்துக்கொள்வான் தொலைபேசியின் சூடு ஆறுவதற்குமுன் பக்கத்தில் வந்து நின்றான் .

அவனது வீடு செல்லும்வரை நான் எதுவும் பேசவில்லை ‘இந்த காலத்தில வாகனம் ஓட்டுவது பெரிய கஷ்டம் மச்சான் மோட்டசைக்கில் காரணுகள் அதுவும் சின்ன பொடியன்மாரு நம்மட வாகனத்தில முட்டிட்டு நம்மலோடதான் சண்டைக்கு வாராணுகள். காலம் மாறி போச்சிடா ‘

‘ உண்மைதான் அது சரி இன்னும் இந்த காரை மாத்தவேயில்லையா ‘

‘இல்ல மச்சான் இது மட்டும் போதும் ‘

புதிதாக வீடு கட்டியிருந்தான் ‘இது கடைசி மகளுக்கு கட்டினது. அவ வெளிநாட்டில இங்கு நானும் மனிசியும்தான் இப்படியே காலம் ஓடிக்கொண்டிருக்கு ‘

‘அப்புறம் என்ன விசேடங்கள் ஊர் நிலைமகள் எப்படி பிள்ளை குட்டிகள் பேரப்பிள்ளைகள் .. நாட்டு அரசியல் ‘

மதியம் வரை கதைத்துக் கொண்டிருந்தோம்

‘பழைய வாடிக்கையாளர்கள் என்ன செய்கின்றரர்கள் நமது குட் கஸ்டமர்கள் என்று பழைய முகாமையாளர் சொன்னவர்கள் என்ன செய்கிறார்கள் ‘

‘ஓ அவர்களா... எங்கே வாழ்க்கை தொடங்கும் அது எங்கே எவ்விதம் முடியும் யாரோ வருவார் யாரோ இருப்பார் வருவதும் போவதும் தெரியாது‘ என்ற பாடலின் வரிகளைத்தான் ஞாபக மூட்டினான்

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது எனக்கு பதவி உயர்வு கிடைத்து ஒரு முகாமையாளராக இடம்மாறி வந்த அன்று மாற்றலாகி செல்லும் முகாமையாளரிடம் இருந்து எனது கடமைகளை பாரமெடுத்தபோது சில வாடிக்கையாளர்களை குட்கஸ்டமர்கள் என்று ஒரு சிலரை அறிமுகப்படுத்தியிருந்தார். அடுத்த நாள் அவர்கள் என்னை சந்திக்கவந்தார்கள் ‘சார் நான் வங்கிக்கு வருவதே இல்லை எல்லா நடவடிக்கைகளையும் கடைப் பொடியன்மார்கள் பாத்துக் கொள்வார்கள் நீங்கபுதிதாகவந்திருப்பதாகேள்விப்பட்டு பாத்திற்று போகலாம் என்றுதான் வந்தன்‘ அறிமுகப்படுதியவர்கள் எல்லாம் அந்த சாரம்சமாகத்தான் சொல்லிவிட்டு போனார்கள் அடுத்தநாள் ஒரு வாடிக்கையாளரை சந்திக்கக் கிடைத்தது ‘சார் நான் சின்ன தொழில்தான் செய்கிறேன் எனக்கு ஒரு லட்சம் கடன் கேட்டு பல மாதங்களாக அலைந்தேன் கடைசிவரை பழைய மனேஜர் தரவில்லை சார்



நீங்களாவது உதவி செய்யிங்க சார்' நாட்கள் வாரங்களாகவில்லை குறிபிட்ட குட் கஸ்டமர்கள் எப்படியானவர்கள் என்பதை புரிந்துகொண்டேன் சில வாரங் களில் எனக்கே மொட்டைக்கடிதம் அனுப்பும் அளவிற்கு அவர்கள் முன்னே றியிருந்தார்கள். இருந்தபோதும் மேலிடத் தில் அவர்களின் கடிதங்கள் குப்பை தொட்டிகளை நிரப்பிக்கொண்டிருந்தன என்பதை அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை என்பதுதான் வேடிக்கை .

'என்னமச்சான் பெரிசா யோசிக்கிறாய்'

'ஒன்றுமில்லைடா அந்த பழைய குட்கஸ்டமர்கள் பத்தித்தான் ஒரு ஞாபகம் வந்திட்டு '

'அப்படியா அதுதானே நான் முன்பே சொல்லிவிட்டன் யாரோ வருவார் யாரோ இருப்பார் வருவதும் போவது தெரியாது என்று அதுதான் ஒரு சிலர் நாட்டிலேயே இல்லை இன்னும் சிலர் நடைப்பிணமாகவும் தெரிகிறார்கள் '

'சரி அதவிடு மதிய சாப்பாடு றெடி'

'இல்ல மச்சான் வீட்டில மனைவி எனக்காக காத்துக்கொண்டிருப்பா ...'நான் சொல்லிமுடிப்பதற்குள் மனைவிடம் இருந்து 'என்னங்க சாப்பாடு..' 'ஓ வரத்தான் இருந்தன் இங்கு விர்ற மாதிரி இல்ல 'தொலைபேசியை துண்டித்துக் கொள்கிறேன்.

'மச்சான் இங்கு ஊரில நல்ல உடுப்புகள் எடுக்கக் கூடிய கடைகள் இருக்கா ஒருக்கா மனைவிக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் எடுக்கவேணும் '

'எடுப்போமே நான் ஒரு கடைக்கு கூட்டிக்கொண்டு போறன் நீ அசந்து போவாய் '

'அப்படியா ஓ கே' சாப்பாடு முடிந்து ஒரு பெரிய நான்கு மாடி கடைக்கு அழைத்து சென்றான். நண்பன் ,என்னால் நம்பவே முடியவில்லை ஒரு குடும்பத்திற்கு தேவையான எல்லா வகையான சாமான்களும் ஒரே இடத்தில் எடுக்கக்கூடியதாக இருந்தது எனக்கு மனைவியை கூட்டிக்கொண்டு வராமல் விட்டது ஒரு பெரிய குறையாகவே இருந்தது. இன்ஷாஅல்லாஹ் மகள் நாட்டுக்கு வந்த பின் மனைவி மக்கள் பேரப்பிள்ளைகள் எல்லாரையும் கூட்டிக் கொண்டு வரவேண்டும் என நினைத்துக் கொள்கிறேன் ,

'யாரு முதலாளியோ பெரும் கோடிஸ் வரனாக இருப்பான்போல .. '

'ஓ மச்சான் நீ பார்த்தா அசந்து போய்விடுவாய் அந்தா நிற்கிறாரே அவர்தான் '

'அது வந்து.. 'எங்கண்களையே நம்ப முடிய வில்லை 'அஸ்ஸலாமு அலைக்கும் சார் சார் எப்படி இருக்கீங்க சார் நான் அடிக்கடி உங்களைத்தான் நினைத்துக் கொள்வன் என்னால வந்து சந்திக்க முடியாத பிஸி மனிதனாகிற்றன். மன்னிக்கணும் சார் நீங்க இல்லாட்டி நான் இந்தநிலைமைக்கே வந்திருக்கமாட்டான் எல்லாம் நீங்க போட்ட பிச்சைதான் சார் 'என்னை கட்டிபிடித்து கண்ணீர் 'நீங்க நல்லாய் இருப்பீங்க சார் '

'எனக்கு ஒரு லட்சம் லோன் தாருங்க சார் பழைய மனேஜர் ஏமாற்றி விட்டார் சார் 'இப்படி அன்று என்னிடம் அவன் அழாக்குறையாக கேட்டது ஞாபகத்திற்கு வந்தது.

# நோன்பின் மாண்பு



## எஸ். ஏ. கப்பார் (இலங்கை)

அமீனுல்லா வீட்டை விட்டு வெளி யேறி இன்றுடன் ஒரு மாதமாகிவிட்டது.

அமினா அமீனுல்லாவின் மனைவி. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது தந்தை ஓர் கூலித்தொழிலாளி. தினமும் கூலி வேலைக்குச் சென்று அதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் தன் குடும்பத்தை ஓட்டி வந்தார். அமினாவின் உம்மா வீட்டில் இடியப்பம் செய்து உறவினர்களுக்கும் அயலவகளுக்கும் விற்று வந்தார். அப்போது அமினாவுக்கு 13 வயது. பாடசாலை செல்லும் நேரங்கள் தவிர ஏனைய நாட்களில் உம்மாவுக்குத் துணையாக இருந்து வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து வந்தாள். படிப்பில் நல்ல கெட்டிக்காரி. எப்படியோ கஷ்டப்பட்டு உயர்தரம் வரை படித்தவளுக்குப் பல்கலைக் கழகம் செல்ல வாய்ப்புக் கிட்டவில்லை. வீட்டின் நிலைமை காரணமாக தொடர்ந்து படிக்க விரும்பாத அமினா ஒரு தனியார; கம்பனியில் வேலைக்குச் சேர விரும்பி தன் உம்மாவின் அனுமதி வேண்டி நின்றாள்.

“என்ன மவ சொல்றீங்க. நானும் உங்க வாப்பாவும் இத்தன நாளும் கஷ்டப்பட்டது இதுக்குத்தானா? நீங்க படிச்சு ஒரு டீச்சர் வேலையாவது பார்ப்பீங்க என்றுதானே நெனச்சம். தனியார் கம்பனில வேலை செய்றதல்லாம் மிச்சம் கஷ்டம் என்று சொல்றாங்க. அதுவும் பொம்புள புள்ளகள தனியார் கம்பனிக்கு வேலைக்கு அனுப்பக் கூடாதென்று சொல்றாங்க” என கவலைப்பட்டார் அமினாவின் உம்மா.

“அப்படி எல்லாம் இல்ல உம்மா. எங்க போனாலும் நாம மானம் மரியாதையோட இருந்தா சரிதான் உம்மா. நமக்குத் தாற வேலைய நாம செய்து போட்டு நேரத்துக்கு வீட்டுக்கு வந்தா சரிதானே உம்மா” என தனது முடிவை நியாயப்படுத்தினாள் அமினா.

“என்னவோ நான் உலகம் தெரியாதவ. என்னவெண்டாலும் உங்க வாப்பா வந்ததும் கேட்டுப் பாரு” எனக் கூறியவாறு நகர;ந்து சென்றார், அமினாவின் உம்மா.

இவ்வளவு காலமும் எத்தனையோ சிரமங்களையும் தியாகங்களையும் மேற் கொண்டு தன்னை உயர்தரம் வரை கற்பித்த தன் பெற்றோரை மேலும் மேலும் சிரமப்படுத்தக் கூடாது என்ற எண்ணத்தைதனதுதந்தையிடம்எவ்வாறு தெரியப்படுத்துவது என அறியாது வருந்தினாள் அமினா. எதுவாகிலும் ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வாப்பா வந்ததும் எப்படியாது இணங்க வைத்து அடுத்த வாரம் முதல் வேலைக்குச்

செல்ல வேண்டுமென முடிவெடுத்தாள் அமினா.

அன்று மாலை நேரம் வேலைகளை முடித்துவிட்டு வீடு வந்த வாப்பாவை அணுகி,

"வாப்பா. எனக்கு தொடர்ந்து படிக்க விருப்பமில்லை வாப்பா. இத்தோடு நிறுத்திக் கொண்டு ஏதாவது நல்ல வேலயில சேரலாம் என விரும்புறேன். நம்மட காசிம் மாமாட மகளும் அந்த கம்பனியில்தான் வேல செய்யிறா. நல்ல சம்பளமும் கொடுக்கிறாங்களாம். வேலையும் அவ்வளவு கஷ்டமில்லையாம். வேலைக்கு இன்னும் ஆட்கள் தேவையாம். அதுதான் நானும் போகலாம் என விரும்புறேன் வாப்பா. நீங்க ஆம் என்று சொன்னால் போறன். நம்மட கஷ்டங்களும் கொஞ்சம் கொஞ்சம் சரியாகிடும். உங்களுக்கும் வயசாகிப் போகுது. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நீங்களும் உம்மாவும் இப்படி கஷ்டப்படுற. சரி என்று சொல்லுங்க வாப்பா" எனக் கெஞ்சி நின்றாள்.

மிக நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்த அமினாவின் வாப்பா ஒரு பெரு மூச்சு விட்டவாறு,

"நான் என்னம்மா சொல்ல இருக்கு. நீ விரும்பிக் கேட்ட எதைத்தான் இல்லண்டு சொல்லியிருக்கேன். நான் படிக்காதவன். உனக்குத்தான் நல்லது கெட்டது தெரியும். உங்க உம்மா விரும்பினா வேலைக்குப் போ. அவ்வளவுதான் நான் சொல்ல இருக்கு" எனக் கூறிவிட்டு எழுந்து சென்று தொழுகைக்குச் செல்ல ஆயத்தமானார;.

அமினா சந்தோசமடைந்தாள். அடுத்த வாரம் முதல் வேலைக்குச் செல்ல ஆயத்த மானாள்.

சுமார் ஐந்து வருடங்களின் பின் அமினாவுக்குத் திருமணம் முடித்து வைக்க மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பமானது. எப்படியாவது ஒர; அரச தொழில் புரியும் ஒருவரைத் தேடி அலைந்தார்கள். முடியவில்லை. இறுதியில் அமினாவின் தூரத்து உறவுக்காரர் மூலம் வெளிநாடு சென்று திரும்பி வந்து சொந்தமாக ஆட்டோ வைத்துத் தொழில் புரியும் அமீனுல்லா மாப்பிள்ளையாகக் கிடைத்தான். திருமணமும் நல்ல முறையில் எளிமையாக நடைபெற்றது. முதல் ஒரு வருடம் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் வாழ்க்கை ஓடியது. ஒர; அழகிய ஆண் குழந்தையும் கிடைத்தது.

நாட்கள் செல்லச் செல்ல அமீனுல்லா வின் மாத வருமானம் குறைந்து கொண்டே செல்லதற்போதைய வாழ்க்கைச்செலவுக்கு இருவர் உழைத்தும் ஈடுகொடுக்க முடியாது தடுமாறினான். இதன் நிமித்தம் இடைக்கிடை இருவருக்கிடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படத் தொடங்கின.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியம் உணவருந்தும் போது பரிமாறிய உணவில் ஒரு தலை முடி கிடந்ததால் ஏற்கனவே அமினாவுடன் கோபத்தில் இருந்த அமீனுல்லா,

"சீ... என்ன இது. கண்ணை எங்க வைத்துக் கொண்டு சமைக்கிறது. வர வர கழுத தேஞ்சு கட்டெறும்பான கதையாப் போச்சு. நல்லாப் பாரு. கண்ணத் தொறந்து பாரு" என ஆத்திரப்பட்டு சாப்பாட்டுத் தட்டைத் தட்டி விடவும் அமினாவின் உம்மா உள்ளே வரவும் சரியாக இருந்தது.

"இண்டைக்கு லீவு நாள். நான் சமைக்கிறன் எண்டுதான் சொன்னேன். உம்மாதான் வழக்கம் போல சமைச்சாங்க.

வயது போன காலத்துல தவறுதலா முடி விழுந்தத கவனிக்கல்ல போல. இந்த சின்ன விஷயத்துக்கு போய் இப்படி ஆட்டம் போட்டா எப்படி?" என்றாள் அமினா.

மனைவிதான் சமைத்தாள் என நினைத்து ஆர்ப்பாட்டம் செய்த அமீனுல்லாவுக்கு தர்ம சங்கடமாகி விட்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு மீண்டும் உணவுத் தட்டை அருகில் எடுத்து உணவருந்தி விட்டு ஆட்டோவை எடுத்துக் கொண்டு வெளியே சென்று விட்டான்.

"உம்மா, கொஞ்சம் பார்த்து சமைக்கிறதுதானே. சாப்பாட்டில முடி கிடந்தது என்று கத்துறார். பாத்தாய் தானே" என்றாள் அமினா.

ஒன்றுமே பேசாமல் நகர்ந்து விட்டார் அமினாவில் உம்மா. சில நாட்களாக மருமகனின் செயற்பாடு அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. ஆதலால் ஏதாவது கதைத்து பிரச்சினையைப் பெரிதாக்கிக் கொள்ள விரும்பவில்லை.

நாட்கள் சில கடந்தன. ஒரு நாள் "இஞ்ச பாருங்க. அடுத்த மாதம் நோன்பு ஆரம்பமாகுது. தலை நோன்புக்கு மாமி வீட்டுக்கு நோன்புச் சாமான்கள் அனுப்ப வேண்டும். உங்கட உம்மா வாப்பா தங்கச்சிக்கெல்லாம் உடுப்பும் எடுக்க வேண்டும். இப்படியே தொழில் இல்ல தொழில் இல்ல என்று வீட்டிலேயே இருந்தா எப்படி. என்ட சம்பளம் சாப்பாட்டுக்கு மட்டும்தான் போதும். மத்த வேலைகள் எல்லாத்துக்கும் நீங்கதான் ஒரு வழி பண்ண வேண்டும்." என அமினா கூறிய வார்த்தைகள் அமீனுல்லாவின் மனதைப் புண்படுத்தின. தான் தொழில் செய்யாது வெட்டியாக வீட்டில் இருப்பதாகச் சுட்டிக்காட்டிக் கதைக்கிறாள் என எண்ணி வருந்தினான்.

பெற்றோல் விலையேற்றத்தின் பின் ஆட்டோ தொழிலில் சரியான வருமானம் கிடைக்காததையிட்டு கவலைப்பட்டான். வேறு தொழில் செய்யவும் தெரியவில்லை. தனது ஆட்டோவை விற்றுவிட்டு மனைவி மக்களைத் துறந்து மீண்டும் வெளிநாடு சென்று உழைத்தால் என்னவென யோசிக்கலானான். வெளிநாடு செல்லும் வரை தன் மனைவியைப் பிரிந்து தனது உம்மாவின் வீட்டில் தங்கியிருப்பதாக பிழையானதொரு முடிவெடுத்து உம்மா வின் வீட்டுக்குச் சென்றுவிட்டான் அமீனுல்லா.

தன் கணவனின் செயலைச் சற்றும் எதிர்பாராத அமினா வேதனையடைந் தாள். தன் மாமியின் வீட்டுக்குப் பல தடவைகள் சென்று தன் கணவனை வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். ஆனால் அமீனுல்லாவின் பிடிவாதம் விட்டுக் கொடுக்க மறுத்தது. வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் அமினாவின் மாமி நல்ல வார்த்தைகள் கூறி நம்பிக்கையூட்டி அனுப்பிவைப்பார். பிள்ளைகளின் செயல் களுக்குத் தாய்மார்என்ன செய்ய முடியும்.

நாளை தலை நோன்பு. தலை நோன்புக்குரிய ஈச்சம் பழம், கோழி இறைச்சி, அரிசி, தேயிலைத் தூள், சீனி, பால் மா, குளிர்பானம் போன்ற பொருட்களெல்லாம் வாங்கிக் கொண்டு தனது மகனையும் உம்மாவையும் அழைத்துக் கொண்டு மாமியின் வீட்டுக்குச் சென்றாள், அமினா. அவ்வேளை அமீனுல்லா வீட்டில் இருக்கவில்லை.

பேரப்பிள்ளையைக் கண்ட சந்தோ சத்தில் ஓடி வந்த அமினாவின் மாமனார் தன் பேரப்பிள்ளையைத் தூக்கி உச்சி முகர்ந்து ஆனந்தப்பட்டார்.

"மவ, இஞ்சவாங்க. யாரு வந்திரிக்காங்க

என்று பாருங்க"

வாப்பாவின் குரல் கேட்டு வெளியே வந்த அமினாவின் மதினி,

"வாங்க மாமி. வாங்க மதினி. டேய் செல்லக் குட்டி. வாடா" என வாப்பாவின் கையிலிருந்த அமினாவின் மகனை பெற்றுக்கொண்டாள். இதற்கிடையில் குசினியில் வேலை செய்து கொண்டிருந்த அமினாவின் மாமி வெளியே சத்தம் கேட்பது அறிந்து வெளியே வந்தார்.

"சம்மந்தி, வாங்க வாங்க. அமினா வாப்பாவைக் கூட்டி வரல" என அன்போடு கேட்டார்.

"இல்ல மாமி. வாப்பா என்னவோ அலுவலா வெளியே போயிட்டாங்க. பொறகு வருவாங்க. இத உள்ளே கொண்டு வையுங்க" எனப் பதிலளித்தவாறு கொண்டு வந்த தலை நோன்புச் சாமான்களை மாமியின் கையில் கொடுத்தாள்.

உள்ளே சென்று நாற்காலிகளில் அமர்ந்த அமினா சுற்று முற்றும் பார்ப்பதைப் புரிந்து கொண்ட அமினா வின் மாமி,

"அமீனுல்லா இப்பதான் கடைப் பக்கம் போறான். நாளைக்கு தலை நோன்பு. மாமி வீட்டுக்கு தலை நோன்புச் சாமான் வாங்கி வர புள்ளட வாப்பா புறப்பட்ட போது, இல்ல நான் வாங்கி வாரன் என்று சொல்லிக் கொண்டிருந்தான்."

இதைக் கேட்ட அமினாவுக்கு புதிய தொரு நம்பிக்கைக் கீற்று துளிர்விட்டதை அறிந்த அவளது தாய் மகிழ்வுற்றார;.

மாமியார் வீட்டிலிருந்து புறப்படும் வரை அமீனுல்லா வீட்டுக்கு வரவில்லை.

அமினா வெளிக்கிட்டு ஓர் அரை மணி நேரத்தில் வீடு வந்தான் அமீனுல்லா. அவனது மனைவி, மகன், மாமியார; சகிதம் வந்து நோன்புச் சாமான்கள் தந்துவிட்டுப் போவதாகக் கூறி அப்பொருட்களை உபயோகிக்க அவனது அனுமதி வேண்டி நின்றார், அமீனுல்லாவின் உம்மா.

"உங்கட சம்மந்தி. உங்களுக்கு நோன்புச் சாமான் கொண்டு வந்திருக்கா. அத ஏன் எனக்கிட்ட சொல்லுறீங்க. நானும் சாமான் வாங்கி வந்திருக்கேன். நீங்களும் கொண்டு கொடுத்தாச் சரி" என்றான் அமீனுல்லா.

"டேய், நடந்தது நடந்து போச்சு. நமக்கும் கொமர் புள்ள ஒண்டு இருக்கு. அவள்ட வாழ்க்கையையும் நெனச்சுப் பாரு. நாளைக்கு அவளுக்கும் ஒரு மாப்பிள பாக்க வேணும். எல்லாத்தையும் போட்டுட்டு தலை நோன்பும் நல்ல நாளுமா ஒண்ட பொண்டாட்டி புள்ளய ளோட போய் வாழப் பாரு."

"உம்மா நீங்களும் தங்கச்சியுமா மாமி வீட்டுக்குப் போய் நான் வாங்கி வந்த நோன்புச் சாமான்களை கொடுத்திட்டு கெதியா வாங்க. நான் நாளைக்கு நோன்பு புடிச்சிட்டு சுப்ஹு தொழ பள்ளிக்குப் போக வேணும். நேரத்தோடு தூங்கப் போறன்" கூறிவிட்டு நகர்ந்தான்.

"என்ன உம்மா. அவங்க இப்பதான் வந்திட்டு போறங்க. பின்னால நாம போறதா. விடுங்க நாளைக்குப் பாப்பம். உங்கட மகன் புதிசா நோன்பு புடிச்சு பள்ளிக்கு தொழப் போகப் போறா ராம். அல்லாஹ்தான் நல்ல வழியக் காட்டட்டும்" என்றாள் அமீனுல்லாவின் தங்கை.

அதிகாலை எழுந்து வீட்டிலுள்ளவர் களுடன் சேர்ந்து தானும் சஹர்செய்து

தலை நோன்பு பிடித்து சுபஹ் தொழுகைக்காக பக்கத்திலுள்ள பெரிய பள்ளிவாசலை அடைந்தான் அமீனுல்லா. தொழுகை முடிந்ததும் விசேட மார்க்கப் பிரச்சாரம் (பயான்) ஊரில் பிரபலமான மௌலவி ஒருவரால் நிகழ்த்தப்பட்டது. பயான்களெல்லாம் நிகழ்த்தப்படும் போது அமர்ந்திருந்து கேட்கும் பழக்கம் இல்லாத அமீனுல்லா என்னவோ அன்று அமர்ந்திருந்து மௌலவியின் கணீர் என்ற குரலில் சொக்கிப் போனான்.

பயான் சொற்பொழிவின் ஒரு கட்டத்தில் "தன் உறவுகளைத் துண்டித்து வாழும் மனிதன் என்னைச் சேர்ந்தவன் அல்ல' என்ற அல்லாஹ்வின் தூதர் அவர்களின் வசனத்தை மௌலவி உரக்கக் கூறிய போது ஒரு கணம் அதிர்ச்சியுற்றான் அமீனுல்லா.

வீடு வந்து சேர்ந்த அமீனுல்லாவின் மனச்சாட்சி அவனை இருப்புக் கொள்ள விடாது தடுத்தது. இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் கால்கள் நடை பயின்றன.

திடீரென தன் தங்கையை அழைத்து, "ஹைறுன், மகரிப் தொழுதுவிட்டு நோன்புச் சாமான்களை மதினி வீட்டுக்குக் கொண்டு போங்க. நானும் கூட வாரன். வாப்பாவிடமும் சொல்லு எனக் கூறி விட்டு உள்ளே சென்றான்.

ஒரு நோன்பு, ஒரு சுபஹூத் தொழுகை, ஒரு பயான் ஒரு மனிதனில் ஏற்படுத்திய மாற்றத்தைக் கண்டு வியந்தவளாக 'எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ்' எனக் கூறியவாறு ஆனந்தப்பட்டாள் அமினாவின் மதினி ஹைருன்.






**உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள்**
**சில நினைவுகள்**

**அஷ்ரஃப் சிஹாப்தீன்**

சில நினைவுகள் என்று இவ்வாக்கத்துக்கு நான் தலைப்பிட்டிருந்தாலும் கூட ஒரு நீண்ட தொடர் ஒன்றுக்கான தலைப்பு இது. எனவே ஒரு சஞ்சிகைக்கான ஆக்கம் என்ற வகையில் மிகச் சுருக்கமாக இதனை எழுத வேண்டும் என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும்.

1979 ஆம் ஆண்டு இலங்கையில் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய நான்காம் மாநாட்டில் ஒரு பேராளனாகக் கலந்து கொண்டவன் நான். அப்போது எனது வயது 19. நளீமியாவில் மாணவனாக இருந்தேன்.

1999 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்கு என்னை வலிந்து அழைத்துச் சென்றவர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன். விமான நிலையத்தில் இறங்கி பேருந்தில் சென்னை நோக்கிப் பயணிக்கும் போதே

இப்படியொரு மாநாட்டை நாம் ஏன் இலங்கையில் நடத்த முயற்சிக்கக் கூடாது என்ற ஓர் எண்ணம் மனதில் ஓடிற்று. எனது எண்ணத்தை ஜின்னாஹ் அவர்களிடமே பகிர்ந்து கொண்டேன். சென்னை மாநாட்டில் கலந்து கொள்ளும் வெளிநாட்டுப் பேராளர்களுக்கு ஹோட்டல் பிரசிடன்றில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரண்டாம் நாள் ஆய்வரங்குகளும் அங்கேயே நடைபெற்றன. அந்த மாநாடு எனது எண்ணதை மேலும் தூண்டியது. மிகச் சிறந்த ஏற்பாடுகளுடன் மகிழ்ச்சி நிறைந்த திருப்தியான மாநாடு அது.

அருகருகே அமைந்திருந்த அறை களில் தங்கியிருந்தவர்களான கலாநிதி எம்.எஸ்.எம். ஜலால்தீன், பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், கல்விப் பணிப்பாளர் அலியார், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், நான், இசைக்கோ நூர்தீன், ஏஜிஎம். ஸதக்கா, நியாஸ் ஏ. சமத் ஆகியோர் இணைந்து இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் என்ற அமைப்பைத் தொடங்கினோம்.

நாடு திரும்பியதும் பல முறை கூடிப் பேசினோம். இலங்கை அளவில் ஒரு இலக்கிய மாநாட்டை நடத்துவதே சாத்தியம் என்று முடிவெடுத்த நிலையில் அப்போதைய அமைச்சராக இருந்த ஸ்ரீ.மு.கா வின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் இம்முயற்சி பற்றி அறிந்து எம்மை அழைத்துப் பேசினார். சர்வதேச மாநாடாகவே நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அதற்கான பணத்தை அரசிடமிருந்து பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

இந்த அடிப்படையில் 2002 ஆம் ஆண்டு அக்டோபர் 22,23,24 ஆகிய தினங்களில் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாடு நடைபெற்றது. இந்தியா, மலேஷியா ஆகிய நாடுகளிலிருந்து பெருவாரியான தமிழறிஞர்களும் படைப்பாளிகளும் ஆய்வாளர்களும் கலந்து கொண்டனர். இலங்கைப் பேராளர்கள் 325 பேர் கலந்து கொண்டார்கள். முதல் தினம் துவக்க விழா நடைபெற்றது. அதில் அப்போதைய பிரதமராக இருந்த திரு. ரணில் விக்ரம சிங்க கலந்து சிறப்பித்தார். இரண்டாம் நாள் காலை பத்துப் பிரதான தலைப்புகளில் ஆய்வரங்குகள் நடைபெற்றன. அன்று பிற்பகல் முதல் அடுத்த நாள் வரை கவியரங்கு, கலையரங்கு, தீனிசை அரங்கு, உரையரங்கு என்று பல்வேறு அரங்குகளுடன் மாநாடு நிறைவு பெற்றது.

மாநாட்டில் சிறப்பு மலர், ஆய்வரங்குக் கோவை உட்பட மறைந்த புலவர்களதும் இலக்கியவாதிகளினதும் பதினேழு நூல்கள் வெளியிடப்பட்டன. இவற்றுக்கு அப்பால் பல்வேறு எழுத்தா ளர்கள் அன்பளிப்பாக வழங்கிய பதினான்கு நூல்கள் பேராளர் களுக்கு வழங்கப்பட்டன. முக்கியஸ்தர் எட்டுப் பேர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டனர். சான்றோர் பன்னிரண்டு பேரும் பணமுடிப்பு வழங்கி ஏழுபேரும் கௌரவமளிக்கப்பட்டனர். சிரேட்ட படைப்பாளிகள் 31 பேரும் இளம் படைப்பாளிகள் 39 பேரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மாநாட்டு மலரில் மறைந்த படைப்பாளிகள் கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டமையும் மாநாட்டு வெளியீடுகளின் ஒன்றான 'மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்' என்ற கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டமையும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய விடயங்களாகும். நாட்டில் நிலவிய உள் நாட்டுப் போரின் போது பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் துயர்களைப் பாடிய கவிஞர்களின் கவிதை கள் இந்தத் தொகுப்பில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

இலங்கையில் ஒரு மாநாடு நடந்து ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்குப் பிறகு நடந்த இந்த மாநாடு வெளிநாட்டுப் பேராளர்களால் மெச்சப்பட்டமை மாநாடு முடிந்து அவர்கள் நாடு திரும்பியதும் சஞ்சிகை, பத்திரிகைகளில் எழுதிய கட்டுரை, கடிதங்கள், குறிப்புகளிலிருந்து அறியக் கிடைத்தது.

இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் 2016 ஆம் ஆண்டு மற்றொரு மாநாட்டை நடத்துவதற்குத் தீர்மானித்தது. 1966 ஆம் ஆண்டு மருதமுனையில் தொடங்கிய இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றிய அவதானம் 2026 இல் பொன்விழா ஆண்டைக் கொண்டாடுகிறது என்ற அடிப்படையில் இம்முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

அப்போதைய கைத்தொழில், வர்த்தக வாணிப அமைச்சராக இருந்த கௌரவ ரிஷாத் பதியுதீன் அவர்களது தலைமையிலும் அனுசரணையிலும் இம்மாநாடு மூன்று தினங்கள் நடை பெற்றது. இரண்டாம் நாள் ஆய்வு அரங்குகள் பம்பலப்பிட்டியிலும் முதல், மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் கொழும்பு - 07, இலங்கை மன்றக் கல்லூரி அரங்கிலும் நடைபெற்றன. தலா 500 பக்கங்கள் கொண்ட சிறப்பு மலரும் ஆய்வுக் கோவையும் வெளியிட்டு வைக்கப்பட்டன. நாடகம் தவிர்ந்த ஏனைய கலைத்துவ அம்சங்கள் அடங்கியதாக மாநாடு அமைந்திருந்தது.

மாநாட்டின் மூன்றாம் நாள் நாட்டின் அப்போதைய ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு சிலருக்கு விருதுகளை வழங்கி வைத்தார். உயர் நிலையில் 20 பேர் கௌரவிக்கப்பட்டனர். இந்திய இலக்கியவாதிகள் 32 பேரும் இலங்கை சார்பின் சிரேட்ட அடிப்படையில் 48 பேரும் புதிய தலைமுறைப் படைப்பாளிகளில் 90 பேரும் கௌரவம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர்.

மாநாட்டோடு சம்பந்தப்பட்டவர் களது பெயர் விபரங்கள் தவிர்க்கப்பட்டுத் தகவல்களை மட்டும் இங்கு சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இதுகுறித்த ஆய்வு களைச் செய்ய முனைவோர் அல்லது விபரமாக எழுத விரும்புவோர் இம்மாநாடு களின் சிறப்பு மலர்களையும் ஆய்வுக் கோவைகளையும் வாசித்துத் தெரிந்து கொள்ள முடியும். சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவது என்பது சாதாரணமான காரியம் அல்ல. பல்வேறு சிக்கல்களையும் பிரச்சனைகளையும் எதிர்கொண்டபடியே இயங்க வேண்டியிருக்கிறது. இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு இன்னும் எழுதப்படவில்லை. மாநாட்டை நடத்தி யோரில் எஞ்சியிருக்கும் நபர்களும் அவ்வப்போது நடைபெற்ற மாநாட்டு மலர்களும் வெளியீடுகளும் கொண்டே; அது எழுதப்பட வேண்டும். அப்படியொரு முயற்சி மேற்கொள்ளப்படுமா இல்லையா என்பதைக் கூட என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை.

நான்கு இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் பேராளராகக் கலந்து கொண்டவன் என்ற வகையிலும் இரண்டு மாநாடுகளின் செயலாளராக இயங்கியவன் என்ற வகையிலும் எனது அனுபவங்கள் தனியே எழுதப்பட வேண்டும். வயது முதிர ஞாபகங்கள் அழிந்து வரும் நிலையில் அதைக் கூட முழுமையாக எழுத முடியுமா என்ற சந்தேகம் எனக்கு உண்டு. ஆனால் இம்மாநாடுகளின் இயல்பான போக்கு மாற்றப்பட வேண்டும் என்ற வலுவான எண்ணம் எனக்கு உண்டு. அந்த எண்ணங்கள் சிலவேளை எதிர்காலத்தில் பகிரப்பட வாய்ப்பு உண்டு.

# புலர்ந்ததொரு பிறைக்கீற்று



வல்லோனின் அருள் ஜோதியாய்
வந்ததொரு ரமழான்
இன்று பிறைக்கீற்று புலர்ந்து
மலர்ந்ததொரு புது நாள் ஆமாம்
ஈத் முபாறக் எனும் நோன்பு பெருநாள்

அதிகாலை துயிலெழுந்தோம் குளித்தோம்
அத்தர் மனங்கமழ புத்தாடையும்
அணிந்தோம்
உறவுகள் எல்லாம் ஒன்றாய்க்
கூடினோம் திடலில் தொழுகைக்காய்
அல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

முப்பது நாள் நோன்பிருந்து
முழுவதுமாய் இபாதத்தில் நனைந்து
திக்றுடன் திருக்குர்ஆனையும்
புரட்டிப் புரட்டி ஓதினோம் நாம்
இறைவன் உன்திருப்திக்காய்
இன்று தித்திக்கும் பெருநாளில்
முத்தாய்ப்புக்கொடுக்கிறோம்
அழுத விழிகளோடு !

சீரியலால் சீரழிந்த மாந்தரை
சீர்படுத்த நீ வந்தாய்
சின்னத்திரை எல்லாம்
முகத்திரை போட்டுக் கொண்டது
உன் வரவால் சின்னஞ்சிறுசுகள் எல்லாம்
துள்ளித் திரிந்தது உள்ளக்களிப்போடு
இத்தனையும் தந்த உமை வழி அனுப்ப
மனம்தான் இடம் தருமா?
பெருநாள் தினத்தோடு
இல்லை இல்லை முடியவில்லை எம்மால்

அடுத்த வருடம் நீ மீண்டும்
ஜனனிக்கும்போது
நாம் உலகை விட்டு பிரிந்திருந்தால்
கைசேதம் கை சேதமே !

ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு
வடிவங்களில்
சைத்தானிய ஊடுருவல்கள்
படையெடுக்கும் எம் நாட்டில்
ஆனாலும் அத்தனையும் நாம் கடந்து
உம் வரவை எதிர்பார்த்திருந்தோம்
பெரும் ஆவலோடு
ஓ ......ரமழானே ! வந்து எம்
பாவக்கறைகள் போக்கி விடு என்று

ஆசைகள் துறந்தோம் தினம்
தூக்கம் மறந்தோம்
ஆண்டவன் உன் அருளைப்பெற்று விட
விழுந்து விழுந்து அமல்கள் எல்லாம்
விருப்பு டனே நாம் செய்தோம்
வீணாகிப்போய்விடாமல் நாயனே !

விடை கொடு நாம் நாளை
றையானினூடே பயணிக்க

தௌபாவில் உளம் உருகினோம்
தக்வாவில் உளம் திளைத்திருந்தோம்
தானதர்மங்கள் அள்ளி வழங்கினோம் -
தினம் தாராவீஹ்ும் தொழுது வந்தோம்
நூர்ந்து போன உறவுகளையும்
மலரச் செய்தோம் உன் கட்டளைக்காய்
இன்று மன்றாடி நிற்கின்றோம்
இறைவா ! குறைவின்றி ஏற்றுக்கொள்
எம் அமல்களை
ஆயிரம் மாதங்களை விடவும்
சிறந்ததொரு மாதமாம்
லைலத்துல் கத்ர் எனும்
இரவில் லயித்துப் போனது
எங்கள் இதயங்கள் எல்லாம்

ஆண்டியும் அரசனும்
ஓர் அணியாய் நிற்கும்
சமத்துவம் சொல்லித்தந்தாய்
பெருநாள் தொழுகையதால்
மறந்து போன உறவுகளும் இன்று
முகமலர்ந்து நிற்குது எமைக்கண்டு
முசாபஹா செய்து நாமும்
இன்பத்தில் திளைத்து நின்றோம்

நோற்ற நோன்பிலும் பெருநாள் தினத்திலும்
நாம் செய்த பிழைகள் பொறுத்து
நாளை ஜன்னத்துல் பிர்தௌசில்
எல்லோரும் ஒன்றாய் கைகோர்த்திட
நாயனே ! விடைகொடு
இந்நன்னளாம் நோன்புப்பெருநாளில்.

**எம்.சி. மஹ்மூதா ஏ. றஹ்மான்**
ஒலுவில்.



# மறுவாசல்

## அக்கரையூரன்(இலங்கை)

பெருநாள் கொண்டாட தன் அகதி நிலை க்கிரங்கி தன்னை அன்பளிப்புச் சுமையோடு அந்த சீமான் வழியனுப்புவார் என மனக்கணக்குப்போட்டு மகிழ்ந்திருந்த அந்த யாசகி தன் முகம் வாடிய மகளின் கையைப்பற்றிக்கொண்டும் கிடைத்த நூறு ரூபாயை மறுகையில் பொத்திகொண்டும் தாளாத மனச்சுமையுடன் வீதிக்கேறி ஒரு பெருமூச்செறிந்து நடைப்பிணம்போல் நடந்தாள். அவளின் மனக்குமுறலை வேலையாள் உதுமானும் உணராம லில்லை. அவரால் என்ன செய்ய முடியும். அவரும் ஒரு பரம ஏழைதானே.

’எறியக்கூடியவன்ர கையில தடியில்ல’ என்ற கிராமிய பொன் மொழிதான் அந்த நிலைமைக்கு பொருத்தம்.

வீதிக்கு தன் மகளுடன் ஏறிய அந்த யாசகப்பெண் அந்த மாடி வீட்டு வாசலை மிதிக்கும் போதிருந்த உற்சாகக் களை முற்றாக இழந்து கண்கள் உள்ளே செருக எண்ணமெல்லாம் வெறும் கனவாகிப்போன சலிப்பில் துவண்டு போய் சில அடிகள் நடந்தபோது ‘ஹேய் பிள்ள‘ என்றொரு பெண்குரல் வீதியோரமிருந்து.. திடுக்கிட்டு யார் என்ற கேள்விக்குறி அவள்முகத்தில் சலனமிட பரபரப்புடன் குரல் வந்த திக்கை மிரட்சியுடன் நோக்கினாள். சூரியனும் களை இழந்து நிறம்மாறி மஞ்சள் வெயில் மாலையாகிவிட்டது. அவள் சென்ற மாடி வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கார நடுத்தர வயசுப்பெண்தான் இந்த யாசகப்பெண்ணுக்கு குரல் கொடுத்த தென்று உறுதியாயிற்று. தன் மகளுடன் அந்தப்பெண்ணருகே சென்றாள் இந்த யாசகி.

‘என்னம்மா எந்த ஊர் நீ.? இதுயார் ? மகளா?.‘

சரிந்துகிடந்த முக்காட்டை சரியாக தலையில் ஒழுங்காக போட்டுக்கொண்டே தாயையும் மகளையும் வீட்டுக்கு அழைத்துச்சென்றாள் அந்தப்பெண்.

’அந்த பெரிய பங்களா வீட்ல கனநேரமா நீயும் மகளும் நிண்டயளே. என்ன அள்ளித்தந்தாங்களா? ‘

அவள் வெளியூர் நோன்பு கால யாசகப் பெண் என்பதை யூகித்தறிந்து கொண்டு கேள்வி மேல் கேள்வி எழுப்பினாள் ஒரு கேலியான நமுட்டுச் சிரிப்புடன் .அந்த மாடிவீட்டு சீமான்குடும்ப அசல் தர்மகுணத்தை நன்கு அறிந்த கிண்டல்தான் அது. பக்கத்து வீட்டு நாடி பார்க்காமலா இருப்பாள். அது உலக இயல்புதானே.

‘ ஓம் ராத்தா. அந்த பெரிய வீட்டுக்கு போனோம். நான் பாத்த வீடுகள்ள இந்தப் பகுதியில அந்த வீடு மாதிரி பெரிய ஒசந்த வீடு எங்கயும் இல்ல.பெரிய பணக்கார வீடுபோல இரிக்கி. பெருநாளக்கி உடுக்க ஏதாவது கிடைக்கும் எண்ட நம்பிக்கை. நாங்க முதன் முதலா இந்தப்பகுதிக்கு இப்பதான்வந்த. கஸ்டத்தையெல்லாம் அந்த வீட்டுக்காரவர்க்கிட்ட சொன்னன் ஊட்டுக்காரபொம்பளயும் வந்தா. அவபெரிசா முகம் கொடுக்காம உள்ள போயிற்றா. அதால வீட்டுக்காரரும் எங்கிட நிலமய விபரமா கேக்கிறதுக்கு மனமில்லாம காசு 100 ரூபா தந்து எங்கள போகச்சொல்லிற்றார்.‘

அந்த சம்பாஷனை நடைபெறும் தருணத்தில் ஆண் ஒருவரும் இரண்டு சிறிய பருவமெய்தாத பெண் குழந்தைகளும் அங்கே சூழ்ந்து விட்டனர். அந்த நடுத்தர வயது ஆண் அந்த வீட்டுச் சொந்தக்காரர்தான். இரண்டு பெண்குழந்தைகளும் சகோதரிகள் போல் காணப்பட்டனர்.

அந்த யாசகப் பெண்ணையும் அவளது இள வயது மகளையும் வைத்த கண் வாங்காமல் அந்த வீட்டு இருசகோதரிகளும் தாயின் முந்தானையை பற்றிக்கொண்டு கதை கேட்டுக்கொண்டிருந்தனர் சோகத்துடன். அந்த வீட்டுக்கார ஆண் மனைவியைப்பார்த்து ‘மரியம்! அவடத்தில கதைச்சிக்கிருக்காம இஞ்ச திண்ணக்கி கூட்டி வாங்க ‘என்றதும் வீட்டுக்காரப் பெண் அந்த ஏழைப் பெண்ணையும் மகளையும் திண்ணைக்கு அழைத்து வந்து அங்கு கிடந்த பழைய ரப்பர் கதிரைகளை கொடுத்து அமரவைத்தனர் .அவ்வீடு பூரணமாக கட்டி முடிக்கப்படாத சிறிய இரண்டறைகள் கொண்ட கல்வீடு. பூசாமல் செங்கல் அப்படியே தெரிந்தது. வீட்டுக்காரர் அரிசி ஆலையில் கூலி வேலை செய்பவர். வசதி குறைந்த குடும்பம் போல் தென்பட்டது அவர்கள் நிலைமை. இன்று அவருக்கு வேலை இல்லை.அவரும் குடும்பத்துடன் இன்று நோன்பாளி .அந்த யாசகப்பெண் சற்று பரபரப்புடன் ‘நாங்க எங்கட ஊர்க்காராக்கள் தங்கியிரிக்கிற ஒரு வீட்டுக்கு போகணும். அங்க போய் நோம்பு திறக்கணும்.‘என்று அவசரப்பட்டாள்.

அதற்கு அந்த வீட்டுக்கார பெண் ‘ஒண்டும் அவசரமில்ல நேரமிரிக்கி. எங்க வீட்டில இண்டக்கி நோம்பு திற.‘ என்றாள்.



ஈமான்தாரியான ஒரு பெண்ணின் லட்சணம் தெரிந்தது அவளிடத்தில்.

‘இல்லம்மா பெருநாளக்கி ரெண்டு நாள்தான் இரிக்கி. நாளைக்கி நாங்க ஊருக்குப்போகணும் .‘

‘எந்தஊரும்மா நீங்க.‘ வீட்டுக்காரப் பெண் கேட்டாள்.

‘நாங்க மட்டக்களப்பு பக்கமிருக்கிற ஒரு முஸ்லிம் கொளனியில வசிக்கம். போன வெள்ளத்தில வீடெல்லாம் சேதமாயிற்று. வீட்டுச்சாமானெல்லாம் தண்ணில பெய்த்து. கொஞ்சம் போல நிவாரண சாமான் அரசாங்கம் தந்தாங்க. அது என்னத்துக்கு காணும். இப்புடித்தான் ஊர் ஊரா கையேந்தி திரியிறம் ‘என்று தன் கரை சேரா கதியை கண்கலங்க விபரித்தாள்.

‘இது மகளா‘? என்று கூட வந்த சிறுமியை காட்டி வீட்டுக்காரி மரியம்



கேட்டதும் ‘ஓம் ராத்தா‘ என்றாள் அந்த யாசகி.

‘ஒண்ட ஊட்டுக்காரரர் எங்க.? இரிக்காரா? என்ன செய்ரார்?‘ மரியம் கேட்டதும் அந்த ஏழைப்பெண்ணின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் சொரிந்தது.

‘மௌத்தாயிற்றாரா? மரியம் கேட் டாள்‘ கவலையுடன்.

இல்லம்மா அவர் கூலித்தொழிலாளியா வேல செய்தவர். வெளியூராள். இந்தப் பிள்ள வயிற்றில இரிக்கக்க அவர் என்ன விட்டிட்டு போயிட்டார். எங்கே யெண்டு இதுவர தெரியா.ஒரு தொடர்பும் இல்ல. என்ர தாய் தகப்பனும் காலமாயிற்றாங்க. அவங்கதான் என்ன கவனிச்சி வந்த. இப்போ கவனிக்க ஆருமே இல்ல. இப்படியே ஊர்ஊரா போய் கையேந்தி சீவிக்கிறோம்‘. தன் நிர்க்கதியான அவல நிலையை விபரித்து அவள் விலா வாரியாக கூறியதும் அங்கிருந்த எல்லோரும் கண்கலங்கி நின்றனர்.

இறைவனின் தீர்ப்பை யாரிடம் முறையிடுவது. எழுதியவன் அவன்தானே. உலகம் சோதனைக்களம் .

செல்வமும் வறுமையும் சோடியாக பிணைந்துதான் உலகம் இயங்குகிறது.

அதில் நன்மையையும் தீமையையும் ஆதாரமாய் வைத்து இறைவன் திட்ட மிட்டு இயக்குகிறான். உலகத்தில் ஏழை களுக்கென்று மார்க்க சட்டத்திலும், வேதத்திலும் சகாத்தெனும் ஏழை வரியும் சதகா எனும் தான தர்மமும் இஸ்லாம் என்ற இனிய மார்க்கத்தில் தான் உண்டு. ஏழைகளுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு

ஈயும் குணத்தை கௌரவிக்க ஈதுல் பித்ர் என்று பெருநாள் தினமே இஸ்லாத்தில் மட்டுமே உண்டு.

வீட்டுக்காரர் மனைவி மரியத்தைப் பார்த்து 'அவர்களை இங்கே நோன்பு திறக்க வையுங்கள் 'என்றார்.

மரியம் 'ஓம் சரி. நானும் அதத்தான் நினச்சேன் ' என்று கூறி அந்த பெண்ணிடம் 'புள்ள எங்களோட இஞ்சதான் நீயும் நோம்பு திறக்கணும்'. என்றதும் அந்த அன்புக்கட்டளையை மீற முடியாமல் தயக்கத்துடன் 'சரிம்மா' என்றாள். மரியம் உள்ளே சென்று கஞ்சி ஈத்தம்பழம் பலகாரங்கள் பழங்கள் கொண்டு வந்தாள்.

அந்த வீட்டுக்காரர் உள்ளே வந்த மனைவியுடன் சிறிது நேரம் அந்தயாசகப் பெண்ணையும் மகளையும் பற்றி உரை யாடிக்கொண்டிருந்தார்.

அப்போது பள்ளிவாசலிலிருந்து ஒலி பெருக்கி மஃரிப் தொழுகைக்கான பாங்கு அதான்சத்தத்தை எழுப்பியது. அது நோன்பு திறப்பதர்க்கான செய்தியும்தானே. அங்கு விரித்திருந்த ரப்பர் பாயில் எல்லோரும் அமர்ந்து கொண்டனர். வீட்டுக்காரர் சற்று தூரத்தில் வேறொரு பாயில் அமர்ந்து நோன்பு திறக்க எல்லோரையும் அவசரப்படுத்தினார். அந்த பரமஏழையான அபலைப் பெண்ணுடன் நோன்பு திறந்ததும் வீட்டார்க்கு அளவிலாத இன்ப நெகிழ்ச்சியாகவே அந்த நேரத்தை உணர்ந்தனர். அவர்களுக்கு அது ஒரு புதிய அனுபவம். அவர்களுக்குமட்டுமல்ல அந்த யாசகப்பெண்ணுக்கும் மகளுக்கும்தான்.

நோன்பு திறக்கும் நேரத்தில் பெறும் மன மகிழ்ச்சிக்கு நோற்ற நோன்பின் இறையருளும் நோன்பின் மகத்துவமும் தான்காரணம். இறைவனின் மனப்பூர்வமான கடாட்சம் நோன்பில் தானே உண்டு.

யாசகப்பெண் விடை பெற்றுச் செல்ல எழுந்து, நாங்க வ ரட்டுமா? .அல்லாஹ் உங்களுக்கு பரகத்செய்யட்டும் என்றாள். அப்போது வீட்டுக்காரர் மூத்தமகள் சொல்லிவைத்தாற்போல் இரண்டு அழகிய பிளாஸ்ரிக் பைகளை அந்த யாசகப் பெண்ணிடம் ஒப்படைத்தாள். அவள் கண்கள் அகலத்திறந்து தயக்கத்துடன் அவற்றை பெற்றுக்கொண்டு 'என்னம்மா இதெல்லாம் 'என்றாள் இன்ப அதிர்ச்சியில்.

மரியம் சிரித்துக்கொண்டே 'அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ பெருநாளக்கு உடுக்க உனக்கொரு சாரி. மகளுக்கு ஒரு சல்வாரி. எங்களுக்கு துஆ கேள்' என்றாள். அதே நேரம் அவர்களது இளைய மகள் 500ரூபா தாளொன்றை அந்த யாசகியிடம் நீட்டினாள். வீட்டுக்காரி மரியம் அவளைப்பார்த்து 'நாளைக்கு ஊருக்குப்போக செலவுக்கு இந்த காச வச்சிக்கோ.'

கண்களில் நீர்பனிக்க அந்த யாசகத் தாயும் மகளும் வீதிக்கேறி நடந்து சென்றார்கள்.

மனைவிக்கு பெருநாளைக்கு கடையி லிருந்து தெரிவு செய்து வாங்கி வந்த சாரிகளில் ஒன்றும் மகள் மாருக்குவாங்கி வந்த சல்வாரி ஆடைகளில் அந்த ஏழைத்தாயின் மகளுக்கு அளவான ஒன்றையுமே அவர்கள் பெருநாள் அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள்.

ஈகைத்திருநாளாம் ஈதுல் பித்ர் இவர்களால் அர்த்தத்துடன் இவர்களது அர்ப்பணிப்புகளாலும் கண்ணியம் பெறுகிறது.

# தெளிவு

மத்தொனையூரான்

ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின்

மிம்பர் மேடையில் கணீரென்ற குரலில் பயான் நிகழ்த்திக் கொண்டிருந்தார் இஷ்பாக் மௌலவி.

பெருநாள் தினத்தின் மகிழ்ச்சி எல்லோரையும் சூழ்ந்திருந்து. விதவிதமான அத்தர் வாசனையும் புத்தாடைகளின் வாசனையும் காற்றிலே கலந்து விட மஸ்ஜித்தின் அழகு கண்கொள்ளா காட்சி யாக இருந்தது.

பயான் நிகழ்த்தி விட்டு எல்லோருட னும் முஸாபஹா செய்து விட்டு தன்னுடன் வந்த மகனைக் காணாத இஷ்பாக் மௌலவி திடுக்கிட்டு அக்கம்பக்கம் பார்க்கலானார்.



மஸ்ஜித் கேட்டருகில் சின்னவன் அஹ்மத் யாருடனோ சந்தோஷமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்.

பக்கத்தில் சென்று பார்த்த மௌலவிக்கு ஒரு கணம் என்ன செய்வதென்று புரியவில்லை.

அதற்கிடையில் வாப்பாவைக் கண்ணுற்ற அஹ்மத் ‘வாப்பா நாங்க அமான் மச்சான் வீட்டுக்குப் போவோமா‘ என்றபடி கைகளைப் பற்றிக் கொண்டான்.

அங்கே அமானைக் கண்டதும் செய்வதறியாது தடுமாறினார் இஷ்பாக் மௌலவி.

‘மாமா பெருநாள் தினத்தில் குடும்ப உறவுகள தேடிப் போய் ஸலாம் சொல்லுங்க என்று இப்ப தானே பயான் பண்ணினீங்க‘ வலுக்கட்டாயமாய் வரவழைத்துக் கொண்ட துணிச்சலில் பேசிவிட்டுத் தலையைக் கீழே போட்டுக் கொண்டான் அமான்.

‘மாஷாஅல்லாஹ் வாங்க மகன் நாங்க மாமி வீட்டுக்குப் போவோம்.‘ பெருமூச்சுடன் மகனின் கைகளைப் பற்றிக் கொண்டார் மௌலவி இஷ்பாக்.

ஒரு காணிப் பிரச்சினையின் மௌன யுத்தம் தீர்ந்த மகிழ்ச்சியில் இன்றைய பெருநாள் இரட்டிப்பாய் இனித்தது.

# வரலாற்றுப் பார்வையில் இஸ்லாமிய இலக்கியக் கழக மாநாடுகள்

பேராசிரியர் முனைவர் மு.இ.அகமது மரைக்காயர் பொதுச் செயலாளர்

இஸ்லாமிய இலக்கியக் கழகம்

முற்காலத்தில் சங்கங்கள் வாயிலாகத் தமிழ் வளர்க்கப்பட்டதைப் போல தற்காலத்திலும் இலக்கிய அமைப்புக்கள் மூலம் தமிழ் வளர்ச்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பல அமைப்புக்கள் இலக்கிய வளர்ச்சிக்காகத் தொடங்கப் பெற்ற போதிலும் சில அமைப்புகளே தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் இஸ்லாமிய இலக்கியக் கழகம் 1973- ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று இன்றுவரை தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாக்கி வருகின்றது.

பதினாறாம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை தமிழில் சிற்றிலக்கியங்களே பெருமளவில் படைக்கப்பட்டுக் கொண்டிருந்த சூழலில் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் சிற்றிலக்கியங்களோடு காப்பியங்களையும் படைக்கத் தொடங்கினர். இப்பணி இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இருப்பினும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரப்பும் முஸ்லிம்கள் பல்வேறு நிலைகளில் தமிழுக்கு ஆற்றி வருகின்ற அளப்பெரும் பணியும் தமிழ் கூறு நல்லுலகில் அறியப்பட வேண்டிய நிலையிலே இருக்கின்றன. இந்நிலையை மாற்றி அன்னைத் தமிழ் மொழிக்கு முஸ்லிம்கள் ஆற்றியுள்ள அருந்தொண்டினை உலகிற்கு உணர்த்திட வேண்டும், இஸ்லாமியத் தமிழ் நூல்களின் மீதான ஆய்வுப் பார்வை படர வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கில் எழுந்தது தான் இஸ்லாமிய இலக்கியக் கழகம்.

**தோற்றம்**

இஸ்லாமிய இலக்கியக் கழகம் தமிழ் நாட்டிலுள்ள திருச்சி, ஜமால் முகம்மது கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் பெரும் புலவர் சி.நயினார் முகம்மது மற்றும் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் இ.ப. முகம்மது இஸ்மாயில் ஆகியோரின் பெரும் முயற்சியால் தொடங்கப்பட்டது. பேராசிரியர் கா. அப்துல் கபூர், செந்தாமரை கே. பி. எஸ். ஹமீது, மௌலானா எம். அப்துல் வஹ்ஹாப், எம். ஆர். எம். அப்துற் றஹீம், பேராசிரியர் கேப்டன் என்.ஏ. அமீர் அலி, கவிக்கோ அப்துல் ரகுமான், டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லா, கலாநிதி ம. மு. உவைஸ், எம். ஏ. அஜீஸ் முதலியோர் பொதுக்குழு உறுப்பினர்களாக அமையப் பேராசிரியர் சி. நயினார் முகம்மது அவர்களும் பேராசிரியர் இ.ப. முகம்மது இஸ்மாயில் அவர்களும் இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் அமைப்பாளர்களாகப் பொறுப்பேற்றனர். இஸ்லாமிய இலக்கியக் கழகம் 1973- ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் நாள் தோற்றம் பெற்றது.

**உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முதல் மாநாடு**

உலகளாவிய நிலையில் இஸ்லாமியத் தமிழறிஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் பங்கேற்ற முதல் மாநாடு 1973- ஆம் ஆண்டு மே திங்கள் 12 மற்றும் 13 ஆகிய

இரு நாள்கள் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் தலைமையில் “வழிகாட்டும் வான்மறை” என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. அன்றைய தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக் பாட்சா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், ஏ. எம். அப்துல் அஜீஸ் முதலானோர் பங்கு பெற்ற கருத்தரங்கம் நடந்தது. கலாநிதி ம.மு. உவைஸ், செந்தாமரை கே. பி. எஸ். ஹமீது ஆகியோர் தலைமையில் ஆய்வரங்கங்களும் நடைபெற்றன. இந்த மாநாட்டில் பல்லாக்கு வலியுல்லா எழுதிய அல்லாஹ் முனாஜாத் என்னும் நூல் வெளியிடப்பெற்றது. இந்நூல் தான் இஸ்லாமிய இலக்கியக் கழக மாநாட்டில் வெளியிடப்பெற்ற முதல் நூல் என்பது சுட்டத் தக்கது. மாநாட்டில் நூல் கண்காட்சியும் நடைபெற்றது. சீறாப்புராணம், சின்ன சீறா, புதூகுஷ்ஷாம், திருக்காரணப் புராணம், திருமணிமாலை, இராஜநாயகம், கனகாபிஷேக மாலை, நாகூர்ப் புராணம் முதலிய பழந்தமிழ் நூல்கள் கண்காட்சியில் இடம்பெற்றன. பேராசிரியர் கா.அப்துல் கபூர், ஏ.எம்.அப்துல் அஜீஸ், கலாநிதி ம.மு.உவைஸ், பனைக்குளம் அப்துல் மஜீது, பன்னுலாசிரியர் சையத் இப்ராஹிம் ஆகியோரின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி அவர்களுக்குச் சிறப்புச் செய்யப் பெற்றது.

**இரண்டாம் மாநாடு**

இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் இரண்டாவது மாநாடு 1974- ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8, 9 ஆகிய இரண்டு நாள்கள் சென்னைப் புதுக் கல்லூரியில் நடைபெற்றது. நீதியரசர் மு.மு. இஸ்மாயீல் மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். தொடக்க விழாவுக்கு மௌலானா அப்துல் வஹ்ஹாப் தலைமை தாங்கினார். இம்மாநாட்டிலும் கவியரங்கம், கருத்தரங்கம், ஆய்வரங்கம் ஆகியவற்றுடன் இசையரங்கமும் நடைபெற்றது. மாநாட்டில் அமைக்கப்பட்ட நூல் கண்காட்சியில் 1000க்கும் மேற்பட்ட நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. எட்டு நூல்கள் வெளியிடப்பட்டன. ஆர். பி. எம். கனி, மஹதி, ஆரிபு நாவலர் முதலியோர் பொற்கிழி வழங்கப் பெற்றுச் சிறப்பிக்கப்பெற்றனர். சிராஜுல் மில்லத் அப்துல் சமது தலைமையில் நடைபெற்ற நிறைவு விழாவில் சிறப்புரை ஆற்றிய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் தமது உரையில் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் இஸ்லாமியத் தமிழ் ஆராய்ச்சித் துறை தொடங்கப்படும் என்றும் அதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து முதல் தவணையாக 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதாகவும் அறிவித்தார்.

**மூன்றாம் மாநாடு**

காயல்பட்டினத்தில் 1978 ஆம்- ஆண்டு ஜனவரித் திங்கள் 13, 14, 15 ஆகிய மூன்று நாள்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மூன்றாம் மாநாடு நடைபெற்றது. தொடக்க விழாவுக்கு அமைச்சர் மாண்புமிகு இராசா முகம்மது தலைமை வகித்தார். நீதியரசர் மு.மு.இஸ்மாயீல் தொடக்க உரையாற்றினார். முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆய்வரங்கத்தைத் தொடங்கி வைத்தார். 15. 01. 1978 காலையில் சவுதி அரேபியா, ஈராக் ஆகிய நாட்டுத் தூதர்கள் கலந்து கொண்ட அரபுத் தமிழ்ப் பண்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. செந்தாமரை கே. பி. எஸ். ஹமீது, கவிஞர் சாரண பாஸ்கரன், கவி க. மு. ஷெரிப், கவிஞர் சிராஜ் பாகவி ஆகியோருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. இம்மாநாட்டில் 35 ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தளிக்கப்பெற்றன.

மாநாட்டில் பங்கேற்ற கல்வி அமைச்சர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறை தொடங்கத் தமிழக அரசு இரண்டு இலட்சம் ரூபாய் வழங்குவதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கலாநிதி ம. மு. உவைஸ் அவர்களைத் தலைவராகக் கொண்டு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் துறை தொடங்கப்பட்டமை மாநாட்டின் பெரும் வெற்றியாகும்.

**நான்காம் மாநாடு**

1979- ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் நாள் இலங்கைத் தலைநகர் கொழும்பில் நான்காம் மாநாடு தொடங்கியது. நீதியரசர் இஸ்மாயீல் தலைமையில் இலங்கை அதிபர் மேதகு ஜே. ஆர். ஜெயவர்த்தன தொடக்க உரை ஆற்றினார். புரட்சிக்கமால் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர் பதின்மர் கவிதை வழங்கினர். நான்கு அமர்வுகளாக நடைபெற்ற ஆய்வரங்கத்தில் 45 ஆய்வுக் கட்டுரைகள் அளிக்கப்பெற்றன. மாநாட்டில் பன்னிரண்டு நூல்கள் வெளியிடப்பெற்றன. பேராசிரியர் வித்யானந்தன், சிராஜுல் மில்லத் அப்துல் சமது, மௌலானா அப்துல் வஹ்ஹாப், ஹாஃபிஸ் சையது அகமது, இசைமுரசு இ.எம். ஹனீபா ஆகியோர் சிறப்புச் செய்யப்பெற்றனர். நிறைவு விழாவில் இலங்கை பிரதமர் மாண்புமிகு ஆர். பிரேமதாச கலந்து கொண்டு சிறப்பித்தார். நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் கலந்து கொண்ட சிறப்புமிக்க ஒன்றாக உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நான்காம் மாநாடு அமைந்தது.

**ஐந்தாம் மாநாடு**

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஐந்தாம் மாநாட்டினைக் கீழக்கரைப் பெருமக்கள் பொறுப்பேற்று நடத்தினர். எம்.இத்ரீஸ் மரைக்காயர் வரவேற்புக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்கப் பேராசிரியர் சி. நயினார் முகம்மது, கவிக்கோ அப்துல் ரகுமான், கேப்டன் என்.ஏ. அமீர் அலி, டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே.உபைதுல்லா, கலாநிதி ம.மு. உவைஸ் ஆகியோர் மாநாட்டு அமைப்பாளர்களாகச் செயல்பட்டனர். 1990- ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31 ஆகிய மூன்று நாள்கள் ஐந்தாம் மாநாடு கீழக்கரையில் நடைபெற்றது. மலேசியத் தொலைத் தொடர்பு அமைச்சர் டத்தோஸ்ரீ ச. சாமிவேலு தொடக்க உரையாற்றினார். சிராஜுல் மில்லத் அப்துல் சமது தலைமையில் உரையரங்கமும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் கருத்தரங்கமும் நடைபெற்றன.

இம்மாநாட்டில் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார். 12 அமர்வுகளாக நடைபெற்ற ஆய்வரங்கத்தில் 43 ஆய்வுக் கட்டுரைகள் அளிக்கப்பெற்றன. பேராசிரியர் நபீஸா கலீம் தலைமையில் கருத்தரங்கம், கே.கமருன்னிஸா தலைமையில் கலந்துரையாடல், சௌந்தரா கைலாசம் தலைமையில் கவியரங்கம் என மகளிர்க்கான தனி நிகழ்ச்சிகளும் இம்மாநாட்டில் அரங்கேறின. மௌலானா அப்துல் வஹ்ஹாப் தலைமையில் மார்க்க அறிஞர் அரங்கம் நடைபெற்றது. தமிழில் முனைவர் பட்டம் பெற்ற 21 ஆய்வாளர்களுக்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் தமிழ்க் குடிமகன் நிறைவுப் பேருரை ஆற்றினார். மாநாட்டில் சிலம்பொலி செல்லப்பன், நீதியரசர் மு.மு. இஸ்மாயீல், பேராசிரியர் சி.நயினார் முகம்மது, எம்.ஆர்.எம். அப்துற் றஹீம், செய்யிது முஹம்மது ஹஸன், கவிக்கோ அப்துல் ரகுமான் உள்ளிட்ட 19 அறிஞர்களுக்கு பொற்கிழி வழங்கப் பெற்றது. 25 நூல்கள் வெளியிடப்பெற்றன.

**ஆறாம் மாநாடு**

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆறாம் மாநாடு கூத்தாநல்லூர் மற்றும் பொதக்குடி புரவலர்களின் துணையோடு சென்னையில் 1999 நவம்பர் 30, டிசம்பர் 1, 2 ஆகிய மூன்று நாள்கள் நடைபெற்றது. இம்மாநாட்டில் 35 நூல்கள் வெளியிடப்பெற்றன. ஆய்வரங்கத்தில் 51 கட்டுரைகள் வாசித்து அளிக்கப்பெற்றன. தமிழக ஆளுநர் கலந்து கொண்ட தொடக்க விழாவில் தமிழறிஞர்கள் 16 பேர் சிறப்புச் செய்யப்பெற்றனர். தமிழக முதல்வர் கலைஞர் கலந்து கொண்ட நிறைவு விழாவில் 12 தமிழ் அறிஞர்கள் பத்தாயிரம் ரூபாய் பொற்கிழியுடன் பாராட்டப் பெற்றனர். இம்மாநாடு இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் வெள்ளி விழா மாநாடாக அமைந்தது.

### ஏழாம் மாநாடு

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஏழாம் மாநாடு சென்னையில் 2007-ஆம் ஆண்டு மே திங்களில் 25, 26, 27 ஆகிய மூன்று நாள்கள் நடைபெற்றது. இம்மாநாட்டில் இலங்கை அமைச்சர்கள் எம். எஸ். எஸ். அமீர் அலி, மலேசிய அமைச்சர் ஜி. பழனிவேலு, ஒன்றிய அமைச்சர் ஜி. கே. வாசன், தமிழ்நாடு நிதி அமைச்சர் க. அன்பழகன் முதலியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். ஆய்வரங்கம் 19 அமர்வுகளாக நடைபெற்றது. சிலம்பொலி செல்லப்பனார் தலைமையில் நடந்த கருத்தரங்கத்தில் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன், பீட்டர் அல்போன்ஸ் முதலானோர் பங்கு பெற்றனர். கவிஞர் மு. மேத்தா தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. நிறைவு விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஓர் இலட்ச ரூபாய் பொற்கிழியுடன் உமறுப்புலவர் விருது வழங்கப் பெற்றுச் சிறப்பிக்கப்பட்டார். இம்மாநாட்டில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தமது நிறைவுரையில் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று அறிவித்தார். அவ்வாறே பின்னர் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டு ஆணை பிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

### எட்டாம் மாநாடு

கும்பகோணத்தில் கிஸ்வா அமைப்பின் துணையோடு உலக இஸ்லாமிய எட்டாம் மாநாடு 2014- ஆம் ஆண்டு பிப்ரவரி 14, 15, 16 ஆகிய மூன்று நாள்கள் நடைபெற்றது. இம்மாநாடு முஸ்லிம்களின் இசைப் பங்களிப்பை முதன்மைப் படுத்தி அமைந்த மாநாடாக நிகழ்ந்தது. கவிஞர் சீனி நைனா முகமது தலைமையில் கவியரங்கமும், பேராசிரியர் தி.மு.அப்துல் காதர் தலைமையில் பட்டிமன்றமும், இசை ஆய்வாளர் ந.மம்மது தொடங்கி வைக்க 8 அமர்வுகளாக ஆய்வரங்கமும் நடைபெற்றன. இசை முரசு நாகூர் இ. எம். ஹனீபா ஓர் இலட்ச ரூபாய் பொற்கிழியுடன் உமறுப்புலவர் விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். பத்தாயிரம் ரூபாய் பொற்கிழியுடன் கூடிய இலக்கியச் சுடர் விருது பதின்மூவருக்கும் இசைச் சுடர் விருது பதின்மருக்கும் வழங்கப்பெற்றன. வாழ்நாள் சாதனை யாளர் விருது எண்மருக்கு வழங்கப் பெற்றது. இம்மாநாட்டில் 20 நூல்கள் வெளியிடப்பெற்றன. ஒன்பதாம் மாநாடு உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு திருச்சி எம். ஐ. இ. டி. கல்லூரியில் 2025- ஆம் ஆண்டு மே திங்கள் 9, 10, 11 ஆகிய மூன்று நாள்கள் சிறப்பாக நடைபெற்றது. தொடக்க விழாவுக்குக் கழகத் தலைவர் பேராசிரியர் சேமுமு.முகமதலி தலைமையேற்கப் பொதுச் செயலாளர் பேராசிரியர் மு. இ. அகமது மரைக்காயர் வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தொடக்கவுரையாற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சிறப்புரையாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்விருக்கை அமைக்க வேண்டும், திருநெல்வேலியில் அமைய உள்ள நூலகத்திற்குக் காயிதே மில்லத் அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டும் என்னும் இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தீர்மானங்களை ஏற்று தமிழ்நாடு அரசு ஆவன செய்யும் என்று மாண்புமிகு முதலமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டார். மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் கே. என். நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சா.மு. நாசர் உள்ளிட்ட அமைச்சர்களும் சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பலரும் தொடக்க விழாவில் பங்கேற்றனர்.

முனைவர் பி. எஸ். சையது மஸ்வூது ஜமாலி தலைமையில் நடைபெற்ற சமய நல்லிணக்கக் கருத்தரங்கில் மௌலவி ஓ. எம். அப்துல் காதர் பாகவி, எஸ். பீட்டர் அல்போன்ஸ், தவத்திரு திருவடிக்குடில் சுவாமிகள், அருள் திரு. ஜெகத்கஸ்பர் ராஜ், எம். அப்துல் ரஹ்மான் ஆகியோர் உரையாற்றினர். கழக நெறியாளர் பேராசிரியர் தி.மு. அப்துல் காதர் தலைமையில் இருபத்தொரு கவிஞர்கள் பங்கேற்ற "சமூகத் தீமைகளைச் சாய்ப்போம்" என்ற தலைப்பில் அமைந்த கவியரங்கம் நடைபெற்றது.

ஆய்வரங்கத் தொடக்கவிழா முனைவர் ஜெ. ராஜா முஹம்மது தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர் ஆய்வரங்கத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். பதினோர் அமர்வுகளில் ஆய்வாளர்கள் தங்களது கட்டுரைகளை வாசித்து அளித்தனர்.

மார்க்க அறிஞர் அரங்கம் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி பி.ஏ.காஜா முயீனுத்தீன் தலைமையிலும் மகளிர் அரங்கம் தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர் பாத்திமா முசப்பர் தலைமையிலும் நடைபெற்றன. வழக்குரைஞர் எம். ஜி. கே. நிஜாமுதீன் தலைமையில் "ஊடகம் - கவலையும் கவனமும்" என்ற தலைப்பில் ஊடக அரங்கமும், பேராசிரியர் நை.மு.இக்பால் தலைமையில் கருத்தரங்கமும் நீதியரசர் ஜி. எம். அக்பர் அலி தலைமையில் நிறைவு விழாவும் நடைபெற்றன.

இம் மாநாட்டில் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அவர்களுக்கு ஓர் இலட்ச ரூபாய் பொற்கிழியுடன் உமறுப்புலவர் விருது வழங்கப்பட்டது. பேராசிரியர் சே. சாதிக் அவர்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன் கவிக்கோ விருது வழங்கப்பெற்றது. எம். ஐ. இ. டி. கல்விக் குழுமத் தலைவர் அல்ஹாஜ் முஹம்மது யூனுஸ், தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர் அல்ஹாஜ் கே.நவாஸ் கனி, கண்ணாடி வாப்பா அறக்கட்டளை நிறுவனர் அல்ஹாஜ் செய்யது அப்துல் காதர், சிங்கப்பூர் எம். இ. எஸ். குழுமத் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம். அப்துல் ஜலீல், ஆம்பூர் ஸ்டார் பிரியாணி மேலாண்மை இயக்குனர் அல்ஹாஜ் எம் அனீஸ் அகமது, சிங்கப்பூர் ராயல் கிங்ஸ் குழுமத் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எஸ். சிராஜுதீன், மலேசியா டாக்டர் டத்தோ சையது இப்ராஹிம், துபாய் அலைடு மோட்டார்ஸ் மேலாண்மை இயக்குனர் அல்ஹாஜ் ஏ. ஜே. கமால், துபாய் எலிவேட்டர் ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் மேலாண்மை இயக்குனர் அல்ஹாஜ் எம்.ஜே. முஹம்மது இக்பால் ஆகியோருக்கு இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் சார்பில் இலக்கியக் காவலர் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பெற்றது.

நிறைவு விழாவில் டத்தோ ஸ்ரீ முஹம்மது இக்பால், டத்தோ வீரா சாகுல் ஹமீது தாவூத், அல்ஹாஜ் எம். சாகுல் ஹமீது, அல்ஹாஜ் ஏ.முஹம்மது மஃரூஃப், அல்ஹாஜ் எஸ். ஷர்புதீன், அல்ஹாஜ் எல்.

கே. எஸ். சையது அஹமது, டாக்டர் கே. எம். அப்துல் ஹஸன், எம். ஜி. கே. உசேன் மாலிம், அல்ஹாஜ் பீ. அப்துல் காதர் ஆகியோருக்கு இலக்கியப் புரவலர் விருது வழங்கப்பட்டது.

ஜரினா ஜமால், பாலமுனை பாறூக், கலீலுர் ரஹ்மான் மன்பயீ, அபூஹாஷிமா, முகம்மது சலாஹுத்தீன், ஆர்னிகா நாசர், அப்சல், அகமது கபீர், சேயன் இப்ராஹிம், காயல் மகபூப் முதலான 28 எழுத்தாளர்களுக்கு 20000 ரூபாய் பொற்கிழியுடன் இலக்கியச்சுடர் விருது வழங்கப் பெற்றது. மாநாட்டில் 116 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக் கோவை, சிறப்பு மலர் மற்றும் 30 நூல்கள் வெளியிடப் பெற்றன.

**மாநில மாநாடுகள்**

இஸ்லாமிய இலக்கியக் கழகம் உலகளாவிய நிலையில் ஒன்பது மாநாடுகளை நடத்தியுள்ளதோடு மாநில அளவிலும் மூன்று மாநாடுகளை நடத்தியுள்ளது. 2008-ஆம் ஆண்டு திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் முதல் மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் நடைபெற்ற ஆய்வரங்கத்தில் ஆய்வாளர் அறுபத்து எண்மர் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தளித்தனர். கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுக்கு ஓர் இலட்ச ரூபாய் பொற்கிழியுடன் உமறுப் புலவர் விருது வழங்கப்பெற்றது.

இரண்டாவது மாநில மாநாடு சென்னை முகம்மது சதக் கலை அறிவியல் கல்லூரியில் 2009-ஆம் ஆண்டு நடைபெற்றது. ஆய்வரங்கத்தில் ஆய்வாளர்கள் எண்பத்து ஒன்பதின்மர் ஆய்வுக் கட்டுரைகளை அளித்தனர். தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா மாநாட்டில் பங்கேற்றுக் கவிஞர் மு. மேத்தா அவர்களுக்கு ஓர் இலட்ச ரூபாய் பொற்கிழியுடன் உமறுப்புலவர் விருதினை வழங்கிச் சிறப்பித்தார். பதினாறு அறிஞர் பெருமக்களுக்கு இலக்கியச்சுடர் விருது வழங்கப்பெற்றது.

மூன்றாவது மாநில மாநாடு 2011-ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாளன்று தென்காசியில் நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு முதல் நாள் குற்றாலத்தில் படைப்பிலக்கியப் பயிலரங்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. நிறைவு விழாவில் வரலாற்று ஆய்வாளர் செ. திவான் அவர்களுக்கு உமறுப் புலவர் விருதும், எழுத்தாளர் இருகூரான் அவர்களுக்கு மூத்த எழுத்தாளருக்கான விருதும், சிலம்பொலி செல்லப்பனார் அவர்களுக்கு மத நல்லிணக்க இலக்கியப் பணி விருதும் வழங்கி வைகோ அவர்கள் நிறைவுப் பேருரை ஆற்றினார். தென்காசிப் பகுதியைச் சார்ந்த 19 பேர்களுக்குச் சமுதாயச் சுடர் விருதும் பல்துறைச் சாதனையாளர்கள் 16 பேர்களுக்கு இலக்கியச்சுடர் விருதும் வழங்கப் பெற்றன.

**கழகத் தலைமையை அணி செய்தோர்**

1973- ஆம் ஆண்டில் இஸ்லாமிய இலக்கியக் கழகம் தொடங்கப் பெற்ற போது அதன் அமைப்பாளர்களாகப் பேராசிரியர் சி. நயினார் முகம்மது, பேராசிரியர் இ.ப.இஸ்மாயில் ஆகியோர் தொடர்ந்து செயல்பட்டு வந்த நிலையில் 1978-இல் கழகம் முறையாகப் பதிவு செய்யப்பட்டு அதன் தலைவராக நீதியரசர் மு.மு. இஸ்மாயீல் பணியாற்றினார். பின்னர்க் கவி கா.மு. ஷெரீஃப், மு. செய்யது முஹம்மது ஹஸன், கேப்டன் என்.ஏ. அமீர் அலி, எஸ்.எம். ஹிதாயத்துல்லாஹ், கவிக்கோ அப்துல் ரகுமான் ஆகியோர் தலைவர் பொறுப்பேற்றுக் கழகத்தை வழி நடத்திச் சென்றனர். 2017- ஆம் ஆண்டிலிருந்து பேராசிரியர் சேமுமு. முகமதலி இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

*நிறைவுரை*

இஸ்லாமிய இலக்கியக் கழகம் உலக ளாவிய நிலையில் நடத்திய மாநாடுகள் மூலமாகவும் மாநில மாநாடுகளின் வழியா கவும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தைப் பரவலாக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வெற்றி கண்டு வருகிறது. பழைய நூல்களைப் பதிப்பித்தும் புதிய நூல்களை வெளியிட்டும்தமிழ்இலக்கியவளர்ச்சிக்குத் தொண்டாற்றி வருகிறது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் குறித்த ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து ஆய்வுக் கோவைகளாக வெளியிட்டு உள்ளது. சாதனை படைத்த அறிஞர் பெருமக்களையும், படைப்பாளர்களையும், இலக்கியப் புரவலர்களையும் விருதுகள் வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்துள்ளது. மார்க்க அறிஞர்களைக் கண்ணியப்படுத்தியுள்ளது. மகளிர் அரங்கம் மூலம் பெண் படைப்பாளர்களைப் பெருமைப் படுத்தி யுள்ளது. புதுப்புதுக் கவிஞர்களை மேடை ஏற்றியுள்ளது.

உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த படைப்பாளர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் ஒருங்கிணைத்துக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்துவதற்கும் நட்பினை வளர்ப்பதற்கும் துணை நின்றுள்ளது. காலத்திற்குத் தேவையான தீர்மானங்களை நிறைவேற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளது. பல்வேறு சமயங்களை சார்ந்தவர்களையும் மாநாட்டில் பங்கேற்கச் செய்து மத நல்லிணக்கத்தை இலக்கியத்தின் மூலம் ஏற்படுத்தியுள்ளது இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் இச்சீரிய பணிகள் என்றென்றும் தொடர்ந்திட இறையருள் பொழியட்டுமாக!

## நல்ல கண்ணு என்றொரு மாமனிதர்

(26.12.1925--25.02.2026)

--------------------------------------------

**கருமலைப் பழம் நீ**

--------------------------------------------

நானிலம் போற்றும் மாமணியே!
நல்ல கண்ணு அண்ணலே!
செருக்கில்லாப் பெருந்தலைவா!
தொண்டர்க்குத் தொண்டரே!
இயற்கை எய்திவிட்டதாக
எல்லோரும் சொல்கிறார்கள்!
என்மனம் மட்டும் ஏற்கவில்லை!
செங்கதிருக்கு மரணமுண்டோ?



சாரம் நிறைந்த கவிதை நீ
வீரத்தின் விளைநிலம் நீ
தூய்மைக்கும் ஒழுக்கத்திற்கும்
வாய்மைக்கும் சான்று நீ

சிகப்புத் துண்டணிந்து
செகமெலாம் கொள்கையுடன்
சுற்றிவந்தச் செம்பருதி நீ
போராட்டம் ஒன்றே உன்
சீரோட்டமாய் தொடர்ந்தது
மடைதிறந்த ஆற்று வெள்ளமே
மகுடம் விரும்பா மாசற்ற உள்ளமே
சிறையும் பயணமும் வாழ்க்கை என்றே
முறையாய் ஏற்றுப்
பொதுநல விரும்பி நீ

ஊருக்கெல்லாம் உழைத்தவரே
உண்மையாக வாழ்ந்தவரே
யாருக்கும் அமையாதப்
புகழ் வாழ்க்கை உன் வாழ்க்கை!

சோதிமிகு மணி விளக்கு நீ
ஆதிஅந்தமிலா அற்புதம் நீ
பொதுவுடமை கட்சியின்
கொடி கம்பமே! ...இனி
செங்கொடியைஏற்றும்போதெல்லாம்...உன்
வீரமாமுகமே பட்டொளி வீசும்!
வீரவணக்கம் ஏற்றுக்கொள்வீர்!

# ஈத்

## ( நவீன உரைவீச்சு Hybrid Prose-Poetry )

## - ஏழுக்கவி

### 1. உடைந்த கண்ணாடி நிலவு

ஈத் நிலவைத் தேடி
எல்லோரும் மொட்டை மாடிக்குச் சென்றார்கள்.
கீழே ஒரு சிறுவன்;
கையில் உடைந்த பொம்மை கார்.
அவன் அதன் கண்ணாடி வழியே
வானைப் பார்த்தான்.
மேலே மகிழ்ச்சியின் ஆரவாரம்.
அவனுக்கு நிலவு வானத்தில் இல்லை,
உடைந்த பொம்மை காரின் பிரதிபலிப்பில்
மிக அழகாகத் தெரிந்தது.

### 2. இல்லாதவரின் அளவு

ஈத் இனிப்பில்
அன்று சர்க்கரை சற்று அதிகம்தான்.
உம்மா இருந்தபோது
எதையும் அளந்து போட்டதில்லை;
அவளின் கைகளே அளவுகோல்கள்.
இன்று அந்த இனிப்பு,
சர்க்கரையால் வந்ததல்ல;
மறைந்த ஒருவரின் நினைவால் கூடிய சுவை அது.

### 3. தற்காலிகச் சகோதரத்துவம்

பள்ளிவாசல் வெளியே
அந்த அந்நியர்களின் அணைப்பில்
ஒரு நொடிக்கு 'மனிதம்' உறைகிறது.
கைகளை விடுவித்த பின்
அவர்கள் வேறு திசைகளில் நடக்கிறார்கள்.
நகரம் மீண்டும் மனிதர்களைப் பிரிக்கும்
தன் வேலையைத் தொடங்குகிறது.

### 4. லாபகரமான பேரீச்சம்பழம்

போர்க்களச் சந்தையில்
ஒரு முதியவர்.
வாங்கிய பழத்தை இரண்டாய் உடைத்து
அந்நியனுக்குக் கொடுத்த சிறுவன்.
முதியவர் சிரித்தார்.
அன்று அவரிடம் எஞ்சிய காசுகளை விட,
அந்தச் சிறுவனின் பகிர்வுதான்
அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய லாபம்.

### 5. விலைக்குறி ( Price Tag )

புதிய சட்டையின் விலைக்குறியை
அவன் அகற்றவில்லை;
அது அவனது அந்தஸ்தின் அடையாளம்.
மாலை வீடு திரும்புகையில்
அந்தச் சட்டை
வியர்வையாலும் அணைப்புகளாலும்
நனைந்திருந்தது.
அவன் மெல்ல அந்த விலைக்குறியைக்
கிழித்தான்.
விலை போன பிறகுதான்,
அந்தச் சட்டை அவனுடையதானது.

# பொல்லாதது உன் பூமி தான் போராட்டம் தான் வாழ்க்கையே

## ஜனனி சுந்தர்

மீனாட்சிக்கு அன்று காலை எழுந்ததிலிருந்து மனதில் ஏதோ இனம் புரியாத தவிப்பு. 25 வயதில் இரண்டு குழந்தைகளுக்கு தாயானவள். திருமணமான அன்றிலிருந்து ஒரு சாதாரண இல்லத்தரசியாக, தன் கடமைகளையே கண்ணும் கருத்துமாக செய்து கொண்டு வந்திருந்தாள்.

அன்று அவளுக்கு தோன்றியது, வாழ்க்கையில்தான் எதுவும் சாதிக்கவில்லை என்று. முதுகலை பட்டதாரியான மீனாட்சி, தானும் தன் வாழ்வில் ஏதேனும் சாதிக்க வேண்டும் என்று எண்ணத் தொடங்கினாள். வீட்டிலிருந்தபடியே ஏதேனும் தொழில் செய்யலாம் என்ற எண்ணம் அவளுக்கு வந்தது.

தன் சக தோழிமார்களை பார்க்கும் பொழுது,தானும் தன் சொந்த முயற்சியில் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உந்துதல் அவளுக்கு அதிகமாக தோன்றியது.

அப்பொழுது தன் கணவனிடம் தனது எண்ணத்தை பகிர்ந்து கொண்டாள்.

அவள் கணவரோ, இப்பொழுது அதெல்லாம் வேண்டாம் குழந்தைகளையும் வீட்டையும் கவனித்துக் கொள் என்று சொல்லிவிட்டார்.

ஏமாற்றம் தாங்காமல், இனியும் தாமதிக்க கூடாது என்று, தான் சிறுக சிறுக சேமித்த பணத்தில், ஆசிரியர் பயிற்சிக்கான வகுப்பில் சேர்ந்து வீட்டிலிருந்தே கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். (Correspondance course).

தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று, அரசு பள்ளியில் ஆசிரியராகவும் தேர்ந்தெடுக்க பெற்றாள்.

இவள் பள்ளிக்கு செல்லும்போது, அக்கம் பக்கத்து பெண்கள் உடனடியாக விமர்சனத்தை தொடங்கி விட்டனர் ..

இரண்டு குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டு இவளுக்கு இப்பொழுது பள்ளி வேலை அவசியமா? என்று பக்கத்து வீட்டு சுதா அக்கா சொல்ல, கணவன் சம்பளம் போதாதா என்று லட்சுமி அக்காவும் சேர்ந்து கொண்டாள்.

மீனாட்சி காதுகளில் விழுந்ததும் அவள் மனம் வலித்தது. ஆனால் அங்கே அவள் நின்றுவிடவில்லை.

முதல் மாத சம்பளமும் கையில் வாங்கினாள். படிப்பில் பின் தங்கிய மாணவர்களையும் தனது புத்தி கூர்மையால் அவர்களுக்கு பாடம் சொல்லிக்

கொடுத்து நல்ல மதிப்பெண்கள் பெற உதவினாள்.

இவளது பாடம் நடத்தும் முறை மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர் களுக்கும் பிடித்துப் போக, மாணவர்களை Tuition இவளிடமே சேர்த்து விட்டனர்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஒரே அதிசயம். எதற்கும் உதவாத மீனாட்சி என்று அவர்களால் முத்திரை குத்தப்பட்ட அவள் இன்று பல குழந்தைகளின் வாழ்க்கைக்கு வெளிச்சம் காட்டியவளாக மாறி இருக்கிறாள் என்று.

ஆயினும், மணிமேகலை அக்கா.. ஏதோ Luck அவ்வளவுதான் என்று சொன்னாள்.

tuition வரும் மாணவர்கள் அதிகமானதால், ஒரு சிறிய இடத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு.. அதில் பாடம் நடத்த ஆரம்பித்தாள்.

இப்பொழுதும் விமர்சனம் அவளை விடவில்லை.

குழந்தைகளையும் கணவரையும் கவனிக்க நேரமில்லாமல், ஊரில் உள்ள குழந்தைகளை கவனித்துக் கொள்கிறாளாம் என்று அம்பிகா அக்கா சொல்ல, ஆமாம் அக்கா கணவனுக்கு சரியான நேரத்துக்கு சாப்பாடு கூட போட மாட்டாளாம் என்று ஒரு கட்டுக் கதையை மாதவி அக்காவும் சேர்ந்து சொல்கிறாள் .

இவை அனைத்தையும் பார்த்துவிட்டு மீனாட்சிக்கு அழுகை தாங்க முடியவில்லை. தன் அம்மா அழுவதை பார்த்த அவளது மகள் பிரியா ‘அம்மா ஏன் அழுகிறாய்‘ என்று கேட்டாள் ..

தன் வருத்தத்தை கேட்பதற்கு ஒருவர் உள்ளார் என்ற சந்தோஷத்தில், உடனே தன் ஆதங்கத்தை கொட்டி தீர்த்தாள் ..

‘நான் தப்பு பண்றேனா மா‘ என்று பிரியாவிடம் கேட்டபோது, பிரியா தன் அம்மாவை கட்டிப்பிடித்து.. அம்மா நீ எங்களுக்கு ஒரு இன்ஸ்பிரேஷன். உன்னை மாதிரி நான் ஆகணும்னு நினைக்கிறேன் என்று சொன்னவுடன் அந்த வார்த்தை மீனாட்சிக்கு புதிய பலத்தை கொடுத்தது.

மாதங்கள் கழிந்தபின், தனது tuition centre க்கு ‘உழைப்பால் உயர்வோம்‘ என்ற பெயரையும் சூட்டி.. தன்னைப் போல் வீட்டில் ஒடுங்கி கிடக்கும் ஆனால் திறமை அதிகமாக இருக்கக்கூடிய பெண்களுக்கு வேலையும் கொடுத்தாள்..

அவர்களில் ஒருத்தி விதவை, இன்னொருத்தி கணவனால் கைவிடப்பட்டவள்.

இப்படி பல பேருக்கு வேலையும் கொடுத்தாள்.

கணக்கு பாடத்தில் இரண்டு ஆண்டுகளாக தோல்வியை மட்டுமே சந்தித்த மாதவி அக்காவின் மகன் பிரபு ‘இன்று அவன் வகுப்பில் முதலிடம் பெற்றிருக்கிறான்‘ என்றால் அதுவும் மீனாட்சி டீச்சரின் கடின உழைப்புதான் என்பது குறிப்பிடத்தக்கது. அன்று விமர்சித்த மாதவி அக்கா இன்று மீனாட்சியை அனைவருக்கும் முன்னிலையிலும் தலையில் தூக்கிக் கொண்டாடினாள் மிகுந்த சந்தோஷத்துடன்...

எங்கோ இருந்த மீனாட்சியை பல பெண்கள் சங்கங்களில் இருந்து Women'sday விழாவில் சிறப்பு விருந்தினராக அழைக்கத் தொடங்கினார்கள்.

ஒரு மேடையில் அவள் பேசிய

வார்த்தைகள். "நானும் உங்களை போல் ஒரு சாதாரண பெண்தான். என் பயணம் எளிதானது அல்ல. நான் எடுத்து வைக்கும் ஒரு ஒரு அடியிலும் யாரோ ஒருவர் என்னை குறை சொல்லிக் கொண்டே தான் இருந்தார்கள்.

வீட்டை கவனிக்க மாட்டியா? குழந்தைகளை பார்த்துக்க மாட்டியா? என்ற கேள்விகள் மட்டுமே என்னை வாட்டி வதைத்தது. ஆனால் நான் உங்களுக்கு சொல்வது.. நான் உணர்ந்த ஒரு உண்மை. இந்த விமர்சனங்கள் என்றும் நிற்காது. நாம் என்ன செய்தாலும் யாரோ ஒருவர் குறை சொல்லிக் கொண்டே தான் இருப்பார்கள். நான் என் குழந்தைகளுக்கு ஒரு முன் மாதிரியாக விரும்பினேன். சாதிக்கும் ஒரு தாயாக, கனவுகளை கைவிடாத ஒரு பெண்ணாக.

இந்த நிலைமையில் நீங்கள் என்னை பார்க்கிறீர்கள் என்றால்.. இதற்குப் பின் பல தோல்விகள்.. அதை அனைத்தையும் கடந்து எழுந்து நின்றதால் தான் நான் இங்கே நிற்கிறேன்" என்று சொன்னாள்.

மேலும் சமுதாயத்தின் எதிர்மறை குரல்களை புறக்கணியுங்கள். உங்கள் திறமையை நம்புங்கள். உங்கள் கனவுகளை நிஜமாக்குங்கள். நீங்கள் ஒரு தாய், ஒரு மனைவி, ஒரு மகள்.. இதைத் தாண்டி நீங்கள் ஒரு தனி மனிதர் உங்களுக்கும் கனவுகள் இருக்கின்றன.

நமக்கான இடத்தை நாமே உருவாக்க வேண்டும். யாரோ சொன்னார்கள் என்று நம் கனவுகளை புதைக்க வேண்டாம். முயற்சி செய்யுங்கள்.

மீனாட்சியை இன்று அனைவரும் பெருமையுடன் பார்க்கிறார்கள். என்னை விமர்சித்தவர்கள் கூட இப்போது என்னிடம் வந்து வாழ்த்துகிறார்கள். இவை அனைத்திற்கும் காரணம் நான் என்னை நானே நம்ப கற்றுக் கொண்டேன். நீங்களும் உங்கள் வழியை உருவாக்குங்கள். எதிர்மறை குரல்களை அமைதியாக புறக்கணியுங்கள். உங்கள் உள்ளத்தின் குரலை கேளுங்கள். என்று மீனாட்சி பேசி முடித்த பொழுது, கைத்தட்டல் இடி முழக்கம் போல ஒலித்தது. கூட்டத்தில் அமர்ந்திருந்த பெண்களின் கண்களில் கண்ணீர். ஆனால் அது ஆனந்தக் கண்ணீர்.

அன்றைய தினம் நிகழ்ச்சியை முடித்து விட்டு, தன் இல்லத்தில் அமைதியாக கண்மூடி உட்கார்ந்து தான் கடந்து வந்த பாதையை பற்றி சிந்திக்க தொடங்கினாள். தன் பெண்ணிற்கும், உற்சாகமூட்டும் வார்த்தைகளை சொல்லி.. அவளையும் ஊக்குவித்தாள். உன் கனவுகளை கை விடாதே மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு பயப்படாதே என்று அறிவுரையும் கூறினாள்.

பெண்தானே என்று உன் மீது advantage எடுத்துக்கொள்ள ஒருவரையும் அனுமதிக்காதே என்று சொன்னாள்.

FREEDOM IS NOT GIVEN,IT IS TAKEN..

மீனாட்சியைப் போன்று.. நாமும் மன உறுதியுடன் செயல்பட்டு, அனைவருக்கும் முன்மாதிரியாக இருப்போம்.

பெண்கள் தினம் என்பது வெறும் ஒரு நாள் அல்ல. ஒவ்வொரு பெண்ணும் தன் சுதந்திரத்தை தன் கனவுகளை நிஜமாக்கும் உறுதியை கொண்டாடும் நாட்கள் அனைத்துமே பெண்கள் தினம் தான். ஒவ்வொரு பெண்ணும் ஒரு சக்தி. அந்த சக்தியை உணர்ந்து நம்பி முன்னேறுவோம்.

# ரயில் பிரயாணம்

உமா ஸ்வாமிநாதன்
பெங்களூரு

ஏழுமலை குடும்பம், சென்னையிலிருந்து திருப்பதிக்கு போக ரயில் ஏறியது. மொத்தம் பத்து பேர் குடும்பத்துடன் கிளம்பினார்கள்.

திருப்பதி ஏழுமலையானைத் தரிசிக்க கிராமங்களில் இருந்து கிளம்பும் மக்கள் செய்யும் அந்த 'அலப்பறை' ஒரு தனி ரகம். அது பார்ப்பதற்குச் சிரிப்பாக இருந்தாலும், அதில் ஒரு பாசமும், ஆழமான பக்தியும் கலந்திருக்கும்.



வள்ளியம்மா ஒரு தூக்கு புளியஞ்சாதம், ஒரு தூக்கு தயிர் சாதம், வடாம் மோர்மிளாகாய் எல்லாம் ஒரு கூடை நிறைய கொண்டு வந்தாள். ரெண்டு மூணு நாள் சேர்த்து கொண்டு வந்தாங்க போல் இருக்கு.

வண்டி புறப்பட்டதும், நண்டு சிண்டு எல்லாம் உற்சாக குரல் கொடுக்க இவர்கள் எல்லாம் ஒரே இடத்திலும் சைடு சீட்டில் இன்னும் இருவரும் அமர்ந்து பிரயாணம்.

ரயிலில் ஏறிய உடனே, 'பசிக்குது' என்று சொல்லி அந்த மூட்டையை அவிழ்ப்பதே ஒரு தனி வைபவம்.

கொஞ்சம் நேரத்தில் சாப்பாடு கடை ஆரம்பிக்க பெரியவர்கள் ஒரு தட்டிலும் குழந்தைகள் சிறு கிண்ணத்திலும் சாப் பிட்டனர்.

ட்ரெயின் பூரா புளியோதரை வாசனை அடுத்த சீட்டில் இருப்பவங்களுக்கும் வாசனை பசியைத் தூண்டியது.

வலதுபுறம் சன்னலோரத்தில் இருந்த பெரியவர், ரயில் புறப்பட்டதும் தூங்க ஆரம்பித்தவர், சற்று முன்னர்தான் தான் எழுந்தார், இறங்கியும் போய் விட்டார்.

எதிர்பாராத விதமாக ரயில் பயணத்தில் ஏற்படும் ஒரு திருப்பத்தையும், அதனால் ஏற்படும் அதிர்ச்சியையும். ஒரு ரயில் பயணம் திட்டமிடப்பட்டு, பயணிகள் புறப்படும்போது, எதிர்பாராத விதமாக ஒரு விபத்து அல்லது அசாதாரண நிகழ்வு நடக்கும் அது பயணிகளின் பயண அனுபவத்தை மாற்றி அமைத்து விடும்.

பயணிகள் அனைவரும் தங்கள் இருக் கைகளில்

அமர்ந்து, ரயிலில் புறப்படுவதற்காக காத்திருக்கிறார்கள்.

திடீரென்று, ஏதோ ஒரு பிரச்சனை ஏற்பட்டு, ரயிலை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால், அனைவரும் அதிர்ச்சி யடைகிறார்கள்.

இந்த அசாதாரண சூழ்நிலையில், பயணிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்கள்.

இப்படித்தான் இந்த திருப்பதி போகும் கும்பலில் ஒருவர் நடுவில் ஒரு ஸ்டேஷன் நிற்க தண்ணீர் பிடிக்க கீழ இறங்கும் போது அவருக்கும் தெரியாமல் இந்த நண்டு, சிண்டுகளில் ஒன்று இறங்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இவர் தண்ணி பிடித்து ஜன்னல் ஓரம் உட்கார வண்டி புறப்பட்டதும், ஐயோ அம்மா, அப்பா, ஆயா னு குரல் கொடுத்து அந்த சிறுவன் வண்டி கூடவே ஓடி வந்தான்.

ரயிலில் ஒரே பதட்டம் திருப்பதி குடும்பத்தினர் ஐயோ எம்புள்ள

'ஏடு கொண்டல வாடா' பிள்ளையை காப்பாத்தி எங்க கிட்ட கொண்டு சேர்த்திடு னு ஒரே அலறல்.

வண்டியோடு அவனும் ஓடி வர, அந்த வண்டி ஜன்னல் பக்கம் வந்த இளைஞர் அந்த சீட்டில் அமர்ந்து கையை வெளியே நீட்டி அவனை பிடித்து தூக்கினார் அவன் அலற வண்டியும் வேகம் எடுக்க,

ஒருவர் ஐயோ யாராவது ரயிலை நிறுத்துங்க என்று சொல்ல!

அந்த இளைஞர் முகத்தை வெளியே நீட்டி அந்தப் பையனை இழுத்து உள்ளே போட்டார்.

ஒரு செகண்ட் கை விட்டாலும் பிள்ளை ரயிலுக்கடியில் போயிருக்கும்.

யாரும் அந்த இளைஞரை கவனிக்க வில்லை. அந்த சிறுவனை கட்டி அழுது கொஞ்சி, தண்ணி கொடுத்து முகம் துடைத்து ஸ்வீட், பிஸ்கட், சாக்லேட் எல்லாம் கொடுத்து ஒருவர் மாற்றி ஒருவர்கொஞ்சிக் கொண்டிருந்தனர்.

தூரத்தில் அமந்திருந்த ஒரு பயணி இதெல்லாம் பார்த்து பொறுக்காமல்,

என்ன நடக்குது? இங்க ரயில் நின்றதும் போலீஸ் வருவாங்க இப்போ உன்னை பிடிக்க னு சொன்னதும், ஐயோ அம்மா னு ஒரே கூச்சல். இந்த அலப்பறைக்கு மொத்த குடும்பமும் ஒத்துமையா ஒத்துழைச்சது.



அந்த பயணி பார்க்க வாட்ட சாட்டமாய் பெரிய மீசையோடு இருக்க இவரும் போலீஸ் என்று நினைத்து அத்தனை பேரும் அப்படியே அமைதி யானர்கள்.

அந்த சிறுவனை கூப்பிட்டு எதுக்கு இறங்கின என்றதும், தாத்தா தான் வா குளிர்பானம் வாங்கி தரேன்னு சொல்லி கீழ அழைச்சிண்டு போனார் என்றதும்,

பெரியவர் பளார் னு ஒரு அறை விட்டார் அந்த சிறுவனை பொய் சொல்றியா னு.

ஒரு பிள்ளை உயிர் போயிருக்கும் அதை காப்பாத்தி குடுத்த அந்த மனுஷனுக்கு ஒரு நன்றி சொல்ல தெரியல, ரயிலை விட்டு இறங்கிய பிள்ளையை கண்டிக்காம கொஞ்சி குலவறீங்க என்றதும்,

இப்போ அப்படியே அந்த இளைஞர் பக்கம் திரும்பி தம்பி, நீங்கள் நல்லா இருக்கணும்னு, நல்லா இருக்கணும்னு எல்லாரும் சொல்ல!

வயதில் மூத்த அம்மா இளைஞர் கன்னம் தொட்டு திருஷ்டி கழித்து நீ நல்லா இருக்கணும் என்றார்.

இளைஞரும் அங்கிருந்து தப்பித்தால் போதும் னு அந்த வாட்டசாட்டமான பயணியை பார்த்து அண்ணே நீங்கள் இங்க உக்காருங்க, நான் அங்கு உட்கார்ந்துக்கறேன் னு போக. பிறகு வண்டியில் ஒரே அமைதி தான்.

பயணங்கள் பலவிதம் சிலர் பதற்ற மடைகிறார்கள், சிலர் அமைதியாக இருக்கி றார்கள். ஆனால், இந்த எதிர்பாராத நிகழ்வு அவர்களின் பயணத்தை மட்டுமின்றி, அவர்களின் வாழ்க்கையையும் ஒரு புதிய பாதையில் திருப்புகிறது

அமைதியாய் போய் கொண்டிருந்த வண்டி திருப்பதி நெருங்க ‘கோவிந்தா... கோவிந்தா...‘ கோஷம்

பேருந்துத் திருப்பதி மலையைத் தொட்டவுடன், தூங்கிக் கொண்டி ருந்தவர்கள் கூட விழித்துக்கொண்டு, ஊரே அதிரும் வகையில் ‘கோவிந்தா... கோவிந்தா...‘ என்று போடும் சத்தம். அந்த சத்தத்திலேயே மலை நடுங்கும். பக்கத்தில் இருப்பவர் காது செவிடாகும் அளவுக்கு பக்தி பொங்கும்.

‘ஏடு கொண்டலே வாடா
கோவிந்தா கோவிந்தா ‘
என்ற சத்தம் வண்டி சத்தத்தை
மீறி கேட்டது.

தரிசனம் முடிந்து வெளியே வந்ததும், ‘யாருக்கு எத்தனை லட்டு?‘ என்பதில் பெரிய கணக்கு வழக்கே நடக்கும். ‘எதிர் வீட்டு முனியம்மாவுக்கு ஒண்ணு, பால் ஊத்துற பையனுக்கு ஒண்ணு‘ என லிஸ்ட் போட்டு, லட்டு வாங்குவதற்குள் ஒரு போரே நடத்திவிடுவார்கள்.

ஊருக்குத் திரும்பியதும், கொண்டு வந்த லட்டைப் பிரித்து கொடுப்பதில் இருக்கும் அந்தத் திருப்தி அவர்களுக்குப் பெரிய விஷயம்.

‘உனக்கு லட்டு கம்மியா போச்சுன்னா கோவிச்சிக்காதே, கூட்டம் அப்படி‘ என்று சொல்லியே ஒரு கதையளப்பார்கள்.

இந்த அலப்பறைகள் எல்லாம் மேலோட்டமாகப் பார்க்க வேடிக்கையாக இருந்தாலும், அந்த ஏழை எளிய மக்களின் நிச்சலனமற்ற பக்தி மற்றும் பகிர்ந்துண்ணும் குணம் தான் இதில் ஒளிந்திருக்கும் அழகு.

# அன்பின் பாலம்

## ஸில்மா ஹிதாயத்துல்லா

**பகுதி - 11**

கண்களுக்கு என்ன தெரியும்...

உன்னையும் என்னையும் சேர்க்கும் காந்த சக்தி அவைகள் தான் என்று.....?

ஹிஸ்னாவின் கண்களைப் பின்புறத்தில் இருந்து தன் இரு கைகளாலும் மூடிய நவாஸ், அவள் காதுகளுக்குள், "சத்தம் போடாமல் அப்படியே நடங்கோ..." கட்டளையிட்டான்.

ஹிஸ்னாவிற்கு அந்தத் தொடுகையிலும், குரலிலும், ஏன் அந்தக் கட்டளையிலும் கூட ஒருவித மென்மை தெரிந்தது. இவ்வளவு நாளும் அவள் கண்டிராத மென்மை...

"ம்"

தலையசைத்தாள்.

கொஞ்ச நேரத்தில் 'ஸ்டாப்' காதுகளுக்குள் கிசுகிசுத்தான்.

அவளும் அப்படியே நின்றாள்.

அவன் கைகளைக் கீழ் இறக்கினான்.

அவள் மெல்ல கண்களைத் திறந்தாள்.

அதற்காகவே காத்திருந்தது போல... பட்டாசுச் சத்தம் காதைப் பிளந்தது. வானத்தில் வண்ண ஜாலமயமானது.

ஒளித்துகள்கள் மின்னி மின்னி மறைந்தன.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஏதோ கனவுலகில் இருப்பது போலவே உணர்ந்தாள்.

நவாஸ் உடனே தன் ஒரு காலை மடித்து, கீழே குனிந்து, மண்டியிட்டு, அவள் கைகளை நீட்டி, "ஹிஸ்னா... இனி நானும் நீங்களும் புதுசா ஒரு வாழ்க்கையை வாழ்வோமா...?" இதமாய் வினவினான்.

அவளுக்கு உடல் சிலிர்த்தது.

'திரைப்படத்தில் தானே இப்படி நடக்கும்...?

என் வாழ்வில் எப்படி இப்படி நடக்கிறது...?'

அவளுக்குள் யோசனை மின்னல் வெட்டியது. சந்தோஷ மிகுதியில் கைகளுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"மேடம், மிச்ச நேரமா இப்படியே ஈக்கிரன்... கால் நொந்தால் நீங்கதான் சாத்து செய்யவாகும்..." சொல்லிக் கண்ணடித்தான்.

" ஐயோ...."

பதறுவதைப் போல் நடித்துக் கொண்டே... நீட்டிய அவன் கையில் தன் கையை பத்திரப்படுத்தினாள்.

அவளை வாஞ்சையாய் அருகழைத்து எழும்பினான் நவாஸ்.

"ஹிஸ்னா நாங்க ரெண்டு பேரும் இதுகாலம் வரைக்கும் எங்களோட தேவை என்டு தானே யோசிச்சி மத்தவன்ட குறை கண்டுபிடிச்சி வாழ்ந்து ஈக்கிறோமே ஒழிய எனக்கு என்ன தேவ எண்டு ஒங்கள்ட செல்லி, ஒங்களுக்கு என்ன தேவை என்டு பாத்து, ரெண்டு பேரும் சேர்ந்து டிஸ்கஸ் பண்ணி, ஒரு அண்டர்ஸ்டாண்டிங்ல வாழ மறந்துட்டோம்...

இன்ஷா அல்லா... இனியாவது அப்படி வாழணும்...." சந்தோஷமாகச் சொல்லி முடிக்கும் போதே இருவரின் கண்களும் கலங்கின.

ஹிஸ்னா எதுவும் பேசவில்லை.

கணநேர அமைதியின் பின், "ஏன் இப்படி செஞ்ச....? நான் எவ்..வளவு பயந்துட்டேன்....." குரல் தழுதழுக்க கேட்டாள்.

அவளின் கண்களில் இருந்து வழிந்த நீரை மெல்லத் துடைத்தபடி, "ஏன்ட மேல ஒங்களுக்கு எவ்ளோ எரக்கமெண்டு எனக்கு பாக்க ஆசையா ஈந்த.." சின்ன குழந்தை காரணம் சொல்வது போல.. குரலை தழைத்து, தனித்து அவன் சொன்ன விதம் அவளை மெழுகாக உருக்கியது.

"ஹிஸ்னா... நான் ஒங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் வச்சிக்கிறேன்.."

குதூகலமாய்ச் சொன்ன நவாஸை 'என்ன' என்பது போல் கண்களை உயர்த்திப் பார்த்தாள் ஹிஸ்னா.

"சர்ப்ரைஸ் இன்னும் அஞ்சு நிமிஷத்துல வந்துரும்" புதிர் போட்டான்.

இப்போதே சொல்லுமாறு அவளும் கெஞ்சவே... "ஹிஸ்னா ஒங்களுக்கு சிரிசீல ஈந்து டீச் பண்ண ஆசை என்டு முந்தி.. எப்பயோ எனக்கிட்ட சென்னீங்க... நெனைவு ஈக்குதா...?"

இழுத்தான்.

அவள் மெல்லத் தலையசைத்தாள்.

"நான் ஒங்கட ஆசைக்கு இனித் தடையா ஈக்க மாட்டேன். ஒங்களுக்கு எது விருப்பமோ அத நீங்க செய்ங்கோ.. நீங்க சந்தோசமா ஈந்தால் தான் ஒங்கள சுத்தி ஈக்கிற நாங்களும் சந்தோசமா ஈப்போம் எண்டு எனக்கு வெளங்கிட்டு.."

அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு மேலே பேசினான்.

"ஒங்களால குடும்பத்தையும் ஒங்கட career ஐயும் ஒரே டைம்ல பாக்கேலும். நானும் சப்போர்ட் தாரேன். ஒங்களுக்காக நான் ஈக்கிறன்..." புதிய நம்பிக்கை கொடுத்தான்.

அவன் சொல்லி முடிக்கும்போதே சபியா லெட்டர் உடன் வந்திருந்தாள்.

அதை வாங்கி ஹிஸ்னாவின் கையில் கொடுத்தவன், "ஒங்களுக்கான டெம்பரரி அப்பொய்ன்மெண்ட் ஆர்டர்.. ஒங்களுக்காக கஷ்டப்பட்டு எடுத்துட்டு வந்து ஈக்கிரன்.. பிரிச்சுப் பாருங்கோ..."

சாதித்து விட்ட திருப்தியில் மீண்டும் அவள் முன் மண்டியிட்டான்.

“ஹிஸ்னா... இனி எங்களுக்காக நாங்க வாழ்வோம்...” திரும்பவும் அவளுக்குக் கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது.

“நவாஸ்...”

பொது இடம் என்றும் பார்க்காமல் அவளும் அப்படியே கீழே குனிந்து விட்டாள்.

“ஓங்களுக்கும் நான் சப்போர்ட் ஆ ஈப்பன்...ஒங்களையும் புரிஞ்சி கொள்ள ட்ரை பண்ணுவன்...”

அழுதுகொண்டே அவளின் உதடுகளிடம் இருந்து வார்த்தைகள் வெளியே வந்தன.

இனி வரப்போகும் காலமெல்லாம் ஹிஸ்னாவுக்கும் நவாஸுக்கும் அன்போடு கலந்த அன்பின் பாலம் தொடர்ச்சியாய் இருக்கப் போகிறது.

நாமும் அவர்களுக்காய் பிரார்த்திப் போம்.

---

# சாலை வழியே

புனிதமான உறவோடு
தொடரும் பயணங்கள்
வலி இன்றி வழி நீண்டு
வளர்ந்து கொண்டே
இருக்க வேண்டும்

அவ்வுறவின் கைப் பற்றி
மனம் தொட்டு பேச
இயற்கையே வழி தந்து
உதவுவதாய் ஒரு எண்ணம்

ஜன்னலோர இருக்கைகள்
இறுகக் கோர்த்த விரல்கள்
இருவரின் தனி உலகமாய்
இயற்கையே சாட்சியாகும்

தடுமாறும் வார்த்தைகள் இடையே
விழிகள் பேசும் போது
சிறு சிறு புன்னகைகள்
புத்தம் புதிதாய் மலர்ந்து கொள்ளும்

நெடு நேரம் பயணம் தொடர்ந்தாலும்
கடிகார முள் ஓட்டத்தை அறியாது
இன்னும் பயணம் நீளட்டுமே
என்றே மனம் துள்ளும்

அவ்வொரு பிடித்த உறவிடம்
அன்பை பகிர்ந்து கொண்டு
ஆறுதலாய் காலடிகள் தொடுத்து
வாழ்வை பரவசமாக்க சிந்தை பிறக்கும்

கோடி உறவுகளின் இடையே
அந்த ஒரு உறவு மட்டும்
விழிகளுக்கும் நெஞ்சுக்கும்
நிறைவாக அமைந்து விடும்

உண்மை நேசங்கள் எல்லாம்
அமைவதே ஒரு வரம்
அப்படி ஓர் நேசம் கிடைத்தால்
வாழ்க்கை பயணமோ பெறும் வளம்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம் இலங்கை



# உளி பேசும் மொழி

நெல்லை க. சோமசுந்தரி

கவிஞர். எழுத்தாளர் தொ ல்லியல் ஆர்வலர்

சென்னை, தமிழ்நாடு

## 36

ஒரு அஃறிணைப் பொருளான உளியானது தெய்வீகம் பொருந்திய கலையினைப் பற்றிக் கடந்த மூன்று வருடங்களாக ஒவ்வொரு திங்களும் நம் எல்லோரிடமும் இத்தொடரின் வழியாகப் பேசிக் கொண்டிருந்தது. இதில் பஞ்சபூதங்களை ஆதாரமாகக் கொண்டு அதனை உருவகித்து எழுப்பப்பட்டுள்ள ஐந்து ஆலயங்களான ஆகாயத்தை உருவாகக் கொண்டு அமைக்கப்பட்ட சிதம்பரம் நடராஜர் ஆலயம், நிலத்தினை குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், நீரினை குறிக்கும் ஜம்புகேஸ்வரர் ஆலயம், காற்றினை உருவாகக் கொண்டு எழுப்பப்பட்டுள்ள திருக்காளத்தியப்பர் ஆலயம் மற்றும் நெருப்பினை உருவகித்து அமைக்கப்பட்டுள்ள திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயம் ஆகியவற்றில் பொதிந்து கிடக்கும் கலைகளைப் பற்றி உளியானது தனது உணர்வுகள் வாயிலாக வெளிப்படுத்தி இருந்தது.

உணர்வற்ற ஒரு ஜடப்பொருள் தனது மொழியின் வாயிலாகச் சிற்பங்களின் நுட்பங்களை மிக நேர்த்தியாகத் தொடர்ந்து பேசி வந்திருக்கிறது. மேலும், நமது முன்னோர்களின் கலைத்திறனையும், அவர்கள் கலையின் மீது கொண்ட அதீத பக்தியுடன் கூடிய ஈடுபாட்டையும், அவ்வழியே செதுக்கப்பட்டுள்ள சிற்பங் களைப் பற்றியும் மிகத் துல்லியமாக இத்தனை திங்களும் விவரித்து இருக்கிறது. அது மட்டுமன்றி கலையின் வேறு வேறு பரிமாணங்களான நடனங்கள், ஓவியங்கள் மற்றும் அவற்றுடன் கூடிய ஆடை, அணிகலன்கள் போன்றவை அந்தந்த ஆலயங்கள் அமைந்துள்ள பகுதியில் ஏறத்தாழ பல நூற்றாண்டுகள் கடந்தும் இக்கலைகள் இன்றும் அந்தந்த பகுதிகளில் தொடர்ந்து அந்த ஊர் சார்ந்த மக்களால் முன்னெடுக்கப்பட்டு அந்த கலைகளுக்கு புதுப்புது பரிமாணங்களை அளித்து வருவதைப் பற்றியும் உளியின் வாயிலாக நம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அவ்வகையில் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் அரங்கேற்றப்படும் நாட்டி யாஞ்சலி, காஞ்சி மாநகரின் பிரசித்தி பெற்ற பட்டு ஆடைகள் திருக்காளத்தியில் கலம்காரி ஓவியங்களுடன் கூடிய ஆடைகள் மற்றும் திருவண்ணாமலை கைவினைப் பொருட்கள் ஆகியவை இன்றும் தனித்தன்மையுடன் இக்கால நவநாகரீகங்களுக்கு ஏற்ப அழகு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

பன்னெடுங்காலந் தொட்டு கலைகளானது மானிடர்களின் வாழ்வியலில் ஒரு அங்கமாகவே பரிணமிக்கிறது. அதன் வழியே ஆலயங்களானது கலைகளை வளர்க்கும் மற்றும் பாதுகாக்கும் பொக்கிஷ பெட்டகமாகவேத் திகழ்கிறது. அதிலும் குறிப்பாக, தமிழகத்தில் அமைந்துள்ள வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கோவில்களானது கவின்கலைகளைக் காத்து நிற்கும் அரண்களாக விளங்குகிறது. ஒவ்வொரு ஆலயமும் பல்வேறு



காலகட்டங்களில் பல்வேறு மன்னர்களால் கட்டப்பட்டிருப்பினும், அதன் கட்டிட அமைப்பு, கம்பீரம் மற்றும் கலை அம்சமானது சிறிதும் குன்றாமல் மெருகூட்டப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. இவ்வளவு அர்ப்பணிப்புடன் அக்காலகட்டத்தில் ஆலயங்களை நிறுவுவதற்கானக் காரணத்தை நாம் அறிய முற்படின், ஆலயங்களானது மனித வாழ்க்கையின் வெளிப்பாடு. அவர்களின் வாழ்வியலில் காணப்படும் உறவு முறைகள், பழக்கவழக்கங்கள், கலாச்சார முறைகள் ஏதோ ஒரு வடிவத்தில் ஒவ்வொரு ஆலயங்களிலும், அந்தந்த இடத்திற்கேற்றாற் போல் கடைப்பிடிக்கப்பட்டிருந்ததை அறிய முடிந்தது .

அதனையே மதுரை மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபோகத்தினை மீனாட்சி அம்மனின் சகோதரரான திருமால் தனது தங்கையின் கைப்பிடித்து சுந்தரேஸ்வரரிடம் ஒப்ப டைப்பது போன்ற சிற்பத்தினை கொண்டு உறுதிப்படுத்த முடியும் மேலும் சிவபெருமான் தனது மனைவியான உமையம்மன் மற்றும் தனது இளைய மகனான கந்த பெருமானுடன் சோமாஸ் கந்தராகக் காட்சியளிக்கும் சிற்பத்திலிருந்து தெய்வங்கள் யாவும் மானுட சமூகத்தின் இல்லற நெறியை வெளிப்படுத்தும் ‘அன்பின் உயர்நிலை‘ என்பதனை நம்மால் உணர முடியும். சோமாஸ்கந்தர் என்பது சிவனுடன் கூடிய உமையம்மன் மற்றும் கந்தன் என்பதனைக் குறிக்கும்.

ஆலயங்களானது மானிடர் வாழ்க்கை யின் அங்கமாக விளங்குவது போல் அவ்வாலயத்தினைச் சுற்றி வாழும் அனைவருக்கும் நெருங்கிய உறவுமுறை தொடர்பினை ஏற்படுத்திருக்கிறது. அவ் வாறே, அந்தந்த ஊரின் ஒற்றுமையானது தேர்த் திருவிழாக்கள் மூலம் நிலை நிறுத்தப்பட்டு இருந்திருக்கிறது. மேலும், ஆலயங்களில் எழுப்பப்பட்டுள்ள தெய்வங் களின் சிற்பங்கள் யாவும் அக்காலகட்டத்தில் அங்கு வாழ்ந்த மக்களின் உருவம் மற்றும் முக அமைப்பினை ஆதாரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்படிப் பார்ப்பின் நாம் ஆலயங்களில் சென்று வழிபடும் தெய்வங்கள் யாவும் மானிட சமூகத்தின் அங்கமாகவே இருந்துள்ளதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இதனையே திருமூலர், திருமந்திரத்தில்

‘உள்ளம் பெருங்கோயில்
ஊன் உடம்பு ஆலயம்,
வள்ளல் பிரானார்க்கு வாய்
கோபுர வாசல்‘

என்பதிலிருந்தே நாம் மேற்கூறிய கூற்றினை உறுதிப்படுத்துவதாக அமை கிறது. அவ்வழியே, ஆலயங்களானது மானிட சமூகத்தின் ஒற்றுமையின் உருவாகக் காலங்காலமாக விளங்குகிறது.

இத்தொடரினை கடந்த 36 திங்களாக பிரான்சிலிருந்து வெளிவரும் தமிழ்நெஞ்சம் மாத இதழில் தொடர்ந்து எழுதுவதற்கு அனுமதி தந்த இதழின் நிறுவன ஆசிரியர் திரு அமின் மொஹமட் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்தொடர் வெளிவந்த நாள் முதல் இன்று வரை ஆதரவு கொடுத்து ஒவ்வொரு திங்களாக ஆர்வமுடன் படித்ததுடன் மற்றும் இன்றி உளியின் மொழியினை, தங்களது ஊக்க மிகுந்த கருத்துக்களைப் பகிர்ந்து உற்சாகத்துடன் அடுத்தடுத்து எழுதுவதற்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கும் வாசகப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் உளியின் மொழியின் வாயிலாக நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இத்தொடரின் முதன்மை நோக்க மான ஆலயங்களையும் அங்கு அமைக்கப் பட்டுள்ள அனைத்து வகையான கலைச் சிற்பங்களையும் ஓவியங்களையும் மற்றும்

இன்றி ஆலயங்களின் தொன்மையையும் அதன் வழியே பல தலைமுறைகளுக்கு முன், தங்களது வருங்கால பல சந்ததி யினருக்காக அர்ப்பணிப்புடன் உருவாக் கிய சிற்பம் மற்றும் ஓவியக் கலைகளின் உணர்வினையும் அதற்குப் பேருதவியாக இருந்த முன்னோர்களைப் பற்றியும் விரிவாக உளியானது தனது மொழியின் வாயிலாக எடுத்துரைத்தது.

நம் தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ நூற்றுக்கணக்கான, ஏறக்குறைய பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த, மிகவும் பிரசித்தி பெற்ற சைவ மற்றும் வைணவ ஆலயங்கள் அமைந்துள்ளன. அவற்றில் ஒரு சிறு துளியினை ஒரு கருத்து கோட்பாட்டோடு பஞ்சபூதத் தலங்களைப் பற்றி உளியின் மொழியானது உங்களுடன் பேசியது. அந்தக் கோட்பாடுகள் அமைந்த ஐந்து ஆலயங்களைப் பற்றிய இத்தொடரானது இந்த இதழுடன் முற்றுப்பெறுகிறது. ஆனால் உளியின் பயணமானது சிறிது காலம் ஓய்வினை எடுத்துக் கொண்டு தனது குறிக்கோளுடன் மற்ற ஆலயங்களுடன் தொடர்ந்து பயணிக்க உள்ளது. மேலும் இவ்விடைப்பட்ட காலத்தில், இத்தொடரானது ‘உளி பேசும் மொழி‘ என்ற தலைப்பில் ஒரு



புத்தகமாக மேலும் மெருகூட்டப்பட்டு வெளிக்கொணரப்படும் என்பதனையும் உளியின் வாயிலாகத் தெரிவித்துக் கொண்டு உளியானது தங்களிடமிருந்து தற்காலிகமாக விடை பெற்றுக் கொள்கிறது.

தற்போதைக்கு முற்றும்! மீண்டும் சந்திப்போம்!! நன்றி வணக்கம் !!!

தமிழ்நெஞ்சம் இதழில் 36 தொடர்களாகக் கடந்த மூன்று வருடகாலமாக வெளிவந்த கட்டுரைத் தொடரான ’ உளி பேசும் மொழி’ நிறைவுக்கு வந்திருக்கிறது. மாதமொரு முறை வெளிவரும் இதழொன்றில், தொடர் கட்டுரை எந்த அளவுக்கு வரவேற்புப் பெறுமோ என்ற எண்ணத்துடனேயே ஆரம்பத்தில் சேர்த்துக் கொண்டேன். இருப்பினும் தனது வளமிக்க மொழிநடையால் வாசகநெஞ்சங்களை ஆக்கிரமித்து, அடுத்த இதழ் எப்போது வருமென ஏங்க வைத்து விட்டார், எழுத்தாளர் நெல்லை சோமசுந்தரி.

உண்மையில் ஒரு படைப்பில் கையாளப்படும் கருவும், எழுத்துரு பெறும் மொழிநடையுமே அதன் வெற்றியைத் தீர்மானிக்கும். அவ்வகையில் மாபெரும் வெற்றியைக் கைக்கொண்ட இவரை பாராட்டாமல் இருக்க முடியாது. ஆன்மீகம் சம்பந்தமாக எழுதப்படும் படைப்புக்கள் பெரும்பாலும் ஆன்மீகவாதிகளையே ஈர்க்கக்கூடியதாக அமையும். ஆயினும், இக்கட்டுரை வாசிக்கும் அனைவரது இதயங்களையும் ஈர்த்து விட்டதுடன், இவரின் உளி பேசும் மொழிவழி உதித்த இக்கட்டுரை கோயில்களின் அழகை, பிரபஞ்சத்தின் எழிலை சுவைகூட்டி எல்லோரிடமும் கொண்டு சேர்த்திருக்கிறதென்றால் அது மிகையாகாது.

இவர் இதுபோல பற்பல படைப்புகளை தமிழ்கூறும் நல்லுலகிற்கு படைத்து நல்கிட வாழ்த்துகிறேன்

தமிழ்நெஞ்சம் அமின்

# வெண்பாப் போட்டி (பயணம்) 50

சட்டெனச் செய்தாயோ சட்டினியும் உப்புமாவும்
விட்டிடேன் ஆளை விரும்பிடவோ — தட்டிலே
பட்டெனப் போடாதே பொன்மயிலே நானுமே
நட்புடன் உண்ண நலம்.

கு.கதிரேசன்

.

மட்டனும் மீனும் மகிழ்வோடு உண்ணுவேன்
இட்டம் அறிந்திருந்தும் ஏனோநீ — கொட்டுகின்ற
தட்டைப் பயறும் தயிறு வடைகளும்
ஒட்டும் பிடிக்கலைம் மா!

பொன்மணி தாசன்

.

தினந்தோறும் உப்புமாவைக் கிண்டிக் கொடுக்க
மனமோவொப் பாது மறுத்து — குணவான்
உணவு விடுதியில் உண்ணவே தந்தான்
திணையுப் புமாவை தினம் .

கவிஞர். அ. முத்துசாமி, தாரமங்கலம் .

.

காலமும் இட்டலி கத்தரிக்காய்ச் சாம்பாரா
ஓலம் இடுகிறதே உள்ளமது — சீலமுடன்
இடியாப்பம் தோசை இனிப்புடை முக்குழியாய்
விடியலைத் தந்து விரும்பு.

பொ. முத்துராக்கு.

.

தட்டி எடுத்தடுக்கும் சப்பாத்தி யோடுநித்தம்
ரொட்டியாய்த் தின்னுவதே ரோதனை — கெட்டியாய்க்
கேப்பையில் கூழைக் கிளறி எடுத்தளித்தால்
மூப்பையும் நான்வெல்வேன் முன் !

பாவலர் கோவதன், மலேசியா

.

தொடர்ந்துநான் வீட்டிலே தோசையே உண்டே
உடம்பே மரத்ததுதான் உண்மை — கடமை
முடித்துவிட்டாய் நீயும்,  முடியவில்லை என்னால்
இடியாப்பம் செய்வாய் இனி...!

செண்பகஜெகதீசன்...

.

கோழிவெட்டி ஆடுவெட்டிக் கூவுற சேவலோடு
ஆழியில் மீன்பிடித்து அத்தனைக்கும் — வாழிய
சொல்லாமல் கொன்றழித்துக் கூட்டாக  உண்ணாமல்
நல்லது செய்வோமே நாம்

பாரதி கரு.இளஞ்செழியன்

.

எப்பவும் வீட்ல எளிமையா உப்மாதான்
தப்புன்னு சொல்லல தங்கமே — அப்பப்ப
நாக்குச் சுவைக்காக நல்லதா நாலுவகை
ஆக்கிநீ போட்டா அழகு

இரா அழகர்சாமி

.

எப்போது பார்த்தாலும் இங்கே அரைக்கவேண்டும்
தப்பாது தேங்காய்ச்சட் னித்தாங்க — அப்பப்பா
சாமி முடியவில்லை... .தக்காளிச் சட்னியை
நாமெங்கே செய்ய? நகரு

தென்றல் கவி

.

எப்பொழுதும் இட்லியும் ஏகாந்தத் தோசையுமாய்
ஒப்பவே செய்திடா துள்ளமே — எப்பொழுதும்
ஒப்புமா உப்புமா? ஓயாமல் இட்டதினால்
செப்புமா நாக்குச் சுவை?

கீதா அருண்

# வெண்பாப் போட்டி (பயணம்) 50

முப்பொழுதும் சோற்றினை மென்றுயா னுண்பதா ?
இப்பொழுதே வேண்டு மிடியப்பம் — தப்பாது
நண்டுக் கறியோடு நான்விரும்பும் மீனதையும்
கொண்டுநீ வந்து குலவு .

இரா . சம்பந்தன், யேர்மனி

.

திண்ணதையே திண்ணுதிண்ணு  செத்திருச்சு நாக்குயிப்பப்
பண்டிகைபோல் கேக்குது பண்ணுவியா? — மண்மணக்கும்
வெள்ளைப் பணியாரம் மேலவொரு சட்னிவச்சா
அள்ளி அடிச்சிடுவேன் ஆறு!

செ. இராசா

.

இட்டலி தோசை இடியாப்பம் என்றேதான்
வட்டலில் நாளும் வழங்குகின்றாய் — சொட்டசொட்ட
நெய்மணந்து நாவினிக்கும் வெண்பொங்கல் இன்றேனும்
செய்வாயா நற்றுணையே செப்பு !

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்

.

ஆசைப் படுமெனக்கோ அன்றாடம் ஓர்உணவா
தோசையும் இட்லியும் தூரவை — ஓசை
இடுவதை விட்டே இடியாப்பம் பிட்டை
அடுக்கிவைத்தால் உண்பே னடி!

தனசேகரன் ரெங்கசாமி

.

முள்ளங்கி சாம்பாரும் மூன்றுதெரு வீசும்சீ
வெள்ளமாய் கண்ணீர் வெளிவரும்  — துள்ளிடும்
மீன்கறி பிள்ளைகள் மீந்திடாமல் சாப்பிடுவர்
ஏன்தினமும் கேட்டமுமே என்று

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

சாம்பாரு வெச்சுத்தான் சாப்பாட்ல ஊத்துறியே
பாம்பாறு மாதிரிதான் பாயுதடி — பூம்பாவாய்!
நீச்சத்தண் ணிச்சோறு நான்தின்னக் கொண்டுவாடி
பேச்செதுவும் பேசாமப் போய்.

சி. செல்லமுத்து,  மேல்மங்கலம்.

.

சப்பாத்தி , கேழ்வரகும் சட்டினி சாம்பாரும்
எப்படித்தான் உண்பேனோ என்நாளும் — தப்பிடவே
இட்டலியும் தேம்பால் இடியாப்பம் கேட்டாலோ
திட்டுகிறாள் சொல்வீரா தீர்ப்பு

பாவலர்மணி வா.சண்முகம்

.

இப்பவும் உப்புமாவா?  எப்படித்தான் தின்பதோ?
அப்பம் இடியாப்பம் இட்டிலி — இப்படி
ஏதேனும் செய்யலாமே! ஏக்கமே மிச்சமிங்கு!
காதிலேனும் கூறுவதைக்  கேள்!

வானதி சந்திரசேகரன்

.

கூடுதலா யாக்கி குளிர்ப்பெட்டி ஆங்கடுக்கி
ஓடுகின்ற வாழ்வில் ஒவ்வொருவர் —  வீடுவந்து
சூடாக்கி உண்ணச்  சுவையில்லை சத்தில்லை
ஆடாம் உடன்கறி ஆக்கு

இரா இரத்தினகுமார்

.

ஒன்னவே செய்யுற ஓயலையா வுன்கையும்
என்னமோ திங்கறன் எப்போதும் — சொன்னாக்கேள்
பஞ்சாபித் தாபாவைப் பாத்துப்  பசிதீர
வஞ்சமில்லா துண்ணலாம் வா.

தன்ராஜ் பாப்பணன்

.

பருப்புடன் சாம்பார் பலநாட்கள் வைத்தால்
இருசிக்க வில்லை இனிநீ – கருவாய்
அருஞ்சுவைக் கூட்ட அனுதினமுங் காரஞ்
சேரும்மா கண்மணி யே .

சரஸ்வதி பாஸ்கரன் .

.

வாக்குக் கொடுத்துதான் வாகாய் எனக்குத்தான்
வாக்கப் படும்மச்சான் வந்திடு – சோக்கான
நீயும் ஒரேபல காரம் சமைக்காதே
காயுடன் பல்உணவு செய்.

சோ. சுந்தரேசுவரி

.

நித்தமும் இட்டிலியா நெஞ்சே வெடிக்குது
பத்தியமாய் எண்ணுகின்ற பத்தினியே – அத்தான்
மனமறிந்து பூரியாய் மாற்று! கனவை
நனவாக்கு கண்ணே நயந்து.

ஓசூர் மணிமேகலை

.

காலையிலே எப்போதும் கேழ்வரகுக் கஞ்சிதானா?
மாலையில் கட்டஞ்சாய் மட்டுமா? – பாலைப்
பதமாக்கிப் பக்குவமா பாயாசம் செஞ்சா
எதமா இருக்காதா இன்று!

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

.

குண்டுமல்லி இட்லி குலைத்துவைத்த பூண்டுப்பொடி
உண்டிங்கே என்றாலும் உள்ளத்தில் உண்ணவே
நண்டு குழம்புடன் நல்லாப்பம் நான்கையே
எண்ணிட ஏக்கம் எழும்.

குயில்.மு.இரசியா பேகம்.

.

ஊத்தாப்பம் தின்னத்தான் ஊறுதடி நாவெனக்கு
ஆத்தாடி நீயெனக்கோ ஆக்கித்தான் – ஊத்துற
கஞ்சியைக் கண்டாலே கடுப்புத்தான் மிஞ்சுதடி
பஞ்சுபோல் ஊத்தாப்பம் தா!

இயற்கை விரும்பி அ.வள்ளிபாபு, நெய்வேலி.

.

உப்புமா தின்றே உயிர்க்கிறேன் நானுமிங்கு
தப்புமா என்றாலும் தப்பாமல் – எப்பொழுதும்
முன்வைப்பாள் நாளும் முரணாய் இனிப்பாய்
இடியாப்பம் வைப்பாளோ? இன்று

ஜனனி செல்வா

.

வாய்க்கு ருசியாய் விதமாய் சமைக்காது
நாய்ச்சோறு போட்டதனால் நாருசி – சாய்ந்ததே
மோர்க்குழம்பு சாப்பிட மோகமாய் ஈர்க்கையில்
யார்க்கிது வேண்டுமிங்கு சொல்

கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

.

பொதியிட்ட ஊனுடன் பூச்சிபடாக் காயும்
கதியில் சமைக்கலாம் கண்ணே – மதியிடு
கொல்லைதந்த கீரைக் குருத்தெடுத்து ஆக்கினால்
மெல்லெனச் சாவும் மெலிந்து

எஸ். நேசன்

.

ரசம்ரசம் வாழ்வே ரசமின்றி நித்தம்
விசமாய்த்தான் தோன்றும் விடியல் – மசமசவென்(று)
ஆயும் அயிரைமீன் ஆக்கிவைத்தால் உன்வாசல்
நாயாய்க் கிடப்பனடி நான்.

வள்ளி முத்து

.

# வெண்பாப் போட்டி (பயணம்) 51

போட்டியின் கால அளவு மார்ச் 01 முதல் 12 வரை 2026

இம்மாதப் போட்டி...

.

பள்ளிகளில் அரசு பொதுத்தேர்வு தொடங்க இருப்பதால்...
அனைத்து குழந்தைகளும் 100% தேர்ச்சி பெற வேண்டும் என்று... அனைத்து குழந்தைகளையும் வாழ்த்தும் வகையில் ஆளுக்கொரு வெண்பா எழுதவும்...

.

சுலபமான கருப்பொருள் என்பதால் இம்மாதம் எடுத்துக்காட்டுப் பாடல் இல்லை...

.

அசத்துங்கள் கவிஞர்களே....

.

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :- தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் ஆசிரியர்
மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# கற்பகத்தின் கல்யாணம்





12


**அன்புச்செல்வி சுப்புராஜு**

பட்டாபிராம், சென்னை - 600072


பேசும்போது 'ஏலே... என்ன சொல்லுறவேன்' என்று இடைமறித்த அப்பாவிடம் 'ஒரு நிமிசம் ப்பா, பேசிடுறேன்' என்றார் செல்வம்.

'அதுக்காவ...நாளன்னைக்கு வெள்ளிக்கிழமை, வருசப்பொறப்பு அதுவுமா பூ வைக்க முடியுமா? சின்னப்பைய பேச்சு போல இருக்கே... கல்யாணமுங்கிறது வெளயாட்டு இல்ல... எம்புட்டு கெடக்கு'

'அதெல்லாம் பெரிசா எதுவுமில்லை, பூ, பழம், வெத்தலை பாக்கு, வாங்கிட்டு வந்து தட்டு மாத்தினா போதும் ப்பா' சொன்ன செல்வத்தை உறுத்துப் பார்த்தாள் கற்பகம்.

'என்னங்க இப்படி பாக்குறீக... பூவைக்க பெரிய கூட்டமெல்லாம் வேணாங்க... வைகாசி மொத வாரத்துலயே கல்யாணம் வச்சுப்போம். அப்ப எல்லோரையும் கூப்பிடலாம்... சரிங்களா? கேட்ட செல்வத்தைத் திகைத்துப் பார்த்தாள் கற்பகம்.

'நீ கோபப்படுறது சரிதான் க்கா, என்ன சொன்னாலும் புடிச்ச மொயலுக்கு மூனு காலுன்னு, சொன்னதவே சொல்லிட்டு இருக்காங்களே இந்த மாமா. எனக்கென்னவோ சரியா படல' காதுக்குள் முணுமுணுத்த தங்கச்சியைப் பார்த்து தலையாட்டினாள்.

'மாமான்னா சொன்ன பாப்பா, ரொம்ப சந்தோசம். உங்க எல்லாரையும் நா பத்திரமா பார்த்துக்குவேம்மா' செல்வம் பேசப்பேச 'நீ என்னடா பார்ப்ப... மொதல்ல வீட்டுல இருக்குற பொம்பளைக கிட்ட கலந்து பேசணும். ஒத்த பொம்பளைப்புள்ள உங்கக்கா, அது என்ன சொல்லுதோ - ஏது சொல்லுதோ - யாருக்குத் தெரியும்? உங்கண்ணன், தம்பிக சொந்தக்காரவுக கிட்டேயெல்லாம் பேச வேண்டாமா? பொண்ணு புடிச்சிருக்குனு எனக்குப் புரியுது. அதுக்காக உடனே கல்யாணம் பண்ணிக்கிறேனு சொல்றதா? நகைநட்டு, போக்குவரத்து எல்லாம் கலந்து பேசவேண்டாமா? மொதல்ல சாதகம் பொருந்துதானு பார்க்கணும். பொருந்துச்சுனா அடுத்தடுத்து எம்புட்டு வேலை கெடக்கு? எடுத்தோமா கவுத்தோ மானு பேசக்கூடாது. கௌம்புவோம் வாங்க' சொல்லியபடியே தாத்தா கிளம்பினார்.

'உட்காருங்க ப்பா... நா கொஞ்சம் பேசிக்கறேன்' தொடங்கிய செல்வத்தின் பேச்சை இடைநிறுத்திய கற்பகம் 'நீங்க சொல்லுறதுதா சரிங்க தாத்தா, நீங்க வந்தப்போ இருந்து இதத்தான் நானும்

சொல்றேன். இப்பவாவது பொண்ணு கேட்டு வரவும் சில வழிமொறைக இருக்குனு உங்களுக்கும், உங்க மகனுக்கும் புரிஞ்சு இருக்கும். வயசுல இவ்வளவு பெரியவுக உங்களுக்கே யோசிக்க இத்தன விசயம் இருக்கும் போது, எனக்கு எவ்வளவு இருக்கும்னு நீங்க புரிஞ்சுக்கணும் தாத்தா' மூச்சு விடாது பேசினாள்.

'பொறுங்க... பொறுங்க... காட்டாத்து வெள்ளமாட்டம் பேசிக்கிட்டே போறீங்க... இப்ப என்னாச்சுனு இம்புட்டு வேகம்... இதபாருங்க... நா சென்னையிலிருந்து வரும் போது உங்கள பொண்ணு பார்ப்போமுனு எனக்குத் தெரியா துங்க... இன்னைக்கு காலைலதா தேனி பஸ் ஸ்டேண்டுல வேண்டப்பட்ட ஒருத்தரு உங்களைப் பத்தி சொன்னாரு... நாலு நாளுதா லீவு... சரி, அதுக்குள்ள ஊரு பெரியவுககிட்ட பேசி, உங்க வீட்டுக்கு சொல்லி அனுப்பி, மொறப்படி பார்த்துப்போம், பிடிச்சா பேசலாமுனு தான் வந்தோம். நாங்க வந்த மதுரை பஸ்ல பின்வாசல் வழியா இறங்குறோம். முன்வாசல் வழியா உங்கம்மா ஏறிட்டாங்க'

'பொண்ணோட அம்மா ஏதோ வேலையா வெளியே போகுது. இன்னொரு நாளைக்கு வரலாமுனுதான் அப்பா சொன்னாக... என் உள்மனசு இன்னைக்கே பார்க்க சொல்லுச்சு, அதான் வந்தோம். இப்பவும் ஒன்னுமில்லைங்க, பார்த்ததும் பிடிச்சிருச்சு, இது அழகு சார்ந்த விசயமில்லைங்க... மூத்த பொண்ணா குடும்பத்தை பார்த்துக்கறது, தையல் வகுப்பு, டியூஷன் எடுக்குறதுனு எப்பவும் எதையாவது செய்துட்டே இருக்கிறது... பொண்ணு பார்க்க வந்துருக்கோமுனு தெரிஞ்சும் வெக்கப்படாத வயசுல பெரியவங்ககிட்ட நியாயம் பேசுறது... எல்லாந்தா காரணம். அதா சம்பளம் மொதக்கொண்டு எல்லாம் சொல்லிட்டேன். நீங்க என்ன சொல்றீங்க' கேட்ட செல்வத்தைத் திகைத்துப் பார்த்தாள் கற்பகம்.

'எனக்கென்னவோ மாமா தெளிவா பேசற மாதிரி இருக்குக்கா, நீ ஏன் சரின்னு சொல்லக் கூடாது?' கேட்ட தங்கையை குழப்பமாகப் பார்த்தாள்.

'வெசனப்படாத பாப்பா, சித்தப்பா இருக்கேன்ல... அம்மா, அப்பாட்ட பேசறேன். மொதல்ல சாதகத்தை எடுத்துக் கொடு. நாங்க போயி பொருந்துதானு பார்த்துட்டு வர்றோம்'

'நா எடுத்துட்டு வர்றேன் சித்தப்பா'



வேகமாக சென்ற தங்கச்சியை வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்த கற்பகத்திடம் ‘கொஞ்சம் தண்ணி தாங்க‘ கேட்டார் செல்வம்.

’பக்கத்துலதான இருக்கு, நம்மகிட்ட எதுக்கு கேக்கணும்’ நினைச்சுக்கிட்டே தண்ணீர் சொம்பை எடுத்து நீட்டினாள் கற்பகம். வாங்குவது போல எழுந்த செல்வம், அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் ‘சாதகம் எப்படி இருந்தாலும் பொருந்திருச்சுனுதாங்க பதில் வரும். வரும் வெள்ளிக்கிழமை பூ வைக்க வருவேன். தயாரா இருங்க‘ என்று சொல்லவும் விழித்துப் பார்த்தாள் கற்பகம்.

அவள் பேச வாயெடுக்கும் முன்பே சாதகத்துடன் வந்த தங்கச்சி, சித்தப்பா விடம் கொடுக்கவும், ‘நம்ம வீட்டு சார்பா நீங்களும், அப்பாயியும் கூடப் போயி பார்த்துட்டு வாங்க சித்தப்பா‘ சொன்ன கற்பகத்தை ஆழ்ந்து பார்த்தபடி, ‘அப்ப போயிட்டு வர்றேங்க, வர்றேன் வாயாடி, வெள்ளிக்கிழமை உனக்கு என்ன வாங்கிட்டு வரட்டும்‘ விடைபெற்றபடி கேட்ட செல்வத்திடம் ‘அதுவந்து மாமா... பெரிய பட்டியலே இருக்கு...‘ கிண்டலாகத் தொடங்கிய தங்கச்சியை நறுக்கென்று கிள்ளவும் வாயை மூடிக் கொண்டாள். அனைவரும் விடைபெற்று வெளியே போக, சன்னலின் வழியே அவளையும் அறியாது எட்டிப் பார்த்தாள் கற்பகம்.

‘சக்ஸஸ்...‘ என்றபடி யாருமறியாது கட்டைவிரலை உயர்த்தினார் செல்வம்.



## கலங்காதே கண்ணம்மா

துள்ளி ஓடும் கண்ணம்மா
உன் கண்ணில் கண்ணீர் ஏனம்மா?

குறைகளை கண்டு கலங்காதே
குறையும் நிறைதான் வருந்தாதே!

வெண்ணிற மேகம் கருத்தது
வான் மழை எங்கும் கொட்டியது!

கூட்டுப்புழுவும் சுருங்கியது
பட்டாம் பூச்சியாய் பறந்தது!

மின்னல் மண்ணில் முட்டியது
காளான் அங்கே பிறந்தது!

ஜன்னல் கொஞ்சம் திறந்தது
அதில் பரந்த வானம் தெரிந்தது!

பசுவின் மடியோ கனத்தது
கன்றின் வயிறோ நிறைந்தது!

முட்டையின் உள்ளே உடைந்தது
அழகிய குஞ்சும் பிறந்தது!

விதையும் மண்ணில் புதைந்தது
மரமும் ஒன்று துளிர்த்தது!

நெல்லும் ஆலையில் வெந்தது
நாம் உண்ணும் உணவாய் வந்தது!

இடர்களை கண்டு கலங்காதே
புது விடியலும் பிறக்கும் வருந்தாதே!

ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்
செங்கோட்டை

# சிறுவர் சங்கமம்

## ஆடுவோமே...

வானவில்லில் வண்ணம் ஏழு
வானில் பறக்கும் பட்டம் ஏழு

சிவப்பு வண்ணம் சிரி சிரி
ரோஜாப்பூ போல சிரி

ஆரஞ்சு வண்ணம் ஆடு ஆடு
மாலைவானம் போல ஆடு

மஞ்சள் வண்ணம் ஒளி ஒளி
சூரியன் போல ஒளி

பச்சை வண்ணம் துளி துளி
இலைமேல் பனித்துளி

நீலம் வண்ணம் பாடு பாடு
வானம்போல பாடு

இண்டிகோ வண்ணம் தேடு தேடு
இரவின் ரகசியம் தேடு

ஊதா வண்ணம் ஆடு ஆடு
மலர்தோட்டம் போல ஆடு

ஏழு வண்ண நண்பர்கள் நாம்
கைகள் கோர்த்து  விளையாடி மகிழ்வோம்!

அன்புச்செல்வி சுப்புராஜு



# மரத்தில் வாழும் சின்ன தேவதை

ஒரு நெற்கதிர் நறுமணமுடன் கூடிய கிராமம் -அதன் பெயர் அரசமரம் பாளையம். அங்கே நடுவே, பசுமையான ஒரு பெரிய அரசமரம் இருந்தது. எல்லாரும் அதை ‘மரதாய்‘ என்று அழைப்பார்கள்.

மரத்தின் உச்சியில், யாருக்கும் தெரியாமல் ஒரு சின்ன தேவதை வசித்தாள்.

அவளுடைய பெயர் ‘துளசி‘ - சிறிய சிறகுகள், பூப்போன்ற தலைமுடி, பசுமைச் சட்டையுடன் ஒரு அழகான தேவதை துளசி, அந்த மரத்துக்கு வந்து விளையாடும் குழந்தைகள், பறவைகள், வண்டு எல்லோரையும் கவனித்து பாதுகாப்பாள்.

ஒருவர் மரத்துக்கு தீ வைக்கும் முயற்சி செய்தாலோ ஒருவர் பறவையின் முட்டையை கல்லால் அடித்தாலோ, அடுத்தவர் அறியாவண்ணம் அவள் சின்ன சின்ன மாயங்களைச் செய்து காப்பாற்றுவாள்.

ஒரு நாள், முருகன் என்ற ஒரு சிறுவன், காசுக்காக மரம் விற்குற ஆளுடன் மரத்தின் கிளையை வெட்ட முயன்றான்.

‘இவ்வளவு பெரிய கிளை! வெட்டினா நல்லமா காசு கிடைக்கும்!‘ அவனுக்கு மரம் வெட்டுவது தவறு என்ற ஞானம் அதுவரை வரவில்லை.

அந்த நேரம்... ஒரு இலகுவான ஒலி... மரத்தின் மேல் ஓரத்தில் ஒரு சின்ன ஒளி பரவியது.

துளசி தேவதை தோன்றினாள். அவள் ஒருவரும் பார்க்காதவாறு முருகனுக்கு அருகே வந்தாள்.

துளசி: ‘ஐயா முருகா! மரத்தைக் காப்பாற்று. மரங்கள் உயிருள்ளவை. அவைகளால் பேசமுடியாது. அவை உனக்கு மட்டுமல்ல. ஊருக்கே நிழல் கொடுக்கும்!‘

முருகன் அசந்துபோனான்... ‘ஐயோ! யார் பேசுறது?!‘

அவன் சுழன்று பார்த்தான். யாரும் இல்லை. அவனுடைய மனத்தில் ஓர் உணர்வு வந்தது.

‘இனி ஊர்ல மரங்களை வெட்டக் கூடாது. வெட்டுபவர்களுக்கும் உதவி செய்யக் கூடாது ‘ என்ற சின்ன சிந்தனை உதயமானது.

அவன் மனதிற்குள் மன்னிப்பு கேட்டான். முருகன்: ‘மரத்தாயே! மன்னிச்சுக்கோ! இனிமேல் நான் ஒரு கிளையைக் கூட வெட்டமாட்டேன்.‘

அதன்பின்... அவன் அந்த மரத்தின் கீழே ஒரு சின்ன பலகை வைத்தான்.

அதிலே எழுதியிருந்தது: ‘மரங்களை வெட்டாதீர்கள். அவை நமக்குப் பாசம் தரும் உயிர்கள்!‘

அன்றிலிருந்து, துளசி தேவதை அவனை ரகசியமாக அரவணைத்தாள். முருகன், மரங்களை பாதுகாக்கும் சிறந்த நண்பனாக அரசமரம் பாளையம் கிராமத்தில் பிரபலமானான்.



மாதவப்ரியா

# யார் உண்மையான நண்பன்?



உலகில் பல உறவுகள் உள்ளன. அதில் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் என்றால் அம்மா, அப்பா இவர்களுக்கு அடுத்தபடியாக வெளியில் இருக்கும் உறவுகள் என்றால் அது நம் நண்பர்கள் மட்டுமே. அதனால்தான் என்னவோ பெரியவர்கள் உன் நண்பன் யார் என்று சொல் நீ யார் என்று சொல்கிறேன் என்று கூறினார்கள். சரி இப்போது யார் தான் நமக்கு உண்மையான நண்பன் என்று பார்ப்போம். நண்பன் என்பவன் நீ செய்யும் சரியான செயல்களையும் அல்லது தவறான செயல்களையும் உன்னுடன் இருந்து உனக்கு சாதகமாக பேசுபவன் என்றால் அவன் உண்மையான நண்பனா! அல்லது நீ செய்யும் தவறை சுட்டிக்காட்டி உன்னை நல்வழிக்குக் கொண்டு செல்பவன் உண்மையான நண்பனா! என்பதை உங்களிடமே விட்டு விடுகின்றேன்.

உதாரணத்திற்கு மூன்று நண்பர்கள் உள்ளனர் குகன், மணி, கனி என மூன்று நண்பர்கள். அவர்கள் ஒரு நாள் பள்ளிக்கூடம் முடிந்த பின் அவரவர் மிதிவண்டியில் ஏறி வீட்டுக்கு புறப்பட்டு சென்றனர் . இதில் குகன், மணி இருவரும் மிதிவண்டியில் போட்டி போடலாம் என்று கூறினார்கள்.

அதற்கு கனி சொன்னான் இல்லை போட்டி ஏதும் வேண்டாம் நாம் மெதுவாக வீட்டிற்கு செல்லலாம் என்றான். ஆனால் குகனும் மணியும் கேட்கவே இல்லை. குகனும் மணியும் வேகமாக வண்டியை ஓட்டிச்சென்றபோது அதில் குகன் மணியை ஒரு சிறிய பள்ளத்தில் தள்ளி விட்டு தான் வெற்றியடைய வேண்டும் என்ற நோக்கில் வேகமாக சென்றுவிட்டான். அப்பொழுது அந்த வழியாக வந்த மற்ற மாணவர்கள் அவர்களை பார்த்து சிரித்தபடி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அதே சமயம் அந்த இடத்திற்கு கனி வந்தான். வந்த பிறகு மணியை தூக்கி அவனுக்கு முதலுதவி செய்து அவனை அரவணைத்து ஆறுதல்படுத்தி அவனை வா நாம் இருவரும் வீட்டுக்கு செல்லலாம் என்று அவனுடன் அழைத்துச் சென்றான்.

இப்பொழுது உங்களுக்கு நன்றாக புரிந்திருக்கும் இதில் யார் உண்மையான நண்பன்? என்று. முதலில் மிதிவண்டி போட்டிக்கு அழைத்த போது வேண்டாம் என்று சொன்னவனா? அல்லது மிதிவண்டி போட்டியில் வெல்ல வேண்டும் என்று கீழே தள்ளிவிட்டவனா? என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் யார் உண்மையான நண்பன்?

**கா. ச .சோமேஸ்வரன்.**
ஹீ வித்யா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி,
திருஈங்கோயிமலை, முசிறி.





பொ.ஹரிஹரன்,
ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்.





ரா. ஷிவானி





கே.எஸ்.மிதர்ஷனாவ
குப்பு: 7-ஆம் வகுப்புபள்ளி:
சாந்தி பள்ளி
உடுமலைபேட்டை





ரா.சோபிகா





ஜெ.நறுமுகை





ஜீ.தேஜஷ்





# சூரியனே...!

காலையில் தோன்றும் சூரியனே!
நீ மாலையில் மறைவது ஏன் சூரியனே!
வட்டமான சூரியனே!
எங்களை வாட்டலாமா சூரியனே!
மஞ்சள் நிறத்துச் சூரியனே!
கொஞ்சமாய் வெயில் தா சூரியனே!
மங்களமான சூரியனே!
தங்கம் போல் தகதகக்கும் சூரியனே!
பூமியை வாழவைக்கும் சூரியனே!
சாமியாய் பொங்கல் வைப்போம் சூரியனே!
நெருப்புப் பிழம்புச் சூரியனே!
உன்னை வெறுக்க மனமில்லை சூரியனே!
வன்மை குணம் கொண்ட சூரியனே!
மென்மையாக மாறுவாய் சூரியனே!

**ச.யுவஸ்ரீ,**
ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்.



# தன்முனைக்கவிதைகள்

புத்தகம் வாசித்து என்னுள்
மாற்றம் கண்டேன்
அறிவை பெருக்க நூலகம்
நோக்கி நடந்தேன்

ஊருக்கு ஒரு
நூலகம் அமைப்போம்
நாட்டிற்கு நல்ல
குடிமகன்களைச் சேர்ப்போம்.

தன் வயிற்று
பசியை மறந்தவர்
பிறரின் பசியைத் தீர்க்க
நிலத்தில் பாடுபடுகிறார்.

மகளின் வளர்ச்சிக்காக
இயந்திரமாக ஓடும் தந்தை
தன் வாழ்நாளில் சிரிப்பை
மறந்த சோகம்

அடிக்க வந்தபொழுது
பயத்தில் ஒதுங்கினேன்
அணைக்க வந்தபொழுது
மகிழ்ச்சியில் சிரித்தேன்

பிஞ்சுவிரல் பிடித்து
இரசித்து மகிழ்ந்தவர்
வாழ்வில் உயர
வழி காட்டுகிறார்.

சீறும் பாம்பைக் கண்டு
அஞ்சாத நான்
சினத்துடன் பார்க்கும்
தந்தையைக்
கண்டு அஞ்சினேன்.

விளையாடும் பொழுது
வேகமாக செல்லும் நேரம்
புத்தகத்தைத் திறந்தவுடன்
நத்தையாய் ஊர்கிறது.

சிறுவயதில் சுற்றுலா
செல்லாத அப்பா
தன் மகனுக்கு இந்த
உலகையே சுற்றிக்
காட்டுகிறார்.

அன்று சூரியனைப் பார்த்து
மணி சொன்னார்கள்
இன்று கடிகாரம் இருந்தும்
சரியாகச் சொல்வதில்லை

சமைக்கும் அம்மாவிடம்
என்ன வேண்டும் என்றேன்
ஒருநாள் விடுமுறை என்றார்
அழுது விட்டேன்



செ.ப. கமல்சங்கர்
சென்னை

## தன்முனைக் கவிதைகள்

**வேகமாக அடிக்கும் காற்று**
**திசைமாறிப் போனது**
**மாவு வியாபாரியின் வாழ்க்கை**
**கேள்விக் குறியானது**

**குடும்பத்தின் நலனைத்**
**தூரத்தில் நிறுத்துகிறான்**
**நாட்டைக் காக்கும்**
**இராணுவ வீரன்**

**அரிதாரம் இட்டு**
**அரசனாக நடிப்பவன்**
**குழந்தை அழுகிறது**
**ஒரு மடக்கு பாலுக்காக...**

**தூரத்தில் இருக்கும்**
**பசுமை மலைக்காடு**
**அருகில் சென்றால்**
**பாதையற்ற முட்புதர்கள்**

**வாடிவாசலில் அடங்காத**
**ஜல்லிக்கட்டு காளை**
**வீட்டில் பெயரனிடம்**
**கொஞ்சி விளையாடுகிறது**



சு.சுப்புராஜூ
பட்டாபிராம், சென்னை



# நாய்களின் தெரு

வீதியில் பறக்கிறேன்
சிறகுகள் எனக்கில்லை
நேற்று வானொலியில் கடமை.

வீதி என்னை ஒருபோதும்
நிராகரிப்பதில்லை
தார் நிறங்கொண்டாலும்
என்னை வீழ்த்தும் பள்ளங்கள்
அதன் உள்ளத்தில்
காணக்கிடைக்கவில்லை.

நேரத்துக்குப் போய்
நேரம் சொல்ல வேண்டும்
அது என் கடமை.
விரைந்து செல்லத்தான் முடியவில்லை
இது நாய்களின் தெரு.

நாய்களுக்கு
நாட்டில் இடமில்லை என்று
எந்தச் செய்திகளும்
நான் வாசிக்கவில்லை..
நடு வீதியினை உறுதி எழுதியதுபோல்
நாய் ஒன்று நின்று
நாட்டியமாடுவது புதுமையில்லை.

நாய்களுக்கும் எனக்கும்
விரோதம் இருக்க நியாயமில்லை
நடுத் தெருவை
நாய்க்கு யாரும் எழுதிக்கொடுத்ததாய்
கேள்விப்படவுமில்லை
அது சொட்டும் விலகவில்லை
திமிரோடு படுக்கிறது வாலாட்டி.

ஓரத்தில் தூங்கலாம்
ஒரு மரத்தின் கீழ் குடும்பத்தோடு
சல்லாபிக்கலாம்.
வாரத்தில் ஒருமுறை
வானொலிக்கு வருமென்னை
விபத்துக்குள்ளாக்கி மகிழ
இந்த நாய்க்கு என்ன தேவை?

நான் நிதானிக்கிறேன்
அதன் தொங்கும் நாக்கு
'இது நாய்களின் தெரு" என்று
கர்வத்தோடு எழுதிவிட்டுக்
குரைப்பதை கவனித்து
நாய்க்கு வழி விட்டு
நான் போகிறேன்..!

என் பின்னால்
ஒரு கனரக வாகனம்
கனைத்துக் கொண்டு வருகிறது வேகமாய்..
கடமை முடிந்து போகிறேன்
நாய் நடுத்தெருவில் சோகமாய்..

எந்த நாயையும் காணவில்லை
நடுவீதியில்..
காகங்கள் மட்டுமே பறக்கின்றன
பண்டிகைகொண்டாடி..

ஜே.வஹாப்தீன்




நான்கு வரிகளில்
நானிலு விரிக்கிறது
வாழ்க்கையின் கூர்மையும்
மௌனத்தின் ஆழமும்.

நானிலு என்பது நான்கு வரிகளில் உலகைச் சொல்லும் கவிதை வடிவம்.

தெலுங்கு இலக்கியத்தில் இந்த வடிவம், குறைந்த சொற்களில் அதிக அர்த்தம் சொல்லும் திறனால் தனித்துவம் பெறுகிறது. ஒவ்வொரு கவிதையும் ஒரு சம்பவம், உணர்வு அல்லது சிந்தனையை நேரடியாக வாசகனின் மனதில் பதிய வைக்கிறது. ஆய்வுக் கோணத்தில் பார்க்கும்போது, நானிலு நவீன சிறுகவிதை மரபின் ஒரு முக்கிய வடிவமாக விளங்குகிறது.

நானிலு நூறு : ஒரு பார்வை
(நானிலு மொழியாக்க கவிதைகள்)
தெலுங்கு மூலம் : டாக்டர் ஹி .கோபி
தமிழாக்கம் : சாந்தா தத்
நூல்வகை : நானிலு கவிதைகள்
மொழிபெயர்ப்பு
பக்கங்கள் : 80
விலை : ரூ 110
வெளியீடு : தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை, சென்னை.

இந்நூல், 'அன்பின் சங்கமம் வெளியீடாக' எழுத்தாளர் சாந்தா தத், தன்முனைக் கவிதைகள் நூலகத் திறப்பு விழாவில் (25.01.2026,அன்று) சென்னை, பட்டாபிராமில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர் கன்னிக்கோவில் இராஜா, தன் அரசமன உரையில் ‘இந்தத் தொகுப்பு முழுவதும் யதார்த்தத்தின் பதிவுகளாக , மானிடத்தின் மேன்மையாக உளவியல் கூறுகளாக பயணித்துக் கொண்டிருக்கிறது. வாசிக்கிற மனம் படைத்த அனைவரும் படைப்பாளிகளாக மாறும் சூட்சுமத்தை இந்நூல் தருகிறது‘ என்கிறார்.

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு அவர்கள், தன் அன்புரையில்... ‘ எழுத்தரசி சாந்தாதத் அவர்கள், தமிழ்த் தோட்டத்தில் தெலுங்கு நானிலு கவிதைகளை 'நானிலு நூறு‘ எனும் சிம்பொனியாக இசைக்க வைத்துள்ளார் ‘ என்கிறார்.

ஆம், இந்த நூலில் இடம் பெற்றுள்ள நானிலு கவிதைகள், நான்கு வரிகளில் மனித வாழ்க்கையின் ஆழமான உண்மைகளை வெளிப்படுத்தும் நவீனக் குறு கவிதை முயற்சியாக அமைந்துள்ளன. சொல் சிக்கனம், கருத்துத் தெளிவு, மௌனத்தின் அர்த்தம் ஆகியவை இத்தொகுப்பின் முதன்மை அடையாளங்களாகத் திகழ் கின்றன.

நூலிலிருந்து இருபது கவிதைகள் மட்டும் உங்கள் பார்வைக்காக...

★ டாக்டர். ஹி .கோபி

அந்த வார்த்தைகளில்
அடர்த்தியான நிசப்தம்
அந்த னால விசாரிப்புகளில்
ஆதரவற்ற தனிமை

இந்த நானிலு, மொழியின் உள்ள டக்கத்தைவிட அதன் மௌன அடர்த்தியை பேசுகிறது. கேள்விகள் அதிகரிக்கும் இடத்தில் தனிமை தீவிரமாகிறது. சொல்லப்படாத வலி, விசாரணையின் உளவியல் வன்முறையாக வெளிப்படுகிறது.

ஊரில் நதி இருக்கிறதா
நதிக் கரையில் ஊரா?
பார்வையைப் பொறுத்தே
கருப்பு

இங்கு உண்மை-பார்வை என்ற இருமை முன்வைக்கப்படுகிறது. நதி இருக்கிறதா என்பதைக் காட்டிலும், நதிக்கரையில் ஊர் இருப்பதா என்ற கேள்வி, பார்வைதான் உண்மையை நிர்ணயிக்கிறது என்பதைக் கூர்மையாகச் சொல்கிறது.

தப்புத் தாளத்திலும்
ஒரு தாளம் இருக்கும்
அனுதாபத்துடன்
செவி கொடுங்கள்

பிழை எனப் பார்க்கப்படுவது கூட ஒரு இசையின் பகுதிதான் என்பதை இந்த கவிதை நினைவூட்டுகிறது. அனுதாபம் என்ற கேட்புத் தன்மையே மனித உறவுகளின் தாளத்தை சரி செய்கிறது.

யுத்தம் வேறெங்கோ இல்லை
உன்னுள்ளேயோ
இரு தரப்புகளும்
நீயே அல்லவா?

போரின் வெளிப்புற அரசியலை விட, மனிதனுக்குள் நடக்கும் உள்முரண்பாடே உண்மையான யுத்தம் என இந்த நானிலு சுட்டுகிறது. குற்றவாளியும் நீதிபதியும் ஒரே நபர்தான்.

இறங்கும் போது
படிகள் உன்னுடன் வராது
உன் அடிகள் தான்
உனக்குத் துணை

வாழ்க்கைப் பயணத்தில் துணை பொருட்கள் விலகினாலும், சுய முயற்சியே உண்மையான ஆதரவு எனும் தத்துவம் எளிமையாக வெளிப்படுகிறது.

சரித்திரத்தை நிராகரிக்காதே
அது
மூன்று காலங்களுக்கிடையேயான
உரையாடல்

**மருத்துவம்**

மாரடைப்பு வந்த முதல் ஒரு மணி நேரம் முக்கியமானது. இதை golden hour என்று கூறுகிறோம். இந்த 60 நிமிடத்திற்குள் அவசரமாக ஆபத்தை உணா்ந்து செயல் பட்டால் மருத்துவர் காப்பாற்ற வாய்ப்பு உண்டு இல்லாவிட்டால் மரணம் நிச்சயமாக ஏற்படும்.

இதைத் தடுக்க வேண்டும் என்றால்....

மன அழுத்தத்தை தவிர்த்திடுங்கள் மகிழ்ச்சியோடு வாழ்வைக் கொண்டாடுங் கள் குடிப்பழக்கம் புகைப்பழக்கம் போதைப் பழக்கம் தீண்டாதீர்கள்

**ந. சந்திர மோகன்**

வரலாறு என்பது கடந்தகாலப் பதிவு மட்டும் அல்ல; அது கடந்த-நிகழ்-எதிர் காலங்களின் உரையாடல். நினைவுகளை மறுப்பது, எதிர்காலத்தை இழப்பதற்குச் சமம்.

கதவு திறந்தால்
புத்தகம் விரிந்தது போலிருக்கிறது
உலகத்தை
வாசிக்க வேண்டும்

வாசிப்பின் அனுபவத்தை மிக அழகான உவமையில் சொல்கிறது. உலகம் ஒரு புத்தகம்; கதவைத் திறப்பது போல் வாசிக்கத் தொடங்கினால், வாழ்க்கை விரிகிறது.

எந்த மொழியெனும்
பேசு
ஸ்பரிசத்தை மட்டும்
மௌனிக்க விடாதே

மொழி வேறுபாடுகளை விட மனித ஸ்பரிசம் முக்கியம் என வலியுறுத்துகிறது. தொடர்பு மௌனமாகி விடக்கூடாது என்பதே மையம்.

கவித்துவம்
ஒரு பூந்தோட்டம்
சுதந்தரத்தில் தலையிட்டால்
பூப்பது கத்திகளே

கவிதையும் சுதந்திரமும் இயற்கை உறவுகள். அவற்றில் தலையீடு ஏற்பட்டால், அழகே வன்முறையாக மாறும் என்ற கூர்மையான சமூக வாசிப்பு.

விழிகள்
விளக்குகள் தாம்
எண்ணெய் மட்டும்
இதயக் கிண்ணத்தில்

பார்வை தான் வெளிச்சம்; ஆனால் அந்த வெளிச்சத்தை எரியவைக்கும் எண்ணெய் இதயம். மனித உணர்வே அறிவின் ஆதாரம் என்கிற நுட்பமான உவமை.

கடலளவு
குழப்பத்தை விட
கடுகளவு
தெளிவு மேல்

பெரும் குழப்பத்தை விட, சிறிய தெளிவே வாழ்க்கையை முன்னெடுக்கிறது. அளவைக் காட்டிலும் துல்லியம் முக்கியம் என்ற வாழ்வியல் கருத்து.

இப்பாதை எனக்கும்
பழக்கம் தான்
இன்று இது என்னை
புதிதாகப் பார்ப்பது போல

பழகிய பாதையும் ஒருநாள் நம்மை புதிதாகப் பார்க்கச் செய்யும். அனுபவமும் மாற்றமும் ஒன்றையொன்று நிராகரிப்பதில்லை என்பதைக் காட்டுகிறது.

மெழுகுவர்த்தித் துளிகளை
உதடுகளில் உத்திர விடுங்கள்
தியாகத்தை
முத்தமிட வேண்டும்

தியாகம் என்பது வேதனை அல்ல; அது அன்புடன் அணைத்துக் கொள்ள வேண்டிய அனுபவம். வலி கூட முத்தமிடப்பட வேண்டும் என்ற கவித்துவ உயர்வு.

கூட்டத்தில் நிழல்கள்
கரைந்து போகின்றன
உன் நிழல் தென்படாவிடில்
உன்னையே தேடிக்கொள்

கூட்டம் அடையாளங்களை அழிக்கிறது. சுய அடையாளம் மறைந்தால், சுய தேடல் அவசியம் என்ற எச்சரிக்கை.

பார்வைக் சாவியால்
வானத்தைத் திறந்தேன்
அப்பக்கம்
நானே தெரிந்தேன்

உலகைத் திறக்கும் பார்வை, இறுதியில் நம்மையே காட்டுகிறது. தேடல் வெளியில் தொடங்கி, சுய அறிவில் முடிகிறது.

★ கவிஞர் றீ .யூ .பல்லம்

விளக்குடன்
ஒப்பிடத் தேவையில்லை
எண்ணெய்க்குத்
தாரை வார்க்காமலிருந்தால் போதும்

உதாரணங்களால் உயர்வு தேவை யில்லை; நேர்மையான ஆதரவு போது மானது என்ற வாழ்க்கை நெறி.

பிரச்சினைகள்
அனைவருக்குமுண்டு
நீ தான்
கரையேறி கூச்சலிடுகிறாய்

வலியின் போட்டியை விமர்சிக்கும் நானிலு. பிரச்சினை இல்லை என்பதல்ல, அதை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதே கேள்வி.

யாத்திரை என்றால்
பயணமல்ல
உன்னுள்ளே நீ செல்லும்
பிரவாகம்

பயணம் வெளியில் அல்ல; உள்ளே நிகழும் மாற்றமே யாத்திரை. ஆன்மீகமான ஆனால் எளிய வரையறை.

★ எழுத்தாளர் சாந்தா தத்

மதப் பிரச்சாரம் போல்
ஓயாமல் பரப்புரை
முகம் தொலைத்து
உடற்பயிற்சியாகி விட்ட யோகா

யோகா என்ற ஆன்மிகப் பயிற்சி, விளம்பரத்தால் உடற்பயிற்சியாக மாறி யிருப்பதைச் சாடுகிறது. முகம் தொலைத்த ஆன்மீகம் என்ற சமூக விமர்சனம்.

பணிப்பெண் விழிகள்
ஏக்கத்துடன்
மெகா சீரியலை விழுங்கும்
வீட்டம்மா மேல்

ஏக்கமும் பொழுதுபோக்கும் சந்திக்கும் இடம். மெகா சீரியல் ஒரு தற்காலிக தப்பித்தல்; வகுப்புவேறுபாடு மற்றும் கனவுகளின் அடக்கம் இங்கு மௌனமாக பேசுகிறது.

இந்த நானிலு தொகுப்பு, மொழிச் சிக்கனம் + தத்துவ ஆழம் + சமூக உணர்வு என்ற மூன்றையும் சமநிலைப்படுத்துகிறது. ஒவ்வொரு கவிதையும் ஒரு சிந்தனை விதை.

மொத்தத்தில், இந்த நானிலு கவிதைத் தொகுப்பு, குறும் கவிதை வடிவத்தின் சாத்தியங்களை விரிவாகக் காட்டுகிறது. ஒவ்வொரு கவிதையும் தனித்தனி சிந்தனைத் துளியாக இருந்து, வாசகனின் மனத்தில் விரிந்து பெரும் அர்த்தங்களாக மாறுகிறது. வாசிப்பிற்கும், ஆய்விற்கும், மாணவர் பயிற்சிக்கும் ஏற்ற ஒரு முக்கிய இலக்கிய ஆவணமாக இந்நூல் திகழ்கிறது.

✦ இறுதிக் குறிப்பு

இந்த நானிலு தொகுப்பு, வெறும் வடிவச் சோதனை அல்ல;

அவை ஒரு முழுமையான இலக்கிய இயக்கம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

எதிர்கால ஆய்வுகளுக்கு இத்தொகுப்பு வலுவான அடித்தளமாக அமையும்.

இந்தப் புத்தகம்... சாதாரணமாய் வெளிவரவில்லை. வம்படியாக சாந்தா தத் அவர்களை மொழிபெயர்க்கவைத்து, இந்நூலை கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்கள்... தன்முனைக் கவிதையின் மூலமான நானிலு கவிதைகள் தெலுங்கிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு, தமிழில் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற அரிய நோக்கத்தில் வெளியிட வைத்தார் என்பது வாசகர்கள் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம். சாந்தா தத் அவர்களும் தனது மோசமான உடல் நலக் குறைவுகளையும் மீறி கடும் உழைப்பைத் தந்திருக்கிறார்.இரு பேராளுமைகளுக்கும் பெரு வணக்கங்கள்.

கவிதை மொழிபெயர்ப்பு என்பது

வார்த்தைகளை மாற்றும் வேலை அல்ல;

அனுபவத்தை கவனமாகக் கடத்தும் கலை.

அதனால் தான், கவிதையை மொழி பெயர்ப்பது எளிதல்ல. ஆனால் அதுவே அதன் அழகும் சவாலும்.

அந்த சவாலை திருமதி சாந்தா தத் அவர்கள் மிகவும் எளிதாகவே சமாளித்துள்ளார் என்பதை வாசகர்கள் நிச்சயம் உணர்வார்கள் என்பது, என் உறுதியான எண்ணம்.



# கடலின் தாளம்

அலைகளின் தாகம்
அமலமாய் கரையில்...

ஆரவாரத்தின் ஓலங்கள்
ஆசுவாசமாய் அடங்கிட...

சுருளும் வெண்ணுரைகள்
சுழுக்கம் நீங்கிட..

புதிய ஓசைகள்
பூமிக்கும் வானுக்குமாய்....

**கவிமணி இரஜகை நிலவன்**
மும்பை

# தென்றலின் மார்கழிக் கிறுக்கல்கள்



1.

பள்ளிக்குச் சென்றிடுவாய் பண்பினைநீ கற்றிடுவாய்
கள்ளமில்லாப் பெண்ணாய் கவனமாக - துள்ளலுடன்
என்றும் நடையிடுவாய் எங்கும் கருத்தாகத்
தென்றலென வீசிடுவாய்ச்.. செல்



2.

சிட்டுக் குருவி சிறகை விரித்தது
பட்டுடல் காற்றில் சிலிர்த்தது - மொட்டு
விரிய முகம்மலரும்... விண்ணில்  பறக்கும்..
கரிய விழிகளைக் காண்.



3.

பூக்களது வாசனைப் பூவிதழில் கண்டதும்
ஈக்களது நாட்டம் இனியதாகும் - பாக்களது
ஈர்ப்பில் பனித்துளிகள் ஈரத்தினில் கோலமிடும்
கற்பனை எண்ணக் கவின்



4.

கோல மயிலினது கொள்ளை யழகினில்
ஞாலம் மயங்கியதோ நன்றென- காலங்கள்
செல்ல முருகா செவியினிக்கப் பாடுகிறேன்
நல்ல மொழியில் நவின்று

5.

வரைந்து முடித்த கிறுக்கல் மனத்தில்
கரையத் தொடங்க கவனம்-விரைந்திடுவாய்
உள்ளம் முடிக்க உணர்த்திடும் யாதனையும்
கள்ளமின்றி வாழ கனிந்து





தென்றல் கவி (தமிழ்ச்சிட்டு)




## மின்மினிப் பூச்சிகள் மின்னலடிக்க பொன்னொளி பூத்தது மனவானில்

இலக்கிய முதுசம் சிரேஷ்ட எழுத்தாளர், கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ் எழுத்துலகில் மிகுந்த முக்கியத்துவத்துடன் நோக்கப்படுபவர். இவரது கலை இலக்கியச் செயற்பாடுகள் காத்திரமானவை. எல்லா நேரமும் உற்சாகம் குன்றாமல் சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை கொண்ட இவர், பல்துறை எழுத்துக்களால் பாராட்டும் பல்வேறு விருதுகளும் பெற்றவர். இவரது இலக்கியப் பணியின் (1974 - 2024) ஐம்பதாவது வருட பூர்த்தியினையொட்டி பொன் விழா நிகழ்வு 2024.08.18 இல் கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் கொண்டாடப்பட்டது. இது ஒரு சரித்திர நிகழ்வாக அமைந்தது. எழுத்துத் துறையில் இன்னமும் கவனக் குவிப்புடன் செயற்பட்டு வரும் இவருடனான நேர்காணலைத் தொகுத்து வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இலக்கியத் துறையில் பொன் விழாக் கண்ட இலக்கிய முதுசம் பீ.ரீ. அஸீஸ்
அவர்களுடனான விசேட நேர்காணல்

நேர்கண்டவர் :-

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

**உங்களைப் பற்றிய சுருக்கமான அறிமுகத்தை எமது வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்?**

பிச்சைத் தம்பி அஸீஸ் எனும் இயற் பெயரைக் கொண்ட நான், 1974 இல் கிண்ணியாச் செல்வன் எனும் புனைப் பெயரில் எழுதத் தொடங்கி 2024 இல் பொன் விழா கொண்டாடும் பேற்றினை அடைந்தேன். இப்பேறா னது எனது வாழ்க்கைப் பாதையில் பொன் எழுத்துக்களால் அடையாளமிடப்பட்ட நிகழ்வாகும். ஆர்ப்பாட்டமில்லாத அமைதி யான போக்கின் அறுவடையாக இன்று நான் காணுகின்ற இலக்கிய இலக்கானது என்றைக்குமே உதாரணமானதொன்றாக நின்று நிலைத்திருக்கும் என்பது உறுதியான தும் திடமானதுமான நம்பிக்கையாகும்.

பல்வேறு நூல் வெளியீடுகள், வெற்றி கள் முகங்கொடுத்த சவால்கள், சுறுசுறுப் பும் உற்சாகமும் நிறைந்த செயற்பாடு, தோல்வியைக் கண்டு துவளாத மனப் பக்குவம் என்பன என்னை ஓர் உயர் நிலைக்கு கொண்டு வந்ததெனலாம். இதனையே எனது அறிமுகமாக எடுத்துக் கொள்ளுங்களேன்.

**உங்களது இலக்கியத் தடத்திற்கு வழி வகுத்தவர்களைப் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

எனது இலக்கியப் பயணத்துக்கு வழி வகுத்தவர்களாக பலபேரை அடையாளப் படுத்த முடியும். இவர்களது ஆதரவும், ஒத்துழைப்பும் நிறையவே கிடைக்கப் பெற்றதால்தான் பொன்னொளி மலர் வெளியீடும், பொன் விழாவும் காத்திர மாகக் கொண்டாடப்பட்டது. அத்தகைய வர்களைக் கட்டாயம் இங்கு குறிப்பிட் டாக வேண்டும். எனது தாயார் ஹாஜரா உம்மா, தகப்பனார்பிச்சைத் தம்பி, பாட்டனார்அலியான் பணிக்கர் மற்றும் எனது வாழ்க்கைத் துணைவி மர்ஹூமா சித்தி கம்சுனா மேலும் எனது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் போன்றோரையும் குறிப்பிட முடியும். இவற்றோடு எனது எழுத்துலகப் பயணிப்பில் 2011 அம் ஆண்டு முதல் இற்றை வரை கைகோர்த்து நிற்கும் எழுத்தாளர் வெலிகம ரிம்ஸா முஹம்மத், தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா மற்றும் மர்ஹூமா எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா, அமரர் நந்தினி சேவியர் முதலானவர்கள் மிகவும் முக்கியமானவர்கள்.

மேலும் எனது ஆரம்ப கால எழுத்துலக வழிகாட்டிகளாக கவிஞர் அண்ணல், ஈழமேகம் பக்கீர் தம்பி, திமிலைத்துமிலன், திமிலைக் கண்ணன் போன்றோரும் டாக்டர்ப்ஹில்மி மஹ்ரூப் போன்றோரும் குறிப்பிடக்கூடியவர்கள். அத்துடன் முன்னோடிகள் கலை இலக்கிய வட்ட அங்கத்தவர்கள், அதன் செயலாளர் ஏ.எம். கஸ்புள்ளா மற்றும் நண்பர்கள், நல்லெண்ணம் கொண்டவர்கள் எனப் பலர் இருக்கின்றனர். மேலும் மிக முக்கியமாக இலங்கையின் தேசிய பத்திரிகைகள், பத்திரிகையாசிரியர்கள், துணை யாசிரியர்கள், வலைத்தளங்கள், வானொலி, தொலைக்காட்சி அலைவரிசை கள் என்பனவும் நன்றிகளோடு நினைவு கூறத்தக்கது.

**இலக்கிய வாழ்வில் கடந்து வந்த உங்களது பொன் விழா நிகழ்வு பற்றிக் குறிப்பிடுங்கள்?**



கடந்த2024.08.18ஆம்திகதிநடைபெற்ற எனது பொன் விழா நிகழ்வு பற்றிய சில முக்கிய விடயங்களை ஞாபகப்படுத்துவது பொருத்தமானதாக இருக்கும். இந்நிகழ்வு பல முக்கிய செய்திகளை எனது வாழ்வில் படிப்பினையாக்கி நின்றது.

01. இலக்கிய வாழ்வில் 50 வருடங்கள்

02. இலக்கிய போட்டி நிகழ்களில் 50 முதலிடங்கள்

03. ஐம்பது நூல்களின் திறன் நோக்கு (கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்



திணைக்களத்தினால் அச்சிட்டு தரப்பட்டமை)

04. பொன்னொளி மலரின் 50 பிரமுகரின் கருத்துரைகள்

05. எனது திருமண வாழ்வும், 50 வருடங்களை மெல்லக் கடந்த நிலை

06. எனது மூத்த மகனின் 50 ஆம் ஆண்டு பிறந்தநாள்

07. பொன் விழா நிகழ்வு காலத்தில் நீண்ட கால இடைவெளியின் பின் இளைய மகனுக்கு ஓர் மகள் பிறப்பு

இவ்வாறான பல முக்கிய நிகழ்வுகள் பொன் விழாக் காலத்தில் நடந்தேறி இருப்பது ஆச்சரியமாக நோக்கத்தக்கதாகும். இதனால் பொன் விழா நிகழ்வும், "பொன்னொளி" பொன் விழா மலர் வெளியீடும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது.

**உங்களுடைய பொன் விழா நிகழ்வில் வெளியீடு செய்யப்பட்ட "பொன்னொளி" மலர் பற்றிக் குறிப்பிடலாமே?**

எனது பொன் விழா நிகழ்வின் ஞாபகார்த்தமாக "பொன்னொளி" மலர் ஒன்றும் வெளியீடு செய்யப்பட்டது. இம்மலரில் 50 முக்கியத்தர்களின் கருத்துரைகள் உள்ளடக்கம் பெற்றிருப்பது விஷேட சிறப்பம்சமாகும். மேலும் எழுத்தாளர்களின் கருத்துரைகள், ஆய்வு கள், கவிதைகள், கட்டுரைகள், வாழ்த் துரைகள், பார்வைச் சுருக்கம், அறிமுகம், நினைவுகளும் நிகழ்வுகளும் போன்ற பல தகவல்களும் மலரில் இடம்பெற்றுள்ளன. அத்தோடு இந்த நிகழ்வில் 50 இலக்கியவாதிகளுக்கு பொன்னொளி விருதும் வழங்கி கௌரவிப்புச் செய்யப்பட்டது. விஷேடமாக முன்னோடிகள் கலை இலக்கிய வட்டத்தினரால் எனது இலக்கியப் பணிக்கான கௌரவமாக பொன்னொளி சாதனையாளர் விருது உரித்தாக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**உணர்வூட்டும் கிராமியச் சுவைகள் நிறைந்த உங்களது கட்டுரைகள் பற்றி விஷேடமாக என்ன குறிப்பிட விரும்புகிறீர்கள்?**

எழுத்துரு கிராமிய சுவை நிறைந்த கவிகள் எவர் மனதையும் இலகுவில் கவர்ந்திழுக்கும் தன்மையை தன்னகத்தே கொண்டுள்ளது. அவை விரைவாக சமூகத்தை சென்றடைந்து கிராமிய படைப்புகளின்பால் தன் கவனத்தை



திருப்புகின்றன. உதராணமாக அவ்வாறான கட்டுரைப் புத்தகத்தில் உள்ள சில கவிகள இதோ:-

- நாத்துக்கு வெச்ச வெத
  நடுவால வெடிச்சிருக்கு
  சோத்துக்கு ஆகுமெண்டால்
  செறிமானம் ஆகாதாம்

- செம்பருத்தி பூ மேல
  சித்தெறும்பு ஓடினது
  குத்தமெண்டு காட்டினா
  மெத்தவுந்தான்
  கவல வரும்
  மௌத்து வர அந்த
  நெனவு வரும்

- மதமதத்த
  தோட்டப்புள்ள
  மாடுவந்து மேயுது
  மச்சான் வர நாளானால்
  கட்டாந் தரையும்
  மிஞ்சுமோ?

**நீங்கள் இதுவரை எழுதிய இலக்கியப் படைப்புகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

இலக்கியத்தைப் பொறுத்தவரை அதன் பல்வேறு பிரிவுகளிலும் தடம் பதித்து அதில் வெற்றியும் கண்டவன் என்ற அடிப்படையில் கவிதை, கட்டுரை, சிறுவர் படைப்புகள், கிராமிய கவிகள், ஆய்வுக் கட்டுரைகள், நூல் திறன் நோக்கு, சிறுகதை போன்ற பல்வேறு அம்சங்களில் 20க்கும் மேற்பட்ட எனது எழுத்துலகப் படைப்புகள் வெளிவந்துள்ளது.

**சிறுவர் இலக்கியத்துக்கு கனிசமான பங்களிப்பை செய்திருக்கும் நீங்கள் இத் துறையில் புதிதாக ஈடுபடுப வர்களுக்கு என்ன சொல்ல விரும்பு கிறீர்கள்?**

சிறுவர் இலக்கியத்துக்கு கனிசமான பங்களிப்பை செய்துள்ள எனக்கு அத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு சொல்லக் கூடியது எதுவுமில்லை. ஏனெனில்

இன்றைய காலகட்டத்தில் யாரும் யாருக்கும் அறிவுரை, ஆலோசனை வழங்கும் தேவைப்பாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு சொன்னாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அவர்களுக்கு இருக்க வேண்டும். எழுதுபவர்கள் எழுதட்டும். இலக்கிய வரையறைக்குள் சிறந்த நூலாக எழுதட்டும். வெற்றியும் சிறப்பும் அவர்களைத் தேடி வரும்.

**வளர்ந்தோர் இலக்கியத்தைவிட சிறுவர் இலக்கியம் படைப்பது சிரம மானது என்கிறார்களே இதுபற்றி?**

வளர்ந்தோர் இலக்கியம், சிறுவர் இலக்கியம் இரண்டும் எழுதுபவரைப் பொறுத்துள்ளது. சிலருக்கு இரண்டும் ஓர் இலகு கலையாகும். விடயப் பரப்புகளைப் புரிந்துகொள்வதிலேயே அதன் வெற்றி தோல்வி தங்கியுள்ளது.

**கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்தி சபையின் அனுசரணையோடு வெளிவந்த உங்களது நூல்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

கல்வி அமைச்சின் நூலுக அபிவிருத்தி சபையின் அனுசரணையோடு எனது நூல்கள் சில வெளிவந்துள்ளன. நூற்பிரதி களைப் பரிசீலனை செய்து, அச்சீட்டுக்கு தகுதியாயின் நூலுருவாக்கம் செய்து



தருவார்கள். இவ்வாறான நூல்களில் சின்னப் பாப்பா, தாலாட்டுப் பாடல்கள், செவ்வானச் சித்திரம், மஞ்சள் குருவி போன்றனவும் நூலகங்களுக்குப் பொருத்தமான நூல் என்ற தகுதிச் சான்றிதழினைப் பெற்றுள்ளது. கிராமிய சுகந்தம், முதுமையில் விளைந்த புதுமைகள், நினைவொன்றே போதும் போன்ற இன்னும் சில நூல்களும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**நீங்கள் எழுதிய நாட்டார் கிராமிய படைப்புகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

நான் எழுதிய கிராமிய இலக்கிய நூல்களாக "நாட்டார் / கிராமியப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், சுட்டபழமே சுவையமுதே, மனசெல்லாம் மகிழ்கிறது, ஆரவுட்டுத் தேடுவதோ, கிராமிய சுகந்தம் (எழுத்துரு கிராமிய கவிகள் பற்றியது)" போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதில் கிராமிய சுகந்தம் மிக முக்கியமான நூலாகும். எழுத்துரு கவிகளின் ஆய்வாக இது அமைந்துள்ளது.

**பழந்தமிழ் இலக்கியங்களில் உங்களது இரசனை எந்தளவில் உள்ளது?**

பழந்தமிழ் இலக்கியத்தில் உள்ள ஈடு பாடு பரந்துபட்டது. பழங்கால இலக்கியங் கள் போதிக்கின்ற விடயதானங்கள் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்ததில் அவைகள் மீது ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. அது அத்துறையில் உள்ள ஈடுபாட்டினை மேலும் அதிகரிக்க வாய்ப்பாக அமைந்தது.

மேலும் ஓதலம் தையலார் எழுதிய ஐந்திணை நூல்களில் ஒன்றான "பாலைநிலம்" நூல் ஜே.எஸ்.எஸ்.கே. மௌலானா அவர்களால் உரைநடையாக எழுதப்பட்டிருந்தது. மேலும் அறிஞர் சித்திலெப்பை அவர்கள் அசன்பே



சரித்திரம் பற்றி ஆ.வா.மு. முஹ்சீன் (அசன்பேயுடைய கதை ஓர் மீள்வாசிப்பு) ஆகிய நூல்கள் இரண்டுக்கும் நான் எழுதிய திறன்நோக்கு தேசிய பத்திரிகைகள், வலைத்தளங்கள், வானொலி என்பவற்றில் களம்கண்டு பெயர் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உங்களது படைப்புகளால் இலக்கிய உலகில் ஏற்பட்ட சிறப்பான மாற்றங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

எனது படைப்புகள் வெற்றி அல்லது பிரசித்தம் பெறும் நூல்களாக அமையும் போது பலரும் தங்களது கவனத்தை அதன் பக்கமாக திருப்பியதை அவதானிக்க முடிந்தது. மேலும் சமூக பண்பாட்டியல்புகளில் மனித நேயத்தில் உயர்ந்த கொள்கைகளில் உன்னதமான நூல்களாக இவை பெயர் பெறத் தொடங்கின. அதனால் எழுத்துலகில் நிலைத்திருக்கும் தன்மையை அவை பெற்று விளங்கத் தொடங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நீங்கள் இதுவரை எழுதிய நூல் மதிப்பீடுகள் பற்றிக் குறிப்பிடலாமே?**

நூல் மதிப்பீடு என்ற வகையில் 2020 ஆம் ஆண்டு முதல் நூல் திறன் நோக்கினை எழுதத் தொடங்கியதில் இற்றைவரை 98 திறன் நோக்குகள் நிறைவடைந்துள்ளன. நாட்டில் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இலக்கியப் படைப்பாளிகளின் நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, பத்திரிகைகள், வலைத்தளங்கள், வானொலி என்பவற்றில் களப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 50 திறன் நோக்குகளை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் “முதுமையில் விளைந்த புதுமைகள்” என்ற பெயரில் 2023 இல் நூலுருவாக்கம் செய்து தந்துள்ளமையானது சந்தோச மளிக்கக்கூடியதொரு செய்தியாகும்.



**உங்களது வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

எனது இலக்கிய வாழ்வில் மறக்க முடியாத அனுபவங்களும் சம்பவங்களும் ஏராளம். ஏன்? உங்களைப் போன்ற நல்ல இலக்கிய நண்பர்கள் கிடைக்கப் பெற்றிருப்பதும் மறக்க முடியாத நிகழ்வொன்றாகக் குறிப்பிடலாம்தானே!

**இதுவரை நீங்கள் சிறுகதை தொகுதி யொன்றை ஏன் வெளியிடவில்லை?**

ஒரு படைப்பாளியின் வாழ்வில்









சிறுகதை வெளியீடென்பது முக்கியமான தொரு நிகழ்வாகும். என்னிடம் தகுதியான சிறுகதைகள் பல கைவசம் இருக்கிறது. கூடிய விரைவில் அது நூலாக்கம் பெறும் என்பது எனது நம்பிக்கை. அவை நிறைவேறும்போது நீண்ட கால இலக்கியக் கனவொன்று முழுமைபெற்ற திருப்தி கிட்டும். இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் எதிர்பார்க்கலாம்.

**முச்சங்க இலக்கிய வகைகள் தற்போது வாசிக்கப்படுகிறதா?**

ஆம், அது தொடர்பான ஆர்வம் உள்ளவர்களால் வாசிக்கப்படுகிறது. தேவையானவர்கள் தேடித் தேடி வாசிப்பதை அவதானிக்கலாம். முச்சங்க இலக்கியங்கள் இன்னும் தலைநிமிர்ந்து நிற்கிறதென்றால் அதன் உயர்வும் தரமும் உச்ச நிலையில் உள்ளதால்தானே!

**சிறுவயது முதல் உங்களுக்கு இருந்த வாசிப்புப் பழக்கமே உங்களை ஒரு எழுத்தாளராக மாற்றியது என்று சொல்ல லாமா?**

ஆம், நிச்சயமாக. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்பது உண்மையானது. என்னிடத்தில் வாசிப்பு மட்டும் இல்லையென்றால் ஊர்உலகம் அறியாத ஒரு சாதாரண குடிமகனாகவே இருந்திருப்பேன். வாசிப்பின் மூலமே எனது வாழ்வின் வெற்றியும் உயர்வும் சாத்தியமானது.

**அண்மைக் காலங்களில் வழங்கப்படும் விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

அண்மைக் காலங்களில் வழங்கப் படும் கலை இலக்கிய விருதுகள் காத்திரமான வையாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. படைப்பாளிகள் வாழும்போது வாழ்த்தப்படக்கூடியவர்கள் என்பதை பல விருதுகள் உறுதி செய்கின்றன. ஆனால் விருதுகள் தகுதியானவர்களுக்குக் கிடைக்கப் பெறுவதில் கவனம் செலுத்தப் படுவது முக்கியமானதாகும்.

**நிறைவாக என்ன சொல்ல விரும்பு கிறீர்கள்?**

கலையும் இலக்கியமும் காதலைப் போன்று இனிமையானது, சுகமானது, மனதுக்கு இதமளிப்பது, மக்களை மதிக்கத் துண்டுவது. வாழ்வியலை நேர்கோணத்தில் செலுத்தி அன்பையும் மதிப்பையும் உலகுக்களிப்பது. சிறந்த பண்பாட்டியல்புகள் தோற்றம் பெறவும் வரலாற்றுப் பாரம்பரியங்களை அறிந்து கொள்ளவும் இவை துணை நிற்கின்றன. சிறந்த மனித நேயமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் இவற்றின் பங்கு அளப்பரியது. கலை இலக்கியத்தை நேசிப்போம்! மனித வாழ்வியலைப் போசிப்போம்!

**நேர்கண்டவர்:-**
**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**





# திங்கள்

பாவகை: நிலை மண்டில ஆசிரியப்பா

கங்குலில்  எழுந்து காலையில் மறைந்து
பொங்கிடும் அழகிலே பொலிவாய் தோய்ந்து
மங்கா பேரொளி மருவிடும் உலகில்
திங்கள் தோன்றிடும் திசை எங்குமே

நறுமுகை  மலர நாற்றிசை ஒளிர்ந்திடும்
குறும்பு செய்திடும் குழந்தையும் மகிழ்ந்திடும்
கவிதையில் மிளிர்ந்து காரிருள் களைந்திடும்
தவிக்கும் மக்களின் தளர்வைப் போக்குமே

முகிலிடை முழுமதி முகத்தை காட்டிடும்
அகிலம் போற்றிட அறிவைக் கூட்டிடும்
துயிலையும் கொடுத்து துன்பம் நீக்கிடும்
உயிர்கள் வாழ்ந்திட உணர்வை ஊட்டுமே

பாவலர் வளர்மதி முருகன்
புதுச்சேரி



# நுழைவு

மேகப் பொதிகளென ஓடி
நகரும் காலத்தின் பக்கங்களில்
பிறருடனான உரையாடலின்
விரிதடத்தில் நிழல் உருவாய்
ஒரு கண நேரமேனும்
உள் நுழைந்து
இருப்பைப் பதித்து
வெளியேறுகிறாள்
திடீர் மரணம் தழுவிய தோழி!!!

மலர்மகள்

# ஊர்கோலம் போகும் கார்கால நினைவுகள்

சிந்தையும் மயங்குதே
சிறகடித்துப் பறக்குதே
சிந்தனைகளின் பரிமாற்றத்தில்
வண்ணங்களைக் காணுதே
மழைக்கால ஞாபகங்கள்
மனதில் தோன்றுதே
ஓடைத் தண்ணீரில்
ஓயாத இரைச்சலே
கம்மாயும் நிறைந்து
கரை புரண்டோடும்
வயலெங்கும் சேறாகிட
கழனியில் சகதியே
மண்ணும் பதமாகிட
மனதில் மகிழ்வே
உழவும் சீராகிட
உழவனிடம் உற்சாகமே
ஊர்கோலம் போகும்
கார்கால நினைவுகள்
புவியெங்கும் பசுமை
பூத்துக் குலுங்கும்
விழிகளுக்கு விருந்தாகும்
வியப்பில் ஆழ்த்தும்
தரணியெங்கும் செழிப்பு
தாங்கொணாக் களிப்பே

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்



# வாடி..... வா.....

.

உந்தன் வெட்கம் அந்தியடி – உன்
உதட்டின் வார்த்தைப் பந்தியடி
வந்தால் காதல் தந்தியடி – முன்
வளரும் உனக்குத் தொந்தியடி

வளரும் போதென் மீசையடி – உடன்
வளர்க்கும் உன்மேல் ஆசையடி
இளமை பேசும் ஓசையடி – நீ
இணைந்தால் அன்றே பூசையடி

நித்தம் நித்தம் ஏக்கமடி – உன்
நினைவால் நீங்கும் தூக்கமடி
முத்தப் பார்வை ஊக்கமடி – எனில்
முழுதும் உந்தன் தாக்கமடி

அன்பே நீயென் எல்லையடி – நீ
அல்லா துயிரே இல்லையடி
பின்னால் வைப்பேன் முல்லையடி – உடன்
பிறக்கும் உன்போல் பிள்ளையடி

.

ஏடி வரதராசன்

# சுக்கடை

முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி
புதுச்சேரி

பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு வரும் வழியில் நீண்ட கடைத்தெரு. பெரியபெரிய கட்டிடங்கள் பெரியபெரிய கடைகள். அதற்குக் கீழே இருபக்கமான சாலையில் சின்ன சின்னக் குறுங்கடைகள்.

செருப்புத் தைக்கும் கடை, வாழைப் பழக்கடை, கீரைக்கடை, பழக்கடை, தேங்காய்கடை எனப் பலகடைகள். இவையெலாம் மெயின்ரோட்டிலேயே இருக்கும். சிலநேரங்களில் முனிசிபாலிடி ஆட்கள் வந்து கடை எடுக்கச் சொல்லி மிரட்டிச் செல்வர். ஒருசில நாட்கள் காணாமல் போகும். அடுத்த சிலநாட்களில் காளான் போல பரந்து கிடக்கும்.

நிறைய பேர் வந்து தேநீர் பருகும் டீக்கடை அருகில்தான் அந்தச் சின்னக் கடை இருந்தது. ஒரு கூடை, அதன்மேல் தட்டு அவ்வளவுதான் கடைக்கான பொருட்கள். கூடவே ஒரு ஓட்டைக் குடை வெயிலை மறைக்க. அக்கடையில் ஒரு மனக்கட்டையில் ஓர் அம்மா உட்கார்ந் திருப்பார். தினம் அவ்வழி நான் கடந்து போகும் போது என்னையே உற்றுப் பார்ப்பதாக நினைத்துக் கொள்வேன்.

என்னை எப்போதும் உற்றுப் பார்க் கும் அந்த அம்மா, தன் கூடையில் கொய்யாக்கா, நெல்லிக்காய், பப்பாளி, எலந்த பழம், பனங்கிழங்கு, மல்லாட்டை, வள்ளிக்கிழங்கு, நாவல்பழம் என அடுக்கி வைத்திருப்பார். இவர் ஏன் என்னை முறைத்துப் பார்க்கிறார் எனக் கேட்கத் தோன்றும். ஒருவேளை நான் அவரைத் திரும்பிப் பார்ப்பதால் அப்படித் தோணு கிறதோ என எண்ணிப் பார்ப்ப துண்டு.

மழையாக இருந்தாலும் வெயிலாக இருந்தாலும் அந்த ஓட்டைக் குடையைப் பிடித்தபடி, முட்டிக்கால் போட்டு அந்த அம்மா அங்கேதான் உட்கார்ந்திருப்பார். வருவோர் போவோர் பத்துரூபாய், இருபது ரூபாய்க்கும்கூட பழங்கள் வாங்கிச் செல்வது முண்டு. சிலநேரங்களில் கிலோ போட்டெல்லாம் கொடுக்க மாட்டார். காசுக்குத் தகுந்த மாதிரி கையளவுதான். குத்துமதிப்பாக கொடுப்பது போல நமக்குத் தோன்றும். ஆனா அப்படியில்லை. அப்படிக் கொடுப்பது சரியான எடையும் பொருளுக்கேற்ற பணமுமாக இருக்கும். இதையெல்லாம் கவனிக்கிறேன் என்பதும் அவங்களுக்குத் தெரியும்.

அவர் கடையில் வாங்க எனக்கொன்று மில்லை. நான் எப்பொழுதும் ப்ரஷ்ஷாக கிடைக்கும் ஏசி நிறைந்த வால்மார்ட் காய்கறி கடையில் வாங்குவதை வழக்க மாகக் கொண்டிருந்தேன். இங்கு வாங்கு வதில் என் அந்தஸ்து குறைந்து விடக்கூடும்

என்பதாலும் இருக்கலாம். மேலும் அங்கே ஏசியில் புத்தம்புதிதான பழங்கள் காய்கள் பார்ப்பதற்குப் புதுப் பெண் போல் கவர்ச்சியாக இருக்கும். இங்கே கூடையில் அடுக்கிய பழங்கள் பார்ப்பதற்கு களை பறித்து அலுத்த பெண்ணாகத் தெரியும். எங்கயும் கவர்ச்சிக்குத்தானே மவுசு அதிகம்.

சமீபத்தில் தான் இந்தியாவில் அதிக மான சுகர் பேஷன்ட் இருக்கிறார்கள் என்று செய்தியை அறிந்திருந்தேன். எனக்குச் சிலநாட்கள் அதிகமாக வியர்த்து, தண்ணீர்த்தாகம் அடிக்கடி எடுத்துக் கொண்டே இருந்ததாலும், மூத்திரம் அடிக்கடி வர மாதிரி இருந் தாலும் கூட பணியாற்றுபவர் பயமுறித்தியதாலும் இரத்த டெஸ்ட் பண்ண வேண்டிய தாயிற்று. டாக்டரிடம் சென்று காண்பித் தால், சுகர் முந்நூறைத் தாண்டி இருந்த்தைக் கூறி ரொம்ப பயமுறுத்தி விட்டு விட்டார்.

அந்தக் கடைக்கு எதிர்த்தாப்ல ஒரு மெடிக்கல் ஷாப் இருக்கும். எந்நேரமும் அந்த ஷாப்பில் மருந்து மாத்திரைகள் வாங்குபவர் அக் கடையில் குவிந்த வண்ணம் இருப்பர். அங்கேதான் நானும் சுகர்கான மாத்திரையை மாதம் முந்நூற்று ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் வாங்கி வைத்துக் கொண்டு, காலை மாலை வாயில் போட்டு மடக்மடக்குன்னுத் தண்ணீர் ஊற்றி விழுங்குவதும், மாதம் ஒருமுறை சுகர் டெஸ்ட எடுப்பதும் பாடாகிப் போனது.

மாதமாதம் எடுக்கும் சுகர்டைஸ்டில் சுகர் என் உடம்பில் ஏறுவதும் இறங்கு வதுமாக இருந்தது. எப்படி மலையேறி இறங்குகின்றோமோ அப்படித்தான் அது வும் இருந்தது. இதற்கு தீர்வில்லையா வழி இல்லையா என்று அவ்வப்போது பலபேரின் அறிவுரைகளைக் கேட்டாகி விட்டது. அதற்குப் பிறகு காணொ ளி க ளில் யார்யார் என்னென்ன சொல்கி றார்களோ அதையெல்லாம் செய்து பார்ப்பேன். தொடர்ந்து செய்வதில்லை என்பதுதான் என் குறை. கீரைகள் பழங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். புரோட்டின் நிறைய சாப்பிட வேண்டும். மாவுச்சத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்வதையெலாம் கேட்டு அதன்படி சிலவேளைகள் நடந்து பெருமைப் பட்டுக் கொள்ளும் மனசு. சிலவேளை களில் இனம் புரியாத பயமும் கவலையும் தொற்றிக்கொள்ளும். இந்தக் சுகரிலிருந்து விடுபட என்னதான் வழி? எங்கும் மனசுக்கு காணொளிதான் ஆறுதலைத் தந்தது. ஆனால் 'ஒரே நாளில் சுகரைக் குறைக்கலாம் வாங்க' என்பதான காணொளி களைக் கண்டு சிரிப்புதான் வரும்.

யார்யார் என்னென்ன சொல்கிறார் களோ, அந்தந்த நேரத்தில் சொல்லப் படுகின்ற அத்தனையுமே செய்து பார்ப்ப தையும் பழக்கமாக வைத்திருந்தேன். ஆனாலும் இந்த நாக்கு இருக்கே நாக்கு சிலவேளைகளில் அலும்பு பண்ணி விடுவது முண்டு.



பொரித்தவை, பஜ்ஜி, சொஜ்ஜி, சிக்கன் ப்ரையென நாக்குத் துழாவித் தேடி உண்டுவிடுகின்றபோது டெஸ்ட் பண்ணா சுகர் மலையேறியிருக்கும். அப்புறம் நாக்கை அடக்குன்னு அடக்க வேண்டியது. இப்படியே சில காலங்கள் ஓடியதே தவிர சுகர் என்னை விட்டு ஓடவேயில்லை.

அன்றைக்கும் அப்படித்தான் மருந்து வாங்கப் போயிருந்தேன். கூட்டம் அலைமோதியது. அந்தக்கூட்டத்தில் ஒரு நண்பர் என்னருகில் வந்து சுகர் எவ்வளவு என விசாரித்தார். ஒரு முந்நூறைத் தொட்டிருக்கு. அவ்வப்போது டெஸ்ட் பண்ணால் கூடக்குறைய ஆகுமென்று சிலாகித்தேன்.

'பரவால்லயே, எனக்கு ஐநூறு அறு நூறைத் தாண்டிப் போவுது, இறங்கறா மாதிரி தெரியலை' ஆதங்கப்பட்டாரா பொறாமைப்பட்டாரா எனத் தெரிய வில்லை. என்னைவிட அவர் கூடுதலாக இருக்கிறார் எனச் சந்தோசம் உள்ளுக்குள் இருப்பதையறிந்தேன். ஆனால் அவர் எனக்குக் காது வலிக்கிற அளவு அட்வைஸ் பண்ணார்.

அதைச் சாப்பிடக்கூடாது, இதைச் சாப்பிடனும்னு ஏகப்பட்ட அட்வைஸ். மாத்திரை வாங்கிக் கொண்டு அவரிட மிருந்து விடைபெற போதும் போதும் என்றாகிவிட்டது. எதிரில் அந்தம்மா என்னையே முறைத்துக் கொண்டிருந்தார்.

மெடிக்கல்ஷாப்பில் நிற்கும் போதெ லாம்என்னையறியாமல்அந்தஅம்மாவைப் பார்ப்பதும் அவங்க என்னைப் பார்ப்பது மாக சில மாதங்கள் கடந்தன. இன்றும் அந்த அம்மா என்னையே உற்றுப் பார்த்தார். வண்டியை எடுக்க ஸ்டார்ட் பண்றப்ப, கைகாட்டி அழைத்தார்.

வண்டியை நிறுத்திவிட்டு, அவர் அருகில் போனேன்.

'இந்தாம்மா, இதோ இருக்கற நெல்லி, நாவல், கொய்யா எல்லாம் வாங்கிச் சாப்டு, உனக்குச் சுகர் சரியாப் போயிடும்' என்றார். எனக்கு ஆச்சர்யம் இவருக்கு எப்படித் தெரியும்னு?. தன் பொருளை விக்கறதுக்காக இந்த அம்மா பீலா வுடுதான்னு கணநேரம் யோசிச்சேன்.

'யம்மா, நீ அடிக்கடி வந்து இந்த மெடிக்கல் ஷாப்புல சுகர் மாத்திரை வாங்கிப் போறத பார்க்கறேன். கொஞ்ச நாள அதை நிறுத்திட்டு இதச் சாப்பிட்டுப் பாரு' என்றார்.

'இதென்ன வெளயாட்டுக்காரியமா? இவங்க என்ன டாக்டரா?' கொஞ்ச கோபம் எட்டிப் பார்க்க ,அங்க அந்த நண்பரோட தொணதொணத்த அட்வைசி லிருந்து இங்க வந்தா இந்தம்மா வேற இப்படிச் சொல்றாங்கன்னு முறைச்சேன். பொண்ணு மாதிரிம்மா, நான் உன் அம்மா காலத்துலேருந்து இங்குக் கடை வச்சிருக்கேன்' என்றார்.

'எங்க அம்மாவை உங்களுக்குத் தெரியுமா?' ஆச்சர்யத்தோட கேட்டேன்.

'ம்.. உங்க அம்மா, அப்பா எல்லாத்தயும் தெரியும். உங்க அம்மா சாவுக்கு வந்திருந் தேனே' என்ற போது கண்கள் பனித்தது. எனக்கும் அந்தத் துயரம் கண்ணோரம் எட்டிப் பார்த்தது.

பை நிறைய எல்லாப் பழங்களையும் காய்களையும் எடுத்துக் கொடுத்தார் ஓர் உரிமையோடு. தவிர்க்க முடியாமல் வாங்கிப் போட்டுக் கொண்டு, 'எவ்ளோ?' கேட்டதற்கு, 'நூத்தம்பது கொடு' என்றார். பெரிய ஆச்சர்யம். இதே அந்த வால்மார்ட் காய்கறிகடையில் வாங்கி

யிருந்தால் நிச்சயம் ஐநூறுக்குக் குறையாம லிருந்திருக்கும். சரி வாங்கியாச்சு, தின்று முடிப்போம்னு சுகர் மாத்திரையுடனும் பழங்களுடனும் வீட்டுக்குச் சென்றேன்.

ஒருநாள் யூடிபில் புகழ்பெற்ற மருத்து வர் சுகருக்குச் காய்கறி, பழங்கள் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தது. ஆச்சர்யம் அன்று நான் வாங்கி வந்த காய், பழங்களைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருந்தார். சரி நம்மையே நாம சோதிச்சிப் பார்த்துடலாம்னும் வருவது வரட்டும்னும் ஒரு மாதம், இருமாதம், மூன்று மாதம் அவங்களோட காய், பழங்களை வாங்கிச் சாப்பிட்டு வந்தேன்.

வழக்கம்போல் சுகர் டெஸ்ட் பண்ணா என்னாலயே நம்ப முடியல. சுகர் மிக வேகமாக மலையிறங்கியிருந்தது. விடாப் பிடியாக அடுத்தமாதமும் உண்டேன். அதற்கடுத்த மாதமும் உண்டேன். சுகர் நார்மலுக்கு வந்திருந்தது கண்டு அகமகிழ்ந்தேன். மாத்திரையை நிறுத்தி இதையே உணவாகக் கொண்டால் என்னவென்று தோன்ற, சில மாதங்கள் அப்படியே செய்து சுகர் டெஸ்ட் எடுத்துப் பார்த்தேன். மலை இறங்கியது இறங்கியது தான்.

இப்பவெல்லாம் அந்த அம்மா கடைலே தான் காய் பழம்னு வாங்கிட்டுப் போறது.

இன்னிக்கும் அவங்ககிட்ட வாங்கிட்டி ருக்கப்ப யாரோ என்னை உற்றுப் பாக்கறாப்ல தெரிஞ்சது.

பார்த்தா, தோ... அவருதான்...

அந்த மெடிக்கல்காருதான்... மாத்திர மருந்து வாங்க வரலியான்னு கேக்கறார் போல.

# ஹைக்கூ....

1. புதைத்த விதை
முளைக்கத் தொடங்கும்
புதுவித நோய்க்கிருமி

2. எழுதிய கவிதை
நூலுருவாக்கப்பட்டது
வாழ்க்கை வரலாறு

3. வெட்டிய கிளை
அகன்று போனது
மரநிழல்

4. போக்குவரத்து நெரிசல்
எரிச்சலைத் தரும்
யாசகர் கூட்டம்

5. வெட்டிய நகம்
புதைக்கப்படும்
நகப்பூச்சுக்கான பணம்

6. பல்வகை உணவு
உண்ண முடியாது
விளம்பர பதாகை

**மக்கொனை நிலா**





# எழிலே ஏலகிரியே

ஜெயஸ்ரீ எம்.சாரி,
சென்னை.

மக்கள் வாழும் பகுதியில் இருந்து மிக அருகாமையில் மலைப்பிரதேசத்தை பார்க்க விரும்புபவர்களின் விருப்பமான மலையாக ஏலகிரி மலை உள்ளது.

தமிழ்நாட்டில் கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக திருப்பத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள எழிலான ஏலகிரி மலை.

சுவாமிமலை, ஜவ்வாது மலை மற்றும் ஏலகிரி மலைத்தொடர்களால் சூழப்பட்டுள்ள இயற்கை வளம் செறிந்த மலை.

மொத்தம் 14 கிராமங்களால் சூழ்ந்துள்ள அழகிய மலைவாஸ்த தலமாய் ஏலகிரி மலை உள்ளது. வாணியம்பாடி சாலையைக் கடந்தவுடன் ஏலகிரி செல்வதற்கான சாலை ஆரம்பமாகி விடுகிறது. இயற்கை அன்னையின் இளையக் கன்னியாய் இருக்கும் ஏலகிரி மலைப் பாதை மனதைக் கவரும் விதமாய் அமைந்துள்ளது. மொத்தம் 14 கொண்டை ஊசி வளைவுகளுக்கு முறையே பாவேந்தர், பாரதியார், திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், கபிலர், ஔவையார், பாரி, காரி, ஓரி, ஆய், அதியமான், நள்ளி, பேகன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வகைவகையான, நீண்ட நெடிய மரங்களும், பள்ளத்தாக்குகளும் காண்போரின் கண்களுக்கு ஒரு அற்புதமான விருந்தாகிறது. கிராம மக்கள் இருசக்கர வாகனங்களில் 'சல்சல்லென்று' மலைப்பாதையில் பறக்கின்றனர்.

குரங்கினங்களும், அபூர்வமாக மயில்களும் மலைப்பாதைகளில் தெரிகின்றன. தமிழ்நாடு வனத்துறையால் மலையேறும், இறங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வேண்டுகோளாக 'குரங்கு மற்றும் பிற விலங்குகளுக்கு உணவு வழங்குவதைத் தவிர்க்கவும்' - என்று அங்கங்கு அறிவுப் பலகை வைக்கப்பட்டுள்ளது. ஆனால், நாம் தான் அதனைப் பின்பற்ற மறந்து (மறுத்து) நாம் பயணத்தில் கொறிக்கும் தின்பண்டங்களை விலங்குகளுக்கு கொடுத்துக் கொண்டே இருப்பது தான் ஒரே சாதாரணக் காட்சியாய் உள்ளது.

ஏலகிரி மலையில் பலாப்பழம், பப்பாளி, அன்னாசி, அத்திப்பழம், சீதாப்பழம், சப்போட்டா, மாம்பழம், ஸ்டார் ஃப்ரூட், ப்ளம்ஸ், மலை கொய்யா போன்ற பழங்களும், சுத்தமான மலைத் தேன், பலவிதமான மருத்துவ குணங்கள் கொண்ட தாவரங்களும், பட்டை,

பிரிஞ்சி இலையும் மிகுந்த நறுமணத்துடன் கிடைக்கின்றன.

ஏலகிரி மலையில் கம்பு, தினை, சோளம், வரகு, குதிரைவாலி, சாமை மற்றும் கேழ்வரகு போன்ற சத்தான சிறுதானியங்கள் விளைகின்றன.

இந்த மலைப்பிரதேசத்தில் உள்ள பழங்குடியினர்களை மலை ஆளு (அல்லது) மலையாளி என்று அழைக்கின்றனர். அவர்கள் பேசுவதும் தமிழ் மொழியே. சாதாரண மக்களைப் போன்றே தற்போது அவர்கள் வாழ்வியலை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்வியிலும், சமூக வாழ்வியலிலும் அவர்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர் என்று அங்குள்ள கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள கோயிலில் நம் பாரம்பரிய கலைகளை விளக்கும் விதமாய் பல சிலைகள் உள்ளன. திருவிழாக்களையும் மிகவும் பக்தி சிரத்தையுடன் மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். கிராம இளைஞர்கள் விலங்குகள் போன்று வேடமிட்டு பக்தர்களையும், சுற்றுலாவிற்கு வந்தவர்களையும் மகிழ்விக்கின்றனர்.



செயற்கையாக பல சுற்றுலாத் தளங்களை ஏலகிரியில் உருவாக்கி இருந்தாலும் இயற்கையின் மடியில் கிடைக்கும் இன்பத்திற்கு ஈடில்லை என்பதே உண்மை.

சூரிய உதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் இங்கு காண்பதே ஒரு அற்புதமான காட்சிகளாய் உள்ளன.

அமைதியையும், மன திருப்தியையும் தரும் எழிலான ஏலகிரியை 'ஏழைகளின் ஊட்டி' என்று கூறாமல் 'சாமான்யரின் ஊட்டி' என்று அழைப்பதே சாலச் சிறந்ததாகும்.



## காதல் ஓவியம் கண்டேன்

அகிலம் எங்கும் காதல் மொழி
படைத்தவனை வாழ்த்தும் படைப்பின் சிகரங்கள்

அன்பு ஒன்றே வாழ்க்கைப் புத்தகம்
நாமெல்லாம் அதில் வரும் ஓவியங்கள்

வாழும் காலத்தில் அன்பு செய்வோம்
இப்புவியில் ஆயிரம் கோலங்கள்

கண்கள் காணும் காட்சிகளும்
மனத்தில் தோன்றும் உணர்வுகளும்
வனப்பாய் இணைந்த வாழ்க்கை

காதல் மழையில் நனையும் பொழுதுகள்
வாழ்வின் நதியாக மாறும் நினைவுகள்

நெஞ்சத்தில் நீங்கா ஞாபகங்கள்
நாடிவரும் காலத்தின் தோற்றங்கள்

வாழ்வென்னும் பாதையில் பயணிக்கும்
எண்ணங்கள்
ஆழ்ந்த சிந்தனையில் வாழும் ஓவியங்கள்

காதல் விழியில் காணும் கனவுகள்
வாழ்வின் ஓட்டத்தைக் காட்டும் மாயங்கள்.
ஓவியங்கள் வழியே சொல்லும் இனிய
வண்ணங்கள்

குளோரியா ரூபா
சுவிற்சர்லாந்து



## செம்மணி...

சமாதான பேச்சை
சத்தமில்லாமல் அடக்கி
சதியால் மாண்ட
சாந்தமான உறவுகள்....!

சிங்களமென்ற கோஷமும்
ஸ்ரீலங்கா எமதானதென்றும்
சிந்தையில் வளர்க்கப்பட்ட
சாதி வெறியாட்டமும்....

சதைகள் வெட்டப்பட்டு
சங்கு நெரிக்கப்பட்ட
சல்லடையாக்கிய உடல்கள்
சொல்லொனா துயரமே....!

சாதிமத வெறியால்
சித்திரவதையில் நசுக்கி
சலுகையற்ற வேதனையில்
சமாதி யாக்கப்பட்டனர்....!

சரித்திரம் அழிக்கப்பட்டு
சொந்தங்களை தகர்த்து
சம்பாதித்துக் கொண்டது
சுயநல கூட்டமொன்று....!

சப்ரான் நஜீர்
வரக்காமுறை






# மன நிறைவில் ஒரு சொட்டு

நூல் :- உண்மையின் ஒரு பக்கம்
ஆசிரியர் :- மாஜிதா தவ்பீக்
வெளியீடு :- ஆவணக்காப்பகம். மருதமுனை
பக்கங்கள் :- 107 + xxviii
விலை :- 600/=
தொடர்பு இல :- 0770800589

உண்மை என்பது முழுமையானது, ஆனால் அதை ஒரே நேரத்தில் மனிதன் முழுமையாக உணர முடியாது நம் அனுபவம், பார்வை, சூழல், நம்பிக்கை போன்றவற்றின் அடிப்படையில் நாம் உண்மையின் ஒரு பக்கத்தை மட்டும் காண்கிறோம்.

"உண்மையின் ஒரு பக்கம்" என்ற தலைப்பு உண்மையின் பன்முகத்தன்மையையும், மனிதனின் பார்வை வரம்புகளையும் சுட்டிக்காட்டும் வலுவான கருத்தாக்கமாக அமைகிறது. உண்மைக்கு பல பரிமாணங்கள் உள்ளன நாம் காண்பது அதன் ஒரு பகுதியே என்ற சிந்தனையை நூல் முன்வைக்கிறது.

நூலில் இடம் பெற்ற முதல் கவிதையோடு வாசிப்பு பயணத்தை தொடர்ந்த எனக்கு இதற்கு முன்னரே நிலா மீது நிறைய பற்றுதல்கள் உள்ளது நானும் நிலாவை தேடி நிலா முகம் காண நிலாவின் பன்முகங்களை அடையாளப்படுத்தி கவிதைகள் எழுதி இருக்கிறேன்.

ஆனால் இங்கு நூலாசிரியர் நிலாவுக்கு நீண்ட ஒப்பனைகள் செய்கிறார் நிலாவை பாடுபொருளாக்கி நிலாவுக்கு வேறு வேறு பெயர்களை கூட்டுச் சேர்க்கிறார்.

கவிதை நிலாவை மையமாகக் கொண்ட கற்பனை மற்றும் உவமைகள் நயமாக அமைந்துள்ளது. "கற்பனையில் பருகும் நிலா - கற்கண்டுப்பாகு நிலா" போன்ற சொற்கள் இனிமையையும் படிம நயத்தையும் காட்டுகின்றன. சில இடங்களில் மீள்வினை அதிகம் இருப்பதால் ஓசை சற்று ஒரே மாதிரியாகும்.

அதன் சான்றுப் பொருளாக

'கற்கண்டுப்பாகு நிலா' - இனிமையின் வெளிப்பாடு.

'புத்தரையில் புகுந்த நிலா' - அமைதி மற்றும் ஆன்மீக ஒளி.

'பூமியில் முத்தம் பதித்த நிலா' - நேசமும் உணர்ச்சி நெருக்கமும்.

இதில் 'நிலா' என்ற சொல்லின் மீள் வருகை ஓசை இனிமையைத் தந்தாலும்,

அதன் ஓட்டத்தைச் சீர்செய்வது இன்னும் மெருகூட்டும்.

என்றவாறு அடையாளப்படுத்த முடியும்.

"யார் கவிஞன்" எனும் கவிதையில் கவிஞனை உழவனுடன் ஒப்பிட்டு சொற்கள் விதைத்து கவிதைகளை அறுவடை செய்பவராக சித்தரிப்பு சிறப்பாக அமைந்துள்ளது. "சொற்களின் பட்டறை" போன்ற உருவகங்கள் கலை நயம் கொண்டவை. எனினும் "பட்டறை" எனும் சொல் சற்று தொழில்சார் ஒலியைக் கொண்டதால், நெகிழ்வான உவமை பயன்படுத்தியிருக்கலாம்.

"பெண்கள் நாட்டின் கண்கள்" கவிதையில் பெண்ணின் பல அடுக்கான பண்புகளை "தாய் - தார - தாதி" எனும் திரிபட்சி அமைப்பில் அடக்கி சொல்லப்பட்டுள்ளது. இணைஒலி வரிகளை இனிமையாக்குகிறது.

வாசிப்பின் இடையே "தாயே எல்லாம் நீயே", "சித்திரைப் பெண்ணே", "தொப்புள் கொடி" போன்ற கவிதைகள் சமூக, உளரீதியான உணர்வுகளை எழுப்புகின்றன.

59-ஆம் பக்கத்தில் உள்ள 'என் தந்தை' கவிதை, பிரிவின் வலியைப் பேசுகிறது. தந்தையின் மரணத்தை விட, அவர் சிறுவயதிலேயே பிரிந்து சென்ற கசப்பான நினைவுகளை ஆசிரியர் முன்வைக்கிறார். அதன் இறுதியில்,

'மரமும் சொந்தமில்லை, அதன் இலை, பூ, காய்களும் சொந்தமில்லை...' என்ற வரிகள் வாழ்வின் நிலையாமையை எளிய சொற்களில் ஆழமான தத்துவமாக விளக்குகின்றன.

கவிதை பிரிவு.. கடமை.. சொந்தம் ஆகிய கருத்துகளை தத்துவ நயத்தில் முன்வைக்கிறது. இறுதிப் பந்தியில் "சொந்தம்" என்ற கருத்து இயற்கை வழி மறுக்கப்படுகிறது.

இந்த வரிகள் மற்றும் கவிதை தத்துவத் தேடல் என அடையாளப்படுத்தலாம்.

"எல்லாம் பொய்யே" போன்ற கவிதைகள் மெய் - பொய் இருதன்மையை நுட்பமாகப் பிரிக்கின்றன. "சித்திரவதை செய்யும் சித்திரமே" போன்றவை நாடோடி, கிராமிய இயல்பை எடுத்துக் காட்டுகின்றன.

'சித்திரவதை செய்யும் சித்திரமே': கிராமிய நாட்டார் வழக்குச் சொற்களுடன், புன்னகையின் மதிப்பைத் தேன் சுமந்த திராட்சையோடு ஒப்பிட்டு இனிமையாகப் படைத்துள்ளார்.

"சின்னவளின் புன்னகை தான் சில்லறைக்கு என்ன விலை" போன்ற வரிகளில் உவமை நயம் இனிமை தருகிறது ஆனால் இவை உடனடியாகப் புரியாத சிக்கலான உருவகங்களையும் கொண்டிருக்கிறது.

"சந்தனம் தவளும் சரசம்" கவிதை ஓசை நயத்துடன் இருந்தாலும் கருத்து ஓரிடத்தில் நிலைபெறாதது போல் தோன்றுகிறது.

எதுகை மோனைச் சிறப்போடு இருந்தாலும், கருப்பொருள் சற்றே குழப்பமாகத் தெரிகிறது.

"நோயை வெல்லலாம்" கவிதையில் சீனி நோயை அடையாளப்படுத்தி, காரணிகள், விளைவுகள் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களையும் முன்வைக்கிறது.

"கண்களுக்கு இதமான காட்சிகளை

காண்போம்...” போன்ற வரிகள் ஆரோக்கிய தத்துவத்தை சுட்டுகின்றன.

பின்வரும் கவிதைகள் நவீன வாழ்வியல் (“தொலைபேசி”, “புகையிலையின் கேடு” போன்றவை), தனிப்பட்ட சுயநிலை, மனித சமூக உறவுகள் போன்ற பல தளங்களை கையாளுகின்றன.

மொத்தத்தில், மாஜிதா தவ்பீக் அவர்கள் கற்பனை, இயற்கை, நீதிக் கருத்து, தத்துவம், உள உணர்வு, கிராமிய சொற்களாடல் போன்ற பல தளங்களில் இயங்கக்கூடிய கவிஞர். சில இடங்களில் நயப்பிரயோகங்கள் மிகச்சிறப்பாகவும் சில இடங்களில் கருத்து சுருக்கமாகவும் உள்ளன. இன்னும் அடர்த்தியான கவிதைச் செயற்பாடுகளுக்கான இடமும் இருக்கிறது.

கடைசியில், நூல் வாசகர் மனதில் பல்வேறு உணர்வுகளையும் சிந்தனைகளையும் விதைக்கிறது. நூலாசிரியரின் கவித்துவப் பயணம் மேலும் சிறக்க வேண்டும் என்பதே வாசிப்பின் ஆதரவு.

விமர்சகர் :எம்.ஜே. ஐவ்சன் அஹமட்
மருதமுனை - துணிந்தெழு சஞ்சிகை
இணையாசிரியர்.

---

# நினைவின் சாரல்...

(அந்தாதி கவிதை)

அன்பே உன்னில் கண்டேன் என்னையே
என்னை தந்தேன் உந்தன் நினைவிலே
நினைவிலே பூக்கும் வாடா மலர்களே
மலர்கள் சொல்லும் மௌன மொழிகளே
மொழிகள் இனிக்கும் நமது உறவிலே
உறவில் என்றும் நீயே அன்பே

பான்ஸ்லே.

# முதல் வெற்றி

முயற்சியுடன் தளராது முனைதலே வெற்றி!
முன்னேற வழியாகும் முதலாய் வெற்றி!
வாழ்க்கைப் பயணத்தில் சோதனைகளே பாடம்!
வாழ்ந்திடும் மனிதர்க்கோ தேர்வுகளே பீடம்!

பச்சிளம் குழந்தையைப் பார்க்கும் ஆவல்!
இச்செனக் குழவியை முத்தத்துடன் தழுவல்!
போன்றதோர் அனுபவமே முதல் வெற்றி!
போலவுண்டே யாவர்க்கும் முதலில் வெற்றி!

கிலுகிலுப்பைச் சத்தங்கள் கேட்டுச் சிரித்தே
கிளுகிளுப்பைக் கொள்ளும் மழலையாய் மாற்றும்!
சிலுசிலுக்கும் காற்றாய் நெஞ்சம் மயக்கும்
சிற்சில வெற்றிகளோ சிசுவாய் ஆக்கும்!

வாகையே சூடுவோர்க்கு வலியோ தெரியாது!
வராது வருவதால் தோல்வியோ தாங்காது!
முதல் வெற்றியே என்றென்றும் கிடைக்காது!
முதலிலே உணர்ந்தால் ஏக்கமோ வெறுந்தூசு!

தன்னம்பிக்கை தானே தலைமையாய் நடத்தும்!
நன்னம்பிக்கை தூண்டும் நாளும் முன்னேற்றம்!
முதிர்ந்த காய்களே முதலில் கனிந்திடும்!
முதிர்ச்சி எண்ணத்தால் மனமும் கனிவாகும்!

பக்குவம் மிகுந்தால் பாயாது அகமும்!
பக்கத்தில் இருத்தும் நிதானத்தை அணுக்கம்!
வெற்றியும் தோல்வியும் சமமாய்ப் பார்க்கும்
வெல்வதைத் தாண்டியே சமநிலை ஏற்கும்!

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.



# கல் நெஞ்ச இரவு

எல்லாம் தெரிந்த இரவிற்கு
எத்தனை விழிகள்
அந்த வழிகளுக்கு இமைகள் இல்லை
ஆந்தையின் உதவி அவசியமில்லை

இலை உதிர்வை கூட
எளிதாக அறிந்திடுமளவிற்கு
காதுகளை தரையில் வைத்திருக்கிறது
நிழல் படர்ந்த மரத்தின் துணையோடு

அந்த இரவிற்கு பசியில்லை தூக்கமில்லை
தன் இருளை ஏற்காது
விளக்கேற்றுபவரின் மீது மட்டும்
வெறுப்பு உண்டு

மழையால் நனைந்தாலும்
கரைந்துவிடுவதில்லை
வெயிலோடு போரிட்டாலும்
சிறு காயங்களுமில்லை
ஆனால்
கண்ணீர் கசங்கிய யாரோ ஒருவனின்
தனிமையில் நிரம்பும் பொழுது மட்டும்
இடியை பிடித்து தன்னையே செருகி
காயமாக்கிக் கொள்கிறது
இந்த கல் நெஞ்சக்கார இரவு....!

சே கார்கவி கார்த்திக்



# முதுமையில்லா வரம்

இயற்கையில் முதுமை இருப்பது நியதியே
இருப்பினும் இளமை வாழ்க்கையின் பகுதியே
உடலில் முதுமை வருகின்ற போதும்
உள்ளம் இளமையாய் முதுமையுடன் மோதும்

முருங்கை மரத்தை நோக்குவோ மென்றால்
முற்றும் அதன்பயன் விளங்கிடும் நன்றாய்
முறிந்து முறிந்தும் இளந்தளிர் வந்திடும்
முழுமையாய்த் தன்னை எமக்கே தந்திடும்

பூப்பதும் காய்ப்பதும் இளமையைப் பெற்றே
மூப்பது இன்றி இளமையைப் பெற்றே
காய்ப்பது இளந்தளிர் காம்புகள் நன்றே
கவனமாய்ப் பார்ப்பது கடமையில் ஒன்றே.

முருங்கை மரத்தில் கற்போம்நாம் பாடம்
வருமிடர் களைந்திடும்  வாழ்க்கையின் ஓடம்
வேர்முதல் விதைவரை பயன்தரும் தருவே
விரும்பியே எம்மை வாழ்வுக்கும் திருவே

இளமையாய் வளத்தை என்றுமே காப்போம்
இயன்ற உதவிகள்  எல்லோர்க்கும் செய்வோம்
அளவுடன் தேகத்தை அறிந்து வளர்ப்போம்
அதற்கான வரத்தைப் பெற்றுநாம் வாழ்வோம்.

ஆ த குணத்திலகம்

---

தமிழின் பணியில் ஓங்கும்
தங்க மகனை வாழ்த்துகிறேன்
அமிழ்தாம் இனிமை நல்கும்
அமினார் புகழைப் பாடுகிறேன்
இமிழும் குரலின் மொழியாம்
இதயம் அமர்ந்த தமிழ்நெஞ்சம்
உமிழும்  புலமை மிகவே
உயர்ந்தே ஓங்க வாழ்த்தொலிகள்

உடுவிலூர் கலா



தொடர் : 10

ரஸ்னா ரம்ஸான்
இலங்கை , அக்குறணை

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

ராகினி , அருணா, ப்ரியா, சாலினி அனைவரும் வெளியே வர அவினாஷும் அவர்களை ட்ரோப் பண்ணுவதற்காக பின்னே வர பிரியா ' சீக்கிரம் கிளம்பலாமா அண்ணா நீ ராகினிய வீட்ல விட்டுட்டு வீட்டுக்கு வா'

ராகினி' வாட் என்னால முடியாது

நா எதுக்கு அவர் கூட போகனும்

பிரியா' உங்க அக்கா ஒன்ன தேடுவாங்க அண்ணா கூட போனா ஏர்லியா போய்டலாம் நீ ரிஷாந்த் அண்ணா கூட வாஏனக்கூற

அஷ்வினுக்கு ஹோட்டலில் இருக்க முடியாது கிளம்பலாம் என வெளியே வந்தால் அவனின் கார் வேர்க் ஆகல அவனும் அவினாஷின் காரிலே ஏறப்போக அனைவரும் போக காரில் இடம் இல்லாததால் ராகினி ரிஷாந்துடன் போக வேண்டிய கட்டாயம்

ரிஷாந்த் ' மேடம் க்கு வார ஐடியா இருக்கா இல்லையா

எனக்கூறி பைக்கை ஸ்டார்ட் செய்ய

ராகினி ஏதும் பேசாது அவனை முறைத்த படி வந்து பைக்கில் ஏறினாள்.

அஷ்வின், அவினாஷ், பிரியா, சாலினி, அருணா ஒரு காரில் பயணித்தனர்.

அவினாஷின் கார் மெதுவாக நகர்ந்தது.

காரில் இருந்த மற்றவர்கள் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருக்க, அஷ்வின் மட்டும் ஜன்னல் வழியே வெறித்தபடி வந்தான். அவினாஷ் அஷ்வினி டம் பேச முனைய அவனோ தலை வலி யென்று பேச மறுத்து தன் கையில் இருந்த அந்த டாலரை இறுகப் பற்றிக்கொண்டான். அது வெறும் டாலர் அல்ல அது அவர்களின் காதலின் அடையாளம். அந்தப் பாதி இதயம் அவனிடம் இருக்கிறது, மறுபாதியும் இதோ இப்போது அவன் கையில்... ஆனால் அந்த இதயத்திற்குச் சொந்தக்காரியான ஐஸ்வர்யா எங்கே?

அவளை கண்டு பிடிப்பது சுலபம் என்றாலும் அவனின் பிடிவாதம் அதற்கு இடம் கொடுக்க வில்லை

மறுபுறம், ரிஷாந்தின் பைக்கில் ராகினி அமர்ந்திருந்தாள். இருவருக்கும் இடையே ஒரு நீண்ட மௌனம். ரிஷாந்த் அவ்வப்போது கண்ணாடியில் ராகினியைப் பார்த்தான். அவள் முகம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

'ஏய்... ஏன் ஒரு மாதரி இருக்க நா என்ன இறக்கி விட்றுவன்டு பயமா?' என ரிஷாந்த் வம்புக்கு இழுத்தான்.

ராகினி அவனை முறைத்தாள். 'உங்களைப் பார்த்து எனக்கு எதுக்கு சார் பயம்? இறக்கி விட்டா நா ஆட்டோ பிடிச்சி போய்க்குவேன் எங்க அக்கா சீக்கிரமா கிளம்பிட்டாங்களேனு கவல அவ்வளவுதான்.'

'உங்க அக்கா ரொம்ப ஸ்பெஷல்... அந்த ஹோட்டல் பெஸ்ட் செப் அஸ்வினே பாராட்டுனார்னா சும்மாவா? ஐஸ்வர்யா சமச்ச அந்த சிக்கனைச் சாப்பிட்டு அப்டியே அவர் ஆஃப் ஆகிட்டார் தெரியுமா?' ரிஷாந்த் சிரித்துக்கொண்டே சொன்னான்.

ராகினிக்குத் தன் அக்காவின் சமையல் திறமை பற்றித் தெரியும். ஆனால், அஷ்வின் அந்த உணர்ச்சிப்பூர்வமான மாற்றம் அவளுக்குப் புரியவில்லை. 'அக்காவுக்குத் திறமை இருக்கு ஆனா அதை வெளிப்படுத்த வாழ்க்கை அவங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கல,' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

ஐஸ்வர்யா தன் தோழி ஆனிஷாவை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தன் ஆருயிர் தோழியைப் பார்ப்பதில் அவளுக்குப் பெரும் மகிழ்ச்சி இருந்தாலும், ஆனிஷா கேட்ட அந்தத் 'துரோகம்' என்ற வார்த்தை அவளைக் காயப்படுத்தியிருந்தது.

'ஆனிஷா, நீயும் நானும் ஒண்ணா வளர்ந்தவங்க. உன்கிட்ட எதையும் மறைக்க விரும்பல. ஆனா, அந்தப் பெயரைச் சொல்லக்கூட என் நாக்கு கூசுது. எனக்காக உயிரையே கொடுப்பார்னு நினைச்சேன். ஆனா, கடைசியில் அவர் எனக்குக் கொடுத்தது ஏமாற்றம் மட்டும்தான்,' என்று ஐஸ்வர்யா தழுதழுத்தாள்.

ஆனிஷா அவள் கையைப் பற்றிக்கொண்டாள். 'ஐஸ், எனக்குத் தெரிஞ்சு அஷ்வின் அப்படிப்பட்டவன் இல்லையே... ஏதோ தப்பு நடந்திருக்கு.'

'வேண்டாம் ஆனிஷா! அஷ்வின் என்ற பெயரை இனி இந்த வீட்டில் உச்சரிக்காதே. ராகினிக்குத் தெரிந்தால் அவள் உடைந்து போவாள் சோ அவளுக்கு என் கடந்த காலம் தெரிய கூடாது.

அப்போது வாசலில் பைக் சத்தம் கேட்டது. ராகினி வந்துவிட்டாள் என்பதை உணர்ந்த ஐஸ்வர்யா, தன் கண்களைத் துடைத்துக்கொண்டு இயல்பு நிலைக்குத் திரும்பினாள்.

ரிஷாந்த் பைக்கை நிறுத்தியதும், ராகினி இறங்கினாள். 'தேங்க்ஸ் ,' என்று

சொல்லிக்கொண்டே அவள் உள்ளே நுழைய முற்பட்டாள். அதே சமயம் பின்னால் வந்த அவினாஷின் காரும் அங்கே நின்றது.

காரிலிருந்து அஷ்வின் முதலில் இறங்கினான். அவனது கண்கள் சற்று தயங்கினாலும் அந்த வீட்டை ஆராய்ந்தன. ஒரு சாதாரண ஓட்டு வீட்டின் முன்பகுதி, ஆனால் மிகவும் சுத்தமாக இருந்தது. ராகினி ஆச்சரியத்துடன், நீங்க எல்லாரும் இங்கே?' என்றாள்.

'ஆமா ராகினி, உன்னை விட்டுட்டுப் போக மனசு வரல, அதான் எல்லாரும் வந்தோம்,' என்றாள் சாலினி காரிலிருந்து இறங்கியபடி.

அஷ்வின் மெதுவாக அந்த வீட்டின் வாசலை நோக்கி நடந்தான். அவன் உள்ளுணர்வு ஏதோ ஒன்றைச் சொல்லத் துடித்தது. அவனது சட்டைப் பையில் இருந்த அந்த டாலர் துடித்துக் கொண்டிருப்பது போலவே அவனுக்குத் தோன்றியது.

'ராகினி... உள்ளே உங்க அக்கா இருக்காங்களா?' அஷ்வின் குரல் தழுதழுத்தது.

'இருக்காங்க ... வாங்க உள்ளே,' ராகினி அவர்களை வரவேற்றாள்.

உள்ளே நுழைந்த அஷ்வின், சுவரில் இருந்த ஒரு புகைப்படத்தைப் பார்த்தான். அது ராகினியும் ஐஸ்வர்யாவும் சிறுவயதில் எடுத்துக்கொண்ட புகைப்படம். அதைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தப் புகைப்படம்... அதில் இருப்பது ஐஸ்வரியாவே தான்

அதே சமயம், கிச்சனில் இருந்து காபி கப்களுடன் வெளியே வந்த ஐஸ்வர்யா, அங்கே நின்றிருந்த கூட்டத்தைப் பார்த்து உறைந்து போனாள். அவளது கையில் இருந்த தட்டு மெதுவாகக் கீழே நழுவியது.

அஷ்வினும் ஐஸ்வர்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். காலம் உறைந்து நின்றது. சுற்றியிருந்தவர்களின் பேச்சுகள் அவர்களுக்குக் கேட்கவில்லை.

(தொடரும்...)



# விடியல்

பரணி சுப சேகர்
மதுரை 17



ஒவ்வொரு விடியலும் ஒவ்வொரு பாடம். அது அனுபவத்தின் பக்கங்களாய், நமக்குள் தினமும் நகர்ந்து கொண்டே இருக்கிறது. படித்த அறிவின் தாக்கத்தை விட பட்ட அறிவின் வழியில் நித்தமும் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். நாம் சந்திக்கும் ஒரு சிலரால் நமக்குள் ஒருவித தாக்கம் உணர்கின்றோம். சிலரது தாக்கம் நமக்கு மகிழ்வாகவும் சிலரது தாக்கம் அதற்கு மாறாகவும். இதனால் கற்பனை மட்டுமின்றி சில கருத்துக்களும் நமக்கு கசப்பாகத் தோன்றுகின்றன. எதற்காக சில நினைவுகள் மட்டும் நம்மை தொடர்ந்தே துரத்துகின்றன. ஏன் சில எண்ணங்கள் மட்டுமே நம்மை மகிழ்வூட்டுகின்றன.

எதுதுரத்துகிறது? எது மகிழ்வூட்டுகிறது? எப்படி சொல்வது? மனதின் இன்னொரு பக்கம் நம்மை கட்டுக்குள் வைக்க முயன்று தோற்கும்போது அங்கே பயம் உருவாகிறது. இந்த தேவையில்லாத பயம் ஏன் வருகிறது? உணரப்பட்ட ஒன்றின் முழுமையை மனம் உணராததால் சந்தேகம் எழுகிறது. பட்ட அறிவும், பார்வையில் நின்ற சிலபல காட்சிகளும் உணர்தலைத் தொலைப்பதால் இப்படியாக இருக்குமோ என்ற எண்ணத்தை உருவாக்குவதால் பயம் அங்கே பயிராகிறது.

மனம் சலனப்படும்போது தேவையில்லா சிந்தனைகள் தேடி உறவாடுகிறது. காரணம் தெரிந்து கொண்ட விசயங்களை நாம் முழுமையாக தெரிந்து கொள்ளாது நுனிப்புல் மேய்ந்த கதையால் வந்த வினை. செயல் எதுவாயினும் அதற்கு வேறு யாரும் பொறுப்பு ஏற்க முடியாத போது மற்றவர்கள் பார்வையை ஏன் நமக்குள் திணித்துக் கொள்ள வேண்டும்?

பார்வை நம்முடையதாகவே இருந்தால் குழப்பம் இல்லை. மற்றவர்கள் கண்ணை அணிவித்துக் கொண்டால் தவறாகவே தெரியும். ஒரு செயலை யோசித்துச் செய்ய வேண்டும். செய்துவிட்டாமோ? முன்னேறி போய்க் கொண்டே இருத்தலே நலம். நம் மனதிற்கு நாமே எசமான். நமக்குள் எது உதயமாகிறதோ அதைத்தான் நம்மால் செய்ய முடியும். நம்மைச் சுற்றி ஆயிரம் கண்கள். அத்தனையும் நமக்கு ஒத்து வராத பார்வையைத்தான் கொண்டிருக்கும்.

ஒவ்வொன்றுக்குமாக நம்மை நாமே உடைத்துக் கொண்டிருந்தால் அடுத்த நகர்வுக்கு முன்னேற முடியாது. விளக்கம் சொல்வது வேண்டாத வேலை என உணர்ந்து பாதையில் போய்க் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொருவனும் இப்படித்தான் இருக்கிறான் என்ற நிலைப் பாட்டை விதைத்து விட்டு போய்க் கொண்டே இருந்தால் குழப்பம் குறையும்.

அவனவன் செயல் அவனவன் பார்வை. திருத்தம் தானாக வரும்.

தேடிப்போய் திருத்த நினைத்தால் தெருவில் தான் நிற்க வேண்டும். கர்மம் என்பது அவனவன் வாழ்க்கையிலேயே நடந்தேறும். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. களம் நாம் விதைத்த விதையாலே தான். பயிரோ, களையோ பக்குவமாயிருந்தால் பயிருக்கு சேதமில்லை. மனதே செயலைத் தீர்மானம் செய்யும்போது ஊரைப்பார்த்து சூடு போட்டுக் கொள்வதும் உபத்திரவம் தான். வந்தால் மகிழ்வு, இல்லையேல் பாடம். பாடங்களே நம்மைப் பக்குவப்படுத்தும்.

கலங்கியே காலத்தை விரயமாக்கினால் கடந்து போனவைகள் எல்லாம் கை கொட்டி சிரிக்கும். நின்று விடக்கூடாது. நின்று விட்டால் ஏறி மிதித்துக் கொண்டே இருப்பார்கள். நாம் இருந்த தடயம் கூட அழிக்கப்பட்டு விடும். துணிந்து எதையும் முன்னெடுத்தல் அவசியம். துவளாது செயலாற்றுவோம். வருவதை ஏற்றுக் கொள்ளும் மனநிலை தான் மகிழ்வின் முதல்நிலை. நடந்த வந்த பாதையைப் பார்க்காது நடக்க வேண்டிய தூரத்தை அண்ணாந்து பார்த்தால் தலை சுற்றும். அடுத்தவன் கால் கொண்டு நாம் நடக்க முடியாது.

முயற்சி நம்முடன் பயணிக்கும் போது தூரம் தொலைவில் இருக்காது. முடியும் என்று நம்பி கடமையைச் செய்வதே முன்னேற்றத்தின் ஒளி. முடிக்க வேண்டுமே என்று கடமைக்காக செய்யாது முடித்து விட்டேனே என்ற மகிழ்வு தான் நல்ல தொடக்க மாகும். முயற்சி யுடையவனை காலம் கை விடுவதில்லை. கலங்காது முன்னேற, கனவுகள் கட்ட விழும். காட்சிகள் மாறும். விமர்சனங்கள் கூட வித்தியாசமாய் வரும். ரசித்தல் நலம். புன்னகையால் கடந்து செல்வோம். பொருளுரைத்து காலத்தை வீணாக்காது கடமையை எண்ணிப் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

எதுவும் காரணமின்றி நடப்பதும் இல்லை. மனமே விடியலுக்கு வாசல். மனதைத் தொலைக்காது கவனமாய் அடிவைத்தால் ஒவ்வொரு விடியலும் நன்றாகவே அமையும். மற்றவர்கள் நம்மைப்பற்றி விமர்சனங்கள் வைக்கலாம். துவண்டு விடக்கூடாது. விமர்சனங்கள் நம்மைப் பாதிக்காதவாறு மனதை கட்டில் வைக்க வேண்டும். யாரும் இங்கே சுத்தமான தங்கமில்லை. உணர்ந்தால் போதும். சில நேரங்களில் நாம் தவறு செய்திருக்கலாம். அதை பெரிதாக்கி நம்மைவிட்டு விலகினால் போகட்டும்.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏன் நகர்ந்தது எப்படி நடந்தது என தன்னைத்தானே கேட்டுக்கொள்ளாத வர்களின் கேள்வியறியா பதிலுரைகளால் தவிப்பை உண்டாக்கியவர்களைத் தாண்டிச் செல்லும் நிலையை நாம் உண்டாக்கிக் கொண்டால் விடியல் விடியலாகவே இருக்கும்.



# Dr ஜலீலா முஸம்மில் கவிதைகள்

1

நீ விசிறுகின்ற
இதயத்திற்காகவே
இத்தனை காத்திருப்பும்
தொடுதிரையில்
விழித்திருக்கும்
ஆன்மப்பசி!

2

உன் கொல்லும் நேசத்தில்
நாளும் சாகிறேன்
அதனால்தான்
உயிரோடும் இருக்கிறேன்!!

3

பிடி தளர்த்தவும்
இறுக்கவும்
இளகிப்பழக்கும்
இயல்பென்பது
இல்லவே இல்லை
அன்பில்..



4

காதலாய்
அல்லது
காயமாய்
எப்படியாகிலும்
உயிர் குடிக்கிறது
உன் ஒற்றை வார்த்தை!

5

கோபித்துக்கொண்டு
கண் காணா தூரம் போய் விட
எண்ணினாலும்
கணத்தில் அதைக்கைவிட்டு
உன்
கன்னமுரசுகிறது
இந்தக்காதல்!!



6

பார்த்து பிரிவதை விட
பிரிவதை செவித்துக்கொள்வதில்
கொஞ்சம் பரவாயில்லை,
பிரிதலின் வலி!

7

காலம் காயமாற்றவில்லை...
காதல்தான் காயமாற்றியது,
நீ கைவிட்ட பின்னும்!

8

உன் சொற்களோடு
சிலிர்த்துக் கிடந்த,
உன் நேசத்தோடு
லயித்துக் கிடந்த,கனவுகளில்
கண்களை விசிறி எறிந்தேன்
பகரமாய் உன்னிரவுகளை
விழிகளில் நுழைத்தேன்
நீளும் காலச்சோகையைத் தணிக்க
கணங்களில்
நிரந்தரமாய் அமர்ந்து கொண்டாய்
மீதமின்றி!

9

காரணம் கேட்காதே
உன்னோட பேசுவதென்றால்
அவ்வளவு விருப்பம்

காரணம் கேட்காதே
உன்னோடு அளாவிச் சிரிப்பதென்றால்
அவ்வளவு கிறக்கம்

காரணம் கேட்காதே
உன்னோடு பேசப்பேச
நந்தவனங்கள் திறக்கும்

காரணம் கேட்காதே
உன்னை நினைப்பதென்றால்
அமிர்தத்தேன் சுரக்கும்

காரணம் கேட்காதே
உன் சொற்கள் செவிமடுப்பதென்றால்
பிரபஞ்சம் என் கையில் இருக்கும்!

10

மழையுதிர
மலருதிர
இலையுதிர
இறகுதிர
அலையுதிர
நிலவுதிர
இரவுதிர
பகலுதிர
கலியுதிர
வலியுதிர
கனவுதிர
கணமுதிர....
நினைவுகளுக்கு மட்டும்
ஏனிந்த அடம்!!



11

ஏன் வந்தாய்
எப்படி சேர்ந்தாய் என
எத்தனையோ கேள்விகள்?
விபத்தென்று என்னால்
கூற முடியாது
விதியென்றும் யான் சொல்லேன்
வானவில்லென்றும்
வசந்தமென்றும்
மழையென்றும்
காற்றென்றும் வேண்டுமானால்
சொல்லிக் கொள்கிறேன்
ஏனெனில்...
உன் நேசம்
மெய்யிலும் மெய்யாக
இருக்கும் என்று
நம்பி விட்டேன்..!



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# சிறகுகள் சிறைபடுவதில்லை

## 26.தம்பியின் திருமணம்

யாரும் தானாக முன்வந்து அவருடைய பங்குப் பணத்தைத் தர முன்வரவில்லை...

சந்திரனும் கேட்கவில்லை...

சந்திரனின் மூன்றாவது தம்பியின்

திருமணம் வந்தது...

அப்போது கயல் நிறைமாதக் கர்ப்பிணி மூன்றாவது குழந்தை!

தம்பிக்கு மிகப் பெரிய இடத்தில் பெண்வந்தது..

பெரியப் பண்ணை இல்லாமல் முதல் கல்யாணம்.

மிக அமோகமாக நடந்தது.

சனார்த்தனர், அவரின் மனைவியும் மிக அருமையாக செய்தார்கள்.

அந்தத் திருமண வைபவத்தில் மாப்பிள்ளை ஊர்வலம் புறப்படும் நேரத்தில் கயலின் மூன்றாவது மகள் வசந்தி பிறந்தாள்.

குயில்.மு.இரசியா பேகம்



வீட்டுக்கு முதல்பிள்ளை சனார்த்தனர் தன் கடமையிலிருந்து சிறிதும் குறையவில்லை.

இப்போது அவர் தனக்கென்று வீடுகட்டி புது வீட்டில் குடியிருந்தார்....

பழைய வீட்டினரின் எல்லாப் பொறுப்பும் அவரிடம்தான்...

சந்திரன் இது வரை பல வாடகை வீட்டில் இருந்து விட்டு முதல் முறையாக அண்ணனிடம் தஞ்சை சீனிவாச புரத்திலுள்ள பங்களாவில் தான் குடிப்போவதாக சொன்னார்.

சனார்த்தனர் அம்மாவுடன் சென்று தனது தம்பியை அந்த வீட்டில் குடி வைத்துவிட்டு வாழ்த்தி வந்தார்.

பானுவும் மருமகளைத் தனியே விட மனமில்லாமல் அவருடனே தங்கி விட்டார்.

மருமகளைக் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டார்.ஆனால் கயலுக்கு மட்டும் தாய் வீட்டுத் தேடல் தாங்க முடியாத ஏக்கமானது.

அம்மா,அப்பா,தம்பி,தங்கைகள் என்ற ஏக்கம் உயிரைத் தின்ன ஆரம்பித்தது.

## வசந்தி

ஒருநாள் நான் செக்கடித் தெருவழியாக நடந்துக் கொண்டிருக்கிறேன்...

அங்கே

அது தாழ்வான நுழைவாயில் கொண்ட ஒரு ஓட்டு வீடு

வாயிலில் திரைச்சீலை தொங்கியது. பழைய சேலைத்துணியில் தைத்தது.



ஆகா நான் தேடிக் கொண்டிருந்த வீடு

என் அம்மாவை தொலைத்த இடம்..

யோசிக்கவில்லை உள்ளே நுழைந்துவிட்டேன்...

யாரது என்று ஒரு பாட்டி பார்வை குறைவினால் கையை நெற்றியின் மேல் வைத்து ஒளிக் கூட்ட முயன்ற வண்ணம் கேட்கிறாள்..

நான் வசந்தி என்றேன்..

எனக்கு வெத்தலை பாக்கு வாங்கித் தருவாயா? என்றார்.

சரி என்று வெளியில் வந்து வெத்தலைப் பாக்கை வாங்கிக் கொண்டு படபடப்பாக ஓடினேன்...

இந்தாங்க பாட்டி என்று கையில்

கொடுத்தேன்...அக் கிழவி தன் காது தோளில் இடிக்க பாம்படம் அணிந்திருந்தார்.

நெற்றியில் பொட்டு பச்சை குத்தபட்டிருந்து..

பாட்டி என்றேன் சொல்லுக் கண்ணு யாரும்மா நீ என்றார்?

கயலின் மூன்றாவது மகள் என்றேன்

எந்தக் கயல்?

பெரியப் பண்ணை வீட்டு வக்கீல் சந்திரனின் மகள் என்றதும்

பாம்பைக் கண்டது போல் விதிர்விதிர்த்துப் போனார்...

அம்மாடி என்று அரட்டி அழுதார்.

அமைதிப்படுத்தினேன்.

எனது அம்மா எங்கே பாட்டி ?என்றேன்

உங்க அம்மா என்னிடம் வந்து உனக்குப் பின் உண்டான மூன்று மாதக் கருவை கலைக்கச் சொன்னார்

இது தற்கொலைக்கு சமம் என்றேன்

கேட்கவில்லை. அழுது மன்றாடி அந்தக் காரியத்தை என்னைச் செய்ய வைத்தாள்

இன்று வரை அந்தக் குற்றக் காரியத்துக்கு பாவமன்னிப்பு இறைவனிடம் கேட்கிறேன்..

ஏதோ பிசகாக இரத்தம் ஓட ஆரம்பித்தது..

வெலவெலத்துப் போய் உங்கவீட்டுக்கு ஆளனுப்ப உங்கப்பா வருவதற்கு முன் காரியம் கை மீறிப் போனது .

உங்கப்பா வந்தப் போது கயலுக்கு இசுவு (வலிப்பு) வந்து விட்டது .

கடைசியாக அவள் சொன்னது' 'அப்பா அம்மா என்னை மன்னித்து விடுங்கள்'

அவள் மீண்டும் சிறகடித்துவிட்டாள்..

எனக்கு கண்ணீர் கண் மறைத்தாலும் ஓர் காட்சி விரிகிறது ...

கொல்லிடம் ஆறு மூன்று குழந்தைகளையும் குளிக்க வைத்தவண்ணம் சந்திரன்.

குளித்தப்பின் தனது மகனை கரைக்கழைத்துப் போகிறார், பின்னர் நடுமகளை ,வசந்தி தனியாக நீரில் அலறி அழுகிறாள்..

சந்திரன் ஓடி வந்து தூக்க

வசந்தி விசும்பிக் கொண்டே கேட்கிறாள்

அம்மா மாதிரி நீங்களும் என்னை விட்டுவிட்டு போய்விடுவீங்களாப்பா?

கண்கள் இரத்தமாக சந்திரன் நிச்சயமாக மாட்டேன் என்று சொல்லி

கண்ணீரை கண்ணிலடக்கி மகளை தோளில் சுமந்து நடக்கிறார்...

(அங்கே தோப்பில் அரூபமாக கயல் முணுமுணுக்கிறாள் உங்களால் மட்டுமே முடியும்..

என் குழந்தைகளை உங்களால் மட்டுமே நல்ல முறையில் ஆளாக்க முடியும். என்று சொல்லி தாயுமானவராய் நடைபோடும் சந்திரனை ஏக்கத்துடன் பார்க்கிறாள்..

அவள் கண்களில் கண்ணீர் உருண்டோடுகிறது...

என்னை மன்னித்துவிடுங்கள் சந்திரன் என்கிறாள்..

அன்றொருநாள் தன் தந்தையிடம் அம்மா எங்கே என்று கேட்டதற்கு தன் மூக்கை அப்பா காட்டினார்..

ஆம் அம்மா காற்றாகி அவர் நாசியில் நுழைந்துவிட்டாள்.

அம்மா உன்னை தேடி இன்றும்கூட

காற்றை துழாவிக் கொண்டு இருக்கிறேன்.

அம்மா நீ இருந்திருந்தால் கூட இவ்வளவு நன்றாக வளர்ந்திருப்பேனா என்று தெரியவில்லை.

அப்பா தாய்க்கும் மேலாக தன் குழந்தைகளை வளர்த்தாரம்மா!

ஆனாலும் நீ அப்பாவுக்கு இவ்வளவுப் பெரிய தண்டனை கொடுத்திருக்கக் கூடாதம்மா ..

பெண்கல்வி மிகமிக அவசியம் அதுமட்டும் போதாது..

தன் காலில் நிற்பது அதைவிட அவசியம்

மற்றவர் எதை வேண்டுமானாலும் செல்லட்டும்

தன்னம்பிக்கையும்

சுய சிந்தனையும்

சுதந்திர செயல் பாடும்

கல்வியும் வேலையும் மட்டுமே பெண்ணுக்கு நம்பிக்கையும்,தன்மேல் தனக்கே மரியாதைக் கொடுக்கும்...

தன்னை தானே விரும்பி இருந்தால்..

புவனா மற்றும் கயல் மடிந்திருக்க மாட்டார்கள் .

தன்னையும் தன் குடும்பத்தையும் நிர்வகிக்க தன்னால் மட்டுமே முடியுமென்று நினைப்பு இருந்தால்..

கயலுக்கு மற்றவர்களெல்லாம் துச்சமென்ற நிதர்சனம் புரிந்திருக்கும்..

இந்தக் கதையும் பிறந்திருக்காது....

முற்றும்

# கறுப்பு

காடுகள் மலைகள் உள்ளே கறுப்பு!
அண்ட சராசரம் அனைத்தும் கறுப்பு!
அச்சில் காண்பது அதுவும் கறுப்பு!
தீட்டும் மையின் நிறமும் கறுப்பு!

உலக மனிதர்கள் அதிகம் கறுப்பு!
கண்ணின் கோல விழிகள் கறுப்பு!
கவிமொழி மங்கையர் கூந்தல் கறுப்பு!
விழிகள் இமையா நிலையும் கறுப்பு!

பேய்கள் இருந்தால் வசிப்பிடம் கறுப்பு!
சோக நிலையைச் சொல்வதும் கறுப்பு!
சோற்றின் (உ)ருசியில் கடுகும் கறுப்பு!
திருடர்கள் விரும்பும் நிறமும் கறுப்பு!

பூமியில் புதையும் பொருள்கள் கறுப்பு!
இரும்பின் ஆதி நிறமும் கறுப்பு!
பாறைகள் பொதுவாய் இருப்பது கறுப்பு!
கடவுளின் நிறமாய்ச் சொல்வது கறுப்பு!

வானவில் ஏனோ மறுப்பது கறுப்பு!
(உ)ருசிக்கும் காந்தல் காண்பது கறுப்பு!
கருமையை மறுத்தே வெளிச்சம் தோன்றும்!
பார்வை இதுவே சொல்லுதல் சரிதான்!!!

**சிவசு-மணியன்**

- இலக்கணம்

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்
(தொல்காப்பியம் 2-8-75)
நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப
(தொல்காப்பியம் 2-8-76)

- இலக்கியம்

கறுத்து வந்தார்
(இளம்பூரணர் உரை மேற்கோள்)
உடம்பு கறுத்தது
(இளம்பூரணர் உரை மேற்கோள்)

# முனைவர் சு.சோமசுந்தரி அவர்களுடைய ‘சில்லாட்டை’ - சிறுகதை நூல் திறனாய்வு

**- பழனி.சோ.முத்துமாணிக்கம்**

எழுத்து என்பது மாபெரும் தவம் என்ற உணர்வோடு எழுதத் தொடங்கிய முனைவர் சு.சோமசுந்தரி அவர்கள் ‘எழுத ஆரம்பித்த பிறகுதான் எனக்கான வெளி திறந்ததுபோல் உணர்ந்தேன்... எனக்கான சிறகுகள் விரிய ஆரம்பித்தன‘ என நெகிழ்ந்து கூறுகிறார். ‘விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச் சிட்டுக் குருவியைப்போல’ என்று பாரதியை நினைவு கூர வைக்கின்றார்.



இன்னும் பெண்களுக்கு விடிவு வரவில்லையே என்ற குரல் சில்லாட்டை கதைத் தொகுப்பு முழுவதும் கேட்கிறது. பெண்கள் ஆண்களால் உடைந்துபோன கலசங்கள் என ஆதங்கப்படுகின்றார். இன்னும் இந்த உலகம் ஆண்களுக் கானதாகவே இருக்கிறது. துறைதோறும் பெண்கள் கோலோச்சி நின்றாலும், அவர்கள் ஆண்நரிகளால் பலிகடாவாகவே பார்க்கப்படுகின்றார்கள்.

கண்முன் நடக்கும் அவலங்களைப் படம்பிடிப்பதே ஒரு படைப்பாளியின் முதன்மை நோக்கம். வகைவகையான பெண்பாத்திரங்களைப் படைத்து அனைத்துப் பெண்கள் உள்ளத்துள்ளும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து அவர்கள்தம் விருப்பங்களை, ஏக்கங்களை, தவிப்புகளை, சிறுமைகண்டு பொங்கும் சீரிய குணங்களை, திருமணத்துக்குப் பின் பிறந்தகத்தை மறந்து, பெற்றோரை மறந்து, எல்லாவற்றுக்கும் மேலாகப் போற்றப்படும் நட்பு பாராட்டிய தோழிகளை மறந்து ஆட்டுவிக்கப்படும் நிலைமைகளை மிக அழகாக ஓவியமாக்கியிருக்கிறார் ஆசிரியர்.

இயற்கையின்மேல் ஆசிரியர் கொண்ட நேசம் நம்மை விழியுயர்த்த வைக்கிறது. தொல்காப்பியம் சொன்ன “நிலமும் பொழுதும்“ கதைகளோடு பின்னிப் பிணைந்து காப்பியச் சாயலைக் காட்டுகின்றன.

அந்திமந்தாரைப் பூக்கள், அந்திவானச் சிவப்பு, தவிட்டுக் குருவிகள் தாலாட்டும் மாலை இருவாச்சிப் பூக்கள் மலர்ந்து பறவைகள் கூடுதேடும் மாலை என மாலையை ஓவியமாக்குகிறார். அக்காக் குருவிகளின் அக்கூவ் சத்தத்தில் இவருடைய அதிகாலை விடிகிறது; அந்த இனிய காலைப்பொழுதினை மருதாணிப் பூவும் அடுக்குமல்லியும் மணம்வீசி வரவேற்கின்றன.

காய்ந்துபோன கண்மாய் பாளம் பாளமாய் வெடித்திருப்பதைப் போல சில மனித மனங்கள் ஈரமின்றி இருப்பதைச் சுட்டி வருந்துகிறார். பூங்கொடியின் மனநிலையைச் சொல்லும்போது “அவளது நினைவுகளும் அடுக்களை வெப்பத்தி லேயே மடிந்து போகின்றன’’ என்று வாயிழந்த பெண்களின் குரலாக ஒலிக்கிறார்.

இவருடைய சங்கமி வீடு-வேலை என மாறி மாறி ஓடிக்கழியும் வாழ்க்கையில் தன் ‘பூ பூக்கும் தருணம்’ கவிதைநூலை வெளியிடும்போது ‘குழந்தையின் உடலை முதன்முதல் தீண்டியதுபோல்’

உணர்கின்றாள். இப்பெண் சங்கமியா இல்லை சுந்தரி மணியனா என வியந்து போகிறோம்.

தான் மறைந்துவிட்டால் கணவன் சிரமப்படுவானே என்பதால் தனக்கு முன்னே அவர்போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்று விரும்பும் பலகோடிப் பெண்களின் குரலாக ஒலிக்கிறாள் சொர்ணம். கல்லூரியில் படிக்கும்போது ஆசிரியர்மேல் கொண்ட காதலைச் சொல்லாமலே மனதுக்குள் பூட்டி வைத்த நிறைமதிமேல் நமக்கு இரக்கம் வரவில்லை; ஒருதலைக் காதலால் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டாளே என்ற சினம்தான் வருகிறது.

காதலித்துக் கைப்பிடித்த கணவன் மதியழகன் எந்தப் பொறுப்புமில்லாமல் தன் உழைப்பை உறிஞ்சி வாழ நினைப்பதை எண்ணி வருந்திய கமலிகா, அவனை மணவிலக்குச் செய்துவிட்டு மகனுடன் புறப்படுவதை ஓவியமாக்கி இருக்கிறார் ஆசிரியர் ‘சில்லாட்டை’ என்ற கதையில். இணக்கமின்றிக் கொத்தடிமையாய் வாழும் எண்ணற்ற மகளிர்க்கு இக்கதை ஒரு வழிகாட்டி.

மனிதன் பூக்களை அதன்போக்கில் விடுவதில்லை என்று ‘ரோல்மாடல்’ கதையில் சுந்தரிமணியன் சொல்வது பூக்களைப் பற்றியா? இல்லை பெண்மைப் பூக்களையா? பள்ளத்தில் வீழ்ந்த நாய்க்குட்டிகளை கவின் மீட்கும்போது நெஞ்சு துடித்துக் கொண்டே இருந்தது.

பாட்டிக்கும் பேத்திக்கும் உள்ள பாசப்பிணைப்பைப் படம்பிடித்த ‘நீர்த்துப் போகாத நினைவுகள்” நம்மை நெகிழவைக்கும். மலரும் நினைவுகள் என்றுமே இனிமையானவைதானே!

தான் பார்த்த, கேட்ட, உணர்ந்த நிகழ்வுகளை உள்வாங்கி ஓவியமாய்ப் படைத்த கதை ஆசிரியர், இலக்கிய வானில் இன்னும் மேலாகப் பறக்க வேண்டும்.

“என் பெயர் மலாலா” என்ற நூலில் “என் சிறகுகளை வெட்டாமல் பறக்க அனுமதித்த பெற்றோருக்கு நன்றி“ என பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா குறிப்பிட்டு இருப்பார். அதுபோலவே சுந்தரி மணியனின் சிறகுகளை வெட்டாமல் பறக்க அனுமதித்த அவருடைய பெற்றோருக்கு நன்றி.

ஆசிரியர் இதுபோல் படைப்புப் பலபடைத்துத் தமிழுலகை ஆள வாழ்த்துகிறேன்.



# மௌன மொழி

என் அன்பும் அரவணைப்பும்
உன் கரங்களில்
மதிப்பிழந்த நாணயங்கள் போல
சத்தமின்றி விழுகின்றன.

என் மொத்தக் காதல்
உனக்குச் சுமையாய்,
தேவையற்ற சுமையாய்
ஒரு மூலையில் வைக்கப்படுகிறது.

உனக்கு என்னிடம்
தேவை எதுவும் இல்லை ...
மன்னிப்பும் வேண்டாம்,
கெஞ்சலும் வேண்டாம்,
ஒரு கொஞ்சலும்
என் பாக்கியத்தில் இல்லை.

மன்னிப்பும், கெஞ்சலும், கொஞ்சலும்
என் அடையாளம் இல்லை.
அவை நான் இழந்ததை அல்ல,
நான் துறந்ததை
சொல்லும் சொற்கள்.

இங்கே எல்லாம் மாறியிருக்கிறது;
மாறாதது ஒவ்வொரு முறையும்
பேதையாய் மாறும்
நான் மட்டும் தான்.
என் நெஞ்சில் தேங்கிய கனத்தை
என்னைத் தவிர
யாராலும் சுமக்க முடியாது.

அதிர்ஷ்டமற்றவளின்
உறுதியான சுமை அது.
உன்னிடத்தில் உணவும்
உறைவிடமும் கிடைப்பதே பெரிது என்றால்
மரியாதை எந்த அறையில் தங்கும்?

என் தராதரத்திற்கு அவமானமும்
அவச்சொல்லும் தான்
நிரந்தரத் துணை.

ஒவ்வொரு முறையும்
என் அன்பையும் காதலையும்
உன்னிடத்தில் புலம்பியும்,
நியாயப்படுத்தியும்
நான் தோற்றே போகிறேன்.

"இவையெல்லாம் பொய்" என்று சொல்லி
என்னை ஏமாற்ற
இன்னும் எதுவும் இல்லை.

என் காதல் உனக்குச் சலிப்பு.
உன் காதல் என் மனதிற்கு ஏக்கம்.
இது காலம் செய்த கோலம் அல்ல;
இது நான் தினமும்
மௌனமாகத் தோற்கும்
ஒரு கதை.

அனுத் பாஹிம்
இலங்கை




புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்

வாசகர்களுக்காக..

# வலிமைமிகு எண்ணங்கள்

( கட்டுரைத் தொகுப்பு )




**தொகுப்பாளர்கள்:**

**தமிழ்நெஞ்சம் அமின்**

**அன்புச்செல்வி சுப்புராஜு**

**பக்கங்கள்: 480.** **விலை: 4X0**

**உங்களுக்காக: ரூ380/- மட்டுமே.**

அஞ்சல் செலவு: உங்களுக்காக நாங்கள்

**வேண்டுவோர் தொடர்பு கொள்க**

**Gpay: 8946082893**